# புதிய பரிமாணம்



புலோலியூர் க. சதாசிவம்

அன்புடன்:
இனிய நண்பர், தெணியான்
அவர்கட்கு
புலோலியூர். க.சதாசிவம்
27-7-01

# புதிய பரிமாணம்

புலோலியூர் க. சதாசிவம்

முதற்பதிப்பு : டிசம்பர் 1998
உரிமை : திருமதி லட்சுமி சதாசிவம்
கலையகம், புற்றளை, புலோலி.

# PUTHIYA PARIMANAM

(A Collection of Short Stories)

BY

PULOLYOOR K.SATHASIVAM

**DR. K. SATHASIVAM (R.M.O.)**
**DYRAABA ESTATE,**
**BANDARAWELLA**

**First Edition : December 1998.**

**Printed by :**
**Mercury Printing Works**
**No.339A, Main Street,**
**Bandrawella.**
**Tel: 057-23554**

**PRICE :- Rs 120/-**

# பேராசிரியர் சி.தில்லைநாதன்
# (தமிழ்த்துறைத் தலைவர்
# பேராதனைப் பல்கலைக்கழகம்)
# அளித்த
# அணிந்துரை

“மனிதாபிமானம், மனிதநேயப் பண்புகள் போன்றவற்றின் மூலமே புரிந்துணர்வை அடைலாம். இதற்கு ஓர் இனத்தின் மன உணர்வுகளை, ஆசாரங்களை, பிரச்சினையின் தாக்கங்களை மனிதநேயத்துடன் மற்ற இனம் நோக்கும் வழிகள் தோன்ற வேண்டும். தோற்றுவிக்கப்படவேண்டும். இதனைத் தொடர்பு சானதங்கள், கலை இலக்கியங்கள் செய்யலாம். ஆனால் இன்று நிலை எதிர்மாறாக இருக்கிறது.தொடர்பு சாதனங்கள் இடை வெளியை அதிகரிக்கின்றன. இனரீதியாக எதையும் நோக்கி, சந்தேகக் கண்ணோட்டத்துடன், பகையுணர்வுடன் பார்க்கத் தூண்டும் வகையிலேயே பத்திரிகைச் செய்திகள் பிர சுரிக்கப் படுகின்றன, அரசியல் கட்டுரைகள் அமைகின்றன.”

‘தீருமா’ என்ற கதையில் நடராசா பேசுவதாக அமைந்த இப்பகுதி, புலோலியூர் க. சதாசிவத்தின் அனுபவத்தையும் அவதானத்தையும் அபிப்பிராயத்தையும் மட்டுமன்றி, எத்தகைய

நோக்கங்களுடன் அவர் இலக்கியங்களைப் படைக்க விழைகிறார் என்பதையும் எடுத்துக்காட்டுவதாகும். உலகின் பல்வேறு பிரச்சினைகளுக்கான அடிப்படைக் காரணம் செம்மையான புரிந்துணர்வு இல்லாமையே என்பர். ஒருவருடைய பிரச்சினைகளை அவருடைய நிலையிலிருந்து நோக்கினாலன்றி, இன்னொருவரால் புரிந்துகொள்ள இயலாது. ஒவ்வொருவர் பிரச்சனைகளை அவரவர் நிலையிலிருந்து உணர்ந்துகொள்ளவும் புரிந்துகொள்ளவும் உதவத்தக்கன இலக்கியங்களாகும். மனிதவாழ்வை அக்கறை யுடன் அவதானிக்கும் ஆற்றல்மிக்கச் சிருஷ்டிகர்த்தாக்களின் வெளிப்பாடுகளால் அவ்வாழ்வுக்கு அழகும் ஒளியும் சேர்க்க முடியும்.

அமைதியாக வாழவேண்டுமென்ற விருப்பு எல்லா இனங்களையும் சேர்நத பெருவாரி மக்களிடம் மேலோங்கி இருக்கிறதென்பதில் ஐயத்துக்கு இடமில்லை. என்றாலும், இன்று ஏராளமான மக்களின் மரணங்களுக்கும் அங்கவீனங்களுக்கும் அகதிநிலைகளுக்கும் இனத்துவ முரண்பாடுகளும் மோதல்களும் காரணமாகியுள்ளன. இந்நிலை மாற வேண்டும், மக்கள் யாவரும் மண்ணில் நல்லவண்ணம் வாழவேண்டும் என்ற உணர்வினால் உந்தப்பட்டவர்களுள் ஒருவரான புலோலியூர் சதாசிவம் எழுத்தாற்றல் கொண்டவராகையால், பதவிமோகமும் சுயலாப வேட்கையும் கொண்டவர்களால் தூண்டப்படும் அச்ச, சந்தேக, பகை உணர்வுகளைப் போக்கி, புரிந்துணர்வை வளர்க்க இலக்கியத்தை அவர் ஊடகமாகக் கொள்கிறார்.

யாழ்ப்பாணம் புலோலியிலுள்ள புற்றளை என்ற கிராமத்தைச் சேர்ந்தவரும் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக மலையகத்தில் வைத்தியத் தொழிலில் ஈடுபட்டுள்ளவருமான க. சதாசிவம் எழுத்துலகில் புகுந்து சுமார் நான்கு தசாப்தங்கள் ஆகின்றன. மூன்று சிறுகதைத் தொகுதிகளையும் இரண்டு நாவல்களையும் அவர் ஏலவே வெளியிட்டுள்ளார். சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன் அவர் வெளியிட்ட நூலொன்றுக்கு எழுதிய

விமர்சனத்தில், "மலையக வாழ்வைத் தம் சிறுகதைகளிற் சித்திரித்த சிறப்பு அவரது ஆழ்ந்து அவதானிக்கும் ஆற்றலுக்கும் சிருஷ்ட்டித் திறனுக்கும் மனிதாபிமானத்துக்கம் எடுத்துக்காட்டாய் அமைந்தது" என்றுயான் குறிப்பிட்டதை உறுதி செய்யும்வகையில் 'ஆடிப்பூசை' என்ற சிறுகதை இந்நூலில் அமைந்துள்ளது. ஆடிப்பூசை விழாவை மையமாக வைத்து எழுதப்பட்டுள்ள அக்கதையில், தோட்ட மக்களை வருத்தும் கல்வி , வைத்திய போக்குவரத்து, இருப்பிட வசதிகளும் கள்ளு, கசிப்பு, சாராயம், சாதிப்பிரிவினைகள் போன்றவற்றால் விளையும் கெடுதல்களும் தொட்டுக்காட்டப்பட்டுள்ளன. மக்களின் மனோதரங்களையும் வழிபாட்டு சம்பிரதாயங்களையும் அவர்கள் மத்தியில் நிகழ்ந்துள்ள மாறுதல்களையும், விளங்கிக்கொள்ளக் கூடிதாயுள்ளது. ஒருபுறம் இனக்குரோதக் கில்லாடித்தனங்களும் இன்னொருபுறம் வேற்றுமைகளைப் புறங்கண்ட மனிதாபிமானத்தின் இங்கிதமும் காணப்படுவதையும் ஆசிரியர் சித்திரித்துள்ளார்.

பலங்களும் பலவீனங்களும் கூடிய மனிதரின் இயல்புகளையும், அவர்களிடைத் தோன்றும் போட்டி, பொறாமை, சந்தேகம் முதலானவற்றையும், அவற்றினால் ஏற்படும் மனமுறிவுகள், ஏமாற்றங்கள் முதலானவற்றையும், அதே வேளையில் தவறுகளையும் பகைமைகளையும் மறந்து ஒன்று பட்டு உதவும் மனிதநேய நடத்தைகளையும் ஊன்றி அவ தானித்துச் சித்திரிக்கும் ஆற்றல் புலோலியூர் சதாசிவத்துக்கு உண்டென்பதற்குச் சான்றாக விளங்கும் இடறும்கால், புதிய பரிமாணம், மனிதம் உருமாற்றும் உறவுகள் முதலான கதைகள் உருவ அமைதி பொருந்தியவையாக மிளிர்கின்றன.

குண்டு வெடிப்புக்கள், தடுத்துவைப்புக்கள் விசாரணைகள், பிள்ளைகளின் பாதுகாப்பும் எதிர்காலமும் குறித்த பெற்றோரின் தவிப்பு, நிம்மதியாக உலவவோ ஊடாடவோ உறங்கவோ இயலாத நிலை- இப்படியானவற்றால் பெருகும் துயரங்களைக் காட்டுவது "தீருமா?" என்ற கதை. புரிந்துணர்வு இல்லாத

நிலையில் மனிதநேயம் தேய்வதையும் யுத்தம் அரசியலாகவும் வியாபாரமாகவும் மாறுவதையும் ஆசிரியர் எடுத்துக்கூற விழைகிறார். வேலையில்லாப் பிரச்சினையும் விரக்தியும் காரணமான இளைஞர் எழுச்சியைச் சுயநலவேட்கையும் அதிகார வெறியும் கொண்டவர்கள் அடக்கியபோது இடம் பெற்ற அவலங்களைக் காட்டுவது 'ஐயோ! அம்மே!!' என்ற கதை. இனப்பிரச்சினைக்கும் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தியதற்குமான காரணங்களை விளங்கிக்கொண்டவர்கள் சிங்களவர் மத்தியிலும் இருக்கலாம் என்பது 'எட்டாத கனி!' என்ற கதை மூலம் காட்டப்படுகிறது.

அனேகமான கதைகளில் பல்வேறு பிரச்சினைகளைக் கொண்டுவர ஆசிரியர் முனைகிறார் என்று குறைகூறப்படலாம். ஆனால், பல்வேறு பிரச்சினைகள் ஒன்றையொன்று விஞ்சிக் கொண்டு எம்மை அலைக்கழிக்கும் ஒரு சூழலம் அவற்றை யெல்லாம் பதிவு செய்திட வேண்டுமென்ற ஆசிரியரின் ஆர்வமும் அதற்குக் காரணமாகலாம். எவ்வாறாயினும், இந்நாட்டு வாழ்வைச் சீர்குலைக்கும் பல பிரச்சினைகளின்பால் ஆசிரியரின் கவனம் சென்றிருக்கிறது. அப்பிரச்சினைகளுக்குக் காரணமானவர்களிடத்து அவருக்குண்டான சினம் புலப்படுகிறது. அமைதியாகவும் அன்னியோன்னியமாகவும் வாழும் அபிலாசை கொண்ட எல்லா இனங்களையும் சேர்ந்த மக்களின்பால் அவருக்குண்டான ஆர்வமும் பரிவும் மதிப்பும் வெளிப்படுகின்றன. புலோலியூர் சதாசிவத்தின் மனிதநேயமும், அதனை ஏனையோரிடத்தும் வளர்ப்பதற்குத் தமது எழுத்துப் பயன்பட வேண்டுமென்பதில் அவர் காட்டும் கரிசனையும், அவரது தமிழ்நடையின் தெளிவும் பாராட்டக்தக்கவை. அவரது முயற்சிகள் வெற்றிபெற வாழ்த்துகிறோம்.

* * * * * *

# என்னுரை

இது எனது நான்காவது சிறுகதைத் தொகுதி.

தேசிய இலக்கியப்பண்பு ஈழத்து இலக்கியத்தில் முனைப்புப்பெறத் தொடங்கிய காலத்தில் - 1961ம் ஆண்டு எனது பத்தொன்பதாவது வயதில்- தேசிய இலக்கிய வெளிப்பாடாகச் சிறிது காலம் வெளிவந்த இளங்கீரனின் 'மரகதம்' மாத சஞ்சிகை நடத்திய சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்று இலக்கிய உலகில் பிரவேசித்தேன். இக்காலகட்டத்தில் எமது நாட்டை இலக்கிய வியாபாரச் சந்தை எனக் கருதி இங்கு வந்த ஒரு தமிழ் நாட்டு இலக்கியவாதி 'எமது புனைகதை இலக்கியம் பத்தாண்டு பின்தங்கியுள்ளது' என்ற சொல்லத்தகாத வார்த்தையினைக் கேட்டுப் பொங்கியெழுந்து புத்வேகத்துடன் நாம் இலக்கியம் படைக்கலானோம். எமது இலக்கியம் தனித்துவம் பெற்றது. நமது நவீன இலக்கிய செல்நெறி அர்த்தமும் ஆரோக்கியம் உள்ளதாக அமைந்தது. எமது ஆக்க இலக்கிய வாதிகளின் போக்கும் திறமைமிக்க திறனாய்வாளர்களின் நோக்கும் தமிழ் நாட்டு ஆக்க இலக்கியவாதிகளை அரசியல், சமூக, பொருளாதார பின்னணியில் சிந்தித்து செயற்படவைத்தது. தலித் இலக்கியத்தின் முன்னோடிகள் நாம்.

காலத்தின் தேவைக்கும் உலக அரங்கில் நடைபெறும்

மாற்றங்களுக்கு இசைவாகவும் புதிய இலக்கியக்கோட்பாடுகள் தோன்றியுள்ளன. இலக்கிய செல்நெறியிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. நான் புதிய இலக்கியக்கோட்பாடுகளின் நல்லம்சங்களை உள்வாங்கி, இன்றைய இலக்கிய செல்நெறிக்கு இசைவாக இலக்கியம் படைத்துவரும் அதே வேலையில் இலக்கியம் மானிட வாதத்தின் வெளிப்பாடக அமைந்து, மானிடத்தை உணர்ச்சியால் நேசிக்க, மானிலம் பயனுறும் கருவியாக - சமூகத்தின் ஆத்மாவாக அமையவேண்டும் என்ற கோட்பாட்டுடன் என்றுமே எழுதிவருபவன், சமூக , பெருளாதாரப் பின்னணியில், காரணகாரியத் தொடர்புடன் சிந்தித்து சமகால வரலாற்றை பொறுப்புடன் புனைகதைகளில் பொறிக்க வேண்டுமென்பது என் நோக்கம். புனைகதை ஆக்கத்திலும் ஒரு தொழில் நுட்பம் உண்டு, இலக்கியத்தில் உருவமும் உள்ளடக்கமும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள் என்பது என் கருத்து.

இந்நூல் வெளிவருவதற்கு முழுமுதற் காரணமாக இருந்து, எனக்கு உத்வேகம் அளித்து, நூல் உருவம் பெற ஆவன செய்த உயிர் நண்பன் - நாடறிந்த நாவலாசிரியர் - திரு. தி ஞானசேகரன் அவர்களுக்கு எப்படி நான் நன்றி கூறுவது! எனது 'புதிய பரிமாணம்' எமது நட்பில் ஒரு புதிய பரிமாணம், இலக்கிய உறவின் அழியாச்சின்னம், எழுத்துப் படிவங்களை பதிவு பண்ணி உதவிய செல்வி. ச. பத்மபிரியதர்ஷினிக்கும். கணணிப் பதிவு செய்து தந்து உதவிய நண்பன் ஆசிரியர் திரு. ஆறுமுகம் சந்திரமோகனுக்கும் எனது உளங்கனிந்த நன்றிகள். எனது படைப்புக்களை ஆரம்பத்திலிருந்து இனங்கண்டு ஆய்வு செய்து ஆக்கமும் ஊக்கமும் அளித்துவரும் பேராசிரியர் திரு. சி. தில்லைநாதன் அவர்கள் பல்வேறு கடமைகளுக்கு மத்தியிலும் மனமுவந்து மிகக்காத்திரமான அணிந்துரையை வழங்கியுள்ளார். அன்னாருக்கு நான் என்றும் கடப்பாடுடையேன்.

அட்டைப்பட அமைப்பினை அழகாகச் செய்து தந்த

நண்பர் திரு. சி. நாகேந்திரா, குறுகிய காலத்தில் அச்சுப்பதிவு செய்து கொடுத்த என் நீண்ட நாளைய நண்பர் இறைபணிச் செம்மல் காரை. செ. கணேசமூர்த்தியின் சிரேஷ்டபுத்திரன் - பண்டாரவளை மேர்க்குயிறி பிறின்ரிங் வேர்க்ஸ் உரிமையாளர்- திரு. மயூரன் ஆகியோருக்கு என் இதயபூர்வமான நன்றிகள்.

இறுதியாக, என் ஆறாவது ஆக்க இலக்கிய நூலில் நான் கூறும் வாழ்வியல் தகவல்களை உள்வாங்கி, நான் படைத்துள்ள பாத்திரங்களுடன் பரிச்சயமாகி , உறவாடப் போகும் அருமை வாசகர்களுக்கு என் இதயம் நிறைந்த அன்பு.

ஈழத்து இலக்கியத்திற்கு வளம் சேர்க்க வேண்டுமென்ற எனது ஆசை தொடர்ந்து நிறைவேற மீண்டும் விரைவில் அடுத்த நூலில் சந்திப்போம்.

25-12-1998.

புலோலியூர் க. சதாசிவம்.
டயராபா மருந்தகம்
பண்டாரவளை.

# உள்ளே.....


| | |
|---|---|
| 1. தீருமா? | 11 |
| 2. ஆடிப்பூசை | 25 |
| 3. எட்டாத கனி! | 44 |
| 4. ஐயோ! அம்மே!!! | 60 |
| 5. இடறும் கால்... | 75 |
| 6. புதியபரிமாணம் | 89 |
| 7. போகாத இடந்தனிலே..! | 99 |
| 8.மனிதம்உருமாற்றும் உறவுகள். | 110 |

# தீருமா?

இன்று போல் என்றுமே சாந்தி மனச்சாந்தியின்றித் தவித்ததில்லை.

அப்பாவும் அம்மாவும் வெள்ளவத்தைப் பிள்ளையார் கோவிலுக்குப் போய்விட்டார்கள். அண்ணா புதிதாக ஆரம்பித்த 'புறஜெக்ற் வேக' விடயமாக சில தகவல்களைப் பெறுவதற்கு கட்டுபெத்தை கம்பஸிக்குப் போவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருகிறான்.

வானொலியில் புதுப்பாடல் ஒன்று ஒலிபரப்பாகிக் கொண்டிருக்கிறது, இப்போதெல்லாம் அடிக்கடி ஒலிபரப்பப்படும் இப்பாடலை ரசித்துக் கேட்கும் சாந்திக்கு இன்று அதில் மனம் லயிக்கவில்லை. வானொலியை நிற்பாட்டவேண்டும் போலிருக்கிறது. 'அண்ணா ஒரு வேளை இதனை ரசித்துக் கொண்டிருக்கலாம். நிற்பாட்டினால் ஏதாவது நினைப்பாரோ'

அன்டர்சன் தொடர் மாடியில் அமைந்துள்ள அவர்களது வீட்டின் யன்னலின் ஊடாக வெளி வீதியைப் பார்க்கிறாள் சாந்தி. இன்று போயா தினம். காலையில் வழக்கமாக இருக்கும் சந்தடி இல்லை. ஓரிரு வாகனங்கள் மட்டும் ஓடிக்கொண்டிருக்கின்றன. சனநாட்டமும் அதிகமில்லை. அண்ணா அவசரமாகப் பாண் துண்டைச் சாப்பிடுகிறான். சாந்தி தேநீர் போட்டுக் கொண்டு வந்து வைக்கிறாள்.

இப்போ...... அண்ணாவும் போய்விட்டான். வானொலியையும் நிற்பாட்டி விட்டாள். புத்தகத்தை எடுத்து வகுப்பில் நேற்று ஆரம்பித்த புதிய பாடமாகிய 'நிகழ்தக'வில் சில கணக்குகளைச் செய்ய அவளுக்கு விருப்பமாக இருக்கிறது. ஆனால் ஏனோ நாற்காலியை விட்டு எழுந்திருக்க மனம் வரவில்லை.

'அம்மாவும் அப்பாவும் என்ன முடிவுடன் வருவார்களோ' இன்று வெள்ளிக் கிழமை; காலைப்பூசை முடிய காலதாமதமாகும். அதற்குப் பின்புதான் பூக்கட்டிப் பார்ப்பார்கள். நேற்றிரவு அப்பாவும் அம்மாவும் விவாதித்ததை சாந்தி எண்ணிப் பார்க்கிறாள். 'அப்பா நல்ல அப்பா'. அவர் சாந்தியின் மனநிலைக்குச் சார்பாகவே தனது கருத்தை வெளியிட்டார்.

"ஏனப்பா, இப்ப என்ன அவசரம். பிள்ளை படிக்கப் போறன் எண்டு ஆசைப்படுகிறாள். படிக்கக் கூடிய பிள்ளை. இப்ப என்ன இருபது வயசுதானே. இடையிலை படிப்பைக் குழப்பி ஏன் உந்த அடுக்கெல்லாம்."

"நீங்கள் எப்பவும் இப்படித்தான். நான் எதைச் செய்ய வெளிக்கிட்டாலும் அதுக்கு எதிர்மாறாகத்தான் எதையாவது சொல்லுவியள். உங்களுக்கு பட்டும் இன்னும் புத்தி வரவில்லை. போன போயா அண்டைக்கு எங்களுக்கு நடந்ததை நினைக்க இப்பவும் உடம்பு பதறுகுது."

அன்று கொழும்பே அதிரும் படியாகப் பாரிய குண்டு ஒன்று வெடித்தது. 'கம்பஸில்' ஒன்றாகப் படிக்கும் புறக்கோட்டையில் தங்கியிருக்கும் நண்பன் வீட்டிற்கு அண்ணா காலையில் போயிருந்தான். எல்லோரும் பதட்ட நிலையில் இருந்தார்கள். அண்ணாவுக்கு ஏதாவது நடந்திருக்குமோ என ஆரம்பித்த ஏக்கம் அவன் வீடு திரும்பாததால் நேரம் செல்லச் செல்ல விசுவருபம் எடுத்தது. மாலை ஆறுமணி வரை எவ்வித தகவலுமில்லை. அண்ணாவைத் தேடிப்போன அப்பாவும், அப்பாவைத் தேடிப்போன நந்தசேனா அங்கிளும் ஒன்பது மணிவரை வீடு திரும்பவில்லை. 'ஐயோ என்ரை பிள்ளைக்கு என்ன நடந்தது?' அம்மா அழுது புலம்பிக்கொண்டே இருந்தாள். சாந்திக்கு அழுதழுது முகம் சிவந்து விட்டது. இரவு பத்து மணியளவில் அப்பாவும் நந்தசேனா அங்கிளும் வந்தார்கள். அண்ணா வரவில்லை.

குண்டு வெடித்த சம்பவம் நடந்தபின் அருகில் உள்ள

வீதியில் சென்ற பஸ்ஸில் பிரயாணம் செய்த தமிழர்கள் யாவரையும் பொலிஸ் நிலையத்திற்கு ஏற்றிச்செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்களாம். பொலிஸ் ஸ்டேசனில் தடுத்து வைக்கப்பட்ட அண்ணாவை நேரில் பார்த்துக் கதைத்ததாகவும், பயப்பட வேண்டாமென்றும் விசாரணை முடிந்ததும் நாளை விடுதலை செய்து விடுவார்கள் எனவும் கூறினார்கள்.

அப்பாவும் நந்தசேனா அங்கிளும் எவ்வளவோ சொல்லியும் அம்மாவின் ஏக்கம் குறைந்தபாடில்லை.

''என்ரை பிள்ளையை இண்டைக்கு இரவுக்கு என்ன செய்யிறாங்களோ! உப்பிடிப் பிடிச்சு வைச்ச எத்தனை பெடியங்களுக்கு என்ன நடந்தது எண்டு தெரியல்லை. ஐயோ என்ரை பிள்ளையைக் கூட்டிக் கொண்டு வாருங்கோ'' அம்மா இரவிரவாக அழுது புலம்பிக் கொண்டிருந்தாள்.

இரவு நடுச்சாமம் இருக்கலாம். வீட்டுக் கதவு உடைக்கப்படுவது போன்ற ஓசையுடன் பலமாகத் தட்டப்படுகிறது. வெளியே பூட்ஸ் காலின் நடமாட்ட ஓசை இரவின் அமைதியில் தெளிவாகக் கேட்கிறது. அப்பா கதவைத் திறந்ததும் பொலிஸ் கோஷ்டி ஒன்று 'செக்கிங்' என்று சொல்லிக் கொண்டு உள்ளே புகுகிறது. வீட்டுவாசலிலும் வெளியேயும் முற்றுகையிடுவது போல, துப்பாக்கி ஏந்தியபடி சீருடையுடன் சிலர் நிற்கிறார்கள். வீட்டில் உள்ள பெட்டி படுக்கைகள், அலுமாரிகள் அனைத்துமே தீவிர சோதனைக் குட்படுத்தப்படுகின்றன. அண்ணாவின் புத்தகங்கள் 'நோட்ஸ்' பைல்கள், டயறி, கடிதங்கள் யாவும் துருவித் துருவிப் பார்க்கப் படுகின்றன. அண்ணாவின் படிப்புடன் சம்பந்தப்பட்ட வரைபடங்கள் இருந்த பைல்களை கையுடன் எடுத்துக் கொண்டார்கள். அப்பாவிடம் பலவிதமான கேள்விகள் தொடுத்தனர். சாந்தியையும் அம்மாவையும் அக்கோஷ்டியில் உள்ள பெண்பொலிஸார்கள் தனியாக ஓர் அறைக்கு அழைத்துச் சென்று சோதனையிட்டனர். விசாரணை செய்தனர். சாந்தியின் அடையாள அட்டையில் உள்ள புகைப்படத்தையும் வாடிவதங்கி

நின்ற சாந்தியையும் பலதடவைகள் ஒப்பிட்டுப் பார்த்த அக்கோஷ்டிக்குத் தலைமை தாங்கி வந்த அதிகாரி அருகில் உள்ளவரிடம் ஏதோ கூற சாந்தி வீடியோப்படம் எடுக்கப்பட்டாள். அவர்கள் வீட்டைவிட்டு அகல ஒரு மணித்தியாலத்துக்கு மேல் சென்றது.

மறு நாட்காலை நந்தசேனா மாமா ஆளுங்கட்சியில் உள்ள அரசியல் பிரமுகர்களுடன் இது விடயமாகத் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். நேரில் சென்று சந்தித்தார். அப்பாவும் நந்தசேனா மாமாவும் எப்படியும் அண்ணாவைக்கூட்டிக் கொண்டு வருவதாகச் சென்றார்கள். மாலை ஆறு மணியாகியும் யாரும் வரவில்லை. அம்மா மயக்கமுற்று இரு தடவைகள் விழுந்துவிட்டாள். இரவு எட்டு மணியளவில் ஓட்டோவில் அண்ணாவைக் கூட்டிக்கொண்டு வந்தார்கள். இரண்டு நாட்களில் அண்ணாவின் தோற்றம் எவ்வளவோ மாற்றம் அடைந்திருக்கிறது. வாடி வதங்கிய முகம். "என்ரை ராசா, நான் உன்னை உயிரோடை பார்ப்பன் எண்டு எதிர்பார்க்கவில்லை" அம்மா அவனைக் கட்டியணைத்துக் கண்ணீர் சிந்தினாள்.

அண்ணா ஒன்றுமே நடக்காதது போல சிரித்துக்கொண்டே சொன்னான், "இந்த நாட்டிலை தமிழனாகப் பிறந்தவர்கள் இதற்கெல்லாம் பழக்கப்பட வேண்டும். ரேக் இற் ஈசி"

ஆனால் இந்த நிகழ்வுக்குப்பின் அண்ணாவிடம் சில மாற்றங்களைக் கண்டாள் சாந்தி . முன்பெல்லாம் ஆக்கிரெக் பட்டப்படிப்பு முடிந்து சில ஆண்டுகளுக்கு இந்த நாட்டில் வேலை செய்து அனுபவம் பெற்ற பின்பு வெளிநாட்டுக்கு வேலை தேடிப் போகவேண்டும் என்று சொன்ன அண்ணா அடுத்த ஆண்டு பட்டப் படிப்பு முடிந்ததும் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள்தேடி விண்ணப்பிக்க வேண்டும், சம்பளம் குறைவு என்றாலும் பரவாயில்லை எனச் சொல்லத் தலைப்பட்டதை சாந்தி நுட்பமாக மனங்கொண்டாள்.

நேற்றிரவு அப்பாவுக்கும் அம்மாவுக்கும் நடந்த உரை யாடலை சாந்தி தொடர்ந்து அசை போடுகிறாள்.

"இந்த நாடு இனி ஒரு நாளும் சரிவராதப்பா. இண்டைக்கு ஊர் உலகத்தில் என்ன நடக்குது? ஆக்கள் பிள்ளைகுட்டிகளை வெளிநாட்டிற்கு அனுப்பிப்போட்டு சிவனே எண்டு நிம்மதியாக இருக்குதுகள். டொலர்கள் வருகுது. ரெலிபோனிலை சுகதுக்கங்களைப் பேசி மனம் ஆறுதுகள். வீடியோ பீஸ்ஸில் பிளளைகளின்ரை கலியாணவீடுகளை, பேரப்பிள்ளைகளின்ரை பேர்த்டே பார்ட்டிகளைப் பார்த்து மனச் சந்தோஷம் அடையுதுகள். நாங்களும் தம்பிக்கு படிப்பு முடிஞ்சதும் அனுப்பிவைப்பம், வெளிநாட்டிலை அவன்ரை படிப்புக்கு நல்ல ஜொப் எடுக்கலாமாம். இப்ப இவள் பெடிச்சிக்கு இப்பிடி ஒரு இடம் வரைக்கை ஏன் விடுவான். மாப்பிள்ளை என்ஜினியராம். மாப்பிள்ளை பகுதி தம்பசெட்டி ஆக்கள். அதுவும் புலோலிதானே தமிழ் வளர்த்த சதாவதானி கதிரவேற்பிள்ளை பிறந்த மேலைப் புலோலி எண்டு அடிக்கடி சொல்லுவியள், அவைக்கும் எங்கடை ஆக்களுக்கும் பரம்பரைத் தொடர்பு இருக்காம். கோயிலடியில் தாய் மனுஷி ஏதோ தோம்பு சொல்லிச்சுது. நாங்களும் இரண்டு பேரையும் வெளிநாட்டுக்கு அனுப்பிப் போட்டால் நிம்மதியாக, கோயில் குளம் எண்டு திரியலாம்தானே."

அம்மா, அண்ணாவிற்கு இதுபற்றி ஏதாவது சொல்லி யிருக்க வேண்டும். அண்ணாவுக்கு இதில் விருப்பம் இல்லைப் போல் தெரிகிறது. அவனது சுபாவம் தனது அபிப்பிராயத்தை லேசில் சொல்லமாட்டான். ஆனால் தங்கையுடன் விளை யாட்டாகக் கிண்டல் பேசுவது போல காலையில் சொன்னதை நினைத்துப் பார்க்கிறாள்.

"சாந்தி அந்தப் பெடியன் நான் ஹாட்லியிலை படிக்கிற காலத்தில் என்னோடை படிச்சவன். 'மற்ஸ்' எண்டால் சுத்த சூனியம், இப்ப என்ஜினியராம். நீதான் தலையில் குட்டி மற்ஸ்

சொல்லிக் குடுக்கோணும். ‘அன்டகிரவுண்ட்’ என்ஜினியரோ தெரியேல்லை.” நேற்றிரவு அப்பாவுக்கும் அம்மாவுக்கும் நடந்த உரையாடலை அண்ணாவும் கூர்ந்து கவனித்திருக்க வேண்டும்.

அப்பா ஒரு கட்டத்தில் சொன்னார், “மாப்பிள்ளை எஞ்சினியர் எண்டிறியள் ஆர் கண்டது. கொக்குவிலிலை ஒரு பெடிச்சியை, என்ஜினியர் மாப்பிள்ளை எண்டு கொழுத்த சீதனம் கொடுத்து - மாப்பிள்ளையெண்டை தாய் தகப்பன் தங்கிறதுக்கு கொழும்பில் ஒரு வீடும் சீதனமாகக் கொடுத்தார்களாம். கடைசியில பாக்கைக்க மாப்பிள்ளை சுடலையிலை பிணங்களைப் புதைக்க குழி வெட்டிறதுதானாம் தொழில். எத்தனையோ டொலராம் சம்பளம். எங்கடை ஆக்களுக்கு டொலர் வந்தால் சரிதானே. எங்கடை அப்பு சொல்லுவார். நாய் வித்த காசு குலைக்குமோ எண்டு, டொலரும் எங்கடை ஆக்களுக்கு அப்பிடித்தான்”

சாந்திக்கு அழவேண்டும் போலிருந்தது. ‘முன்பின் தெரியாத உருவம், குணவியல்புகள், எப்பிடி இருக்குமோ? தொழில் கூட என்னவென்று தெரியவில்லை.’ அண்ணா அவளது உணர்வைப் புரிந்து கொண்டிருக்க வேண்டும். “சாந்தி ரேக் இற் ஈசி; பூக்கட்டிப் பார்க்கப் போனவை வரட்டன். பொசிற்றிவோ, நெகற்றிவோ தெரியேல்லை. அதற்குப் பிறகுதானே அடுத்த ஸ்டெப்”

சாந்தி இந்த ஏற்பாடுகள் பிழைக்கக் கூடியச் சாத்தியக் கூறுகளை எண்ணிப் பார்க்கிறாள். சாத்தியகூறுகள்தான் கணிதத்தில் - ‘மற்ஸ்’ஸில் வரும் நிகழ்தகவுகள். கணித பாடம் கற்பிக்கும் போது டியூசன் மாஸ்டர் வாழ்க்கை நிகழ்வுகளை கணிதத்துடன் சம்பந்தப்படுத்தி புதிய அலகுகளை அறிமுகம் செய்வார்.

இந்த ஏற்பாடுகள் கைகூடாமல் போவதற்கான நிகழ்தகவுகளை எண்ணிப் பார்க்கிறாள். இன்று கோயிலில்

பூக்கட்டிப் பார்க்கும்போது பாதகமான முடிவு வரலாம். அடுத்து சாதகம் பார்ப்பார்கள். எத்தனையோ பொருத்தங்கள்... அதில் பொருத்தம் இல்லாமல் போகலாம். மாப்பிள்ளை, பொம்பிளையின் புகைப்படங்களைத் தருவித்துப் பார்த்து விருப்பம் இல்லை என்று சொல்லலாம், சீதனப் பிரச்சினையில் குழம்பலாம். என்ஜினியர் மாப்பிள்ளை இல்ட்சக்கணக்காகக் கேட்பார்கள். அப்பாவிடம் காசு ஏது? எடுக்கும் சம்பளத்தில் இன்றைய வாழ்க்கைச் செலவின் ஏற்றதுக்கு ஈடுகொடுக்க முடியாமல் கஷ்டப்படுகிறார். அப்பா பாவம் ஒருசதம்கூட வீணாகச் செலவு செய்யமாட்டார். அம்மா ஒரே பிடிவாதமாக நிற்கிறா. பூக்கட்டிப் பார்த்து தனது விருப்பத்திற்கு சாதகமாக வந்துவிட்டால் ..!' அம்மா நேற்று சொன்னவற்றை எண்ணிப் பார்க்கிறாள்.

"பெம்பிளைப் பிள்ளைகள் படிச்சு பெரிய உத்தியோகம் கிடைச்சாலும் பெற்றோர்களுக்கு அதுகளைக் கரைசேர்க்கிற பிரச்சினை பிரச்சினைதான். எங்கட ஊரில் பெரிசாகப் படிச்ச பெட்டைகள் தோதான மாப்பிள்ளைகள் கிடைக்காமல் கட்டுப்படாமல் இருக்கிறதை நீங்கள் பாக்கேல்லையா. பிள்ளையார் ஒத்துக்கொண்டால் பலன்படி நடக்கட்டும் எண்டு துணிஞ்சு இறங்குவம்"

'இன்று பெண்ணியம் பற்றிப் பெரிதாகப் பேசிக்கொள் கிறார்கள். பெண்கள் இன்றும் அடிமைகள்தானா? சுதந்திரமாக முடிவு எடுக்க முடியாத சமுதாய அமைப்பு கட்டுப்பாடுகள், விழுமியங்கள்!

'பிள்ளையாரே பூக்கட்டிப் பார்க்கும்போது அம்மா நினைப் பதற்கு பாதகமான முடிவைக்கொடு. நீ எனக்கு உதவினால் நான் உனக்கு வெள்ளிதோறும் விரதம் பிடிக்கிறன். முன்பு ஒரு தடவை நீ எனக்கு உதவினாய். அதுபோல இந்தத் தடவையும் உதவவேண்டும். சாந்தி க.பொ.த. பரீட்சையில் திறமையாகச் சித்தியடைந்ததும் அம்மா அவளை டொக்டருக்குப் படிப்பிக்க வேண்டுமென விரும்பினாள். சாந்திக்குள்ள ஆர்வமும்,

ஆற்றலும் 'மற்ஸ்' படிக்கவே. அப்பாவும் சாந்தி பக்கம்தான். பிள்ளையாருக்குப் பூக்கட்டிப் பார்த்தபோது சாந்திக்கே வெற்றி கிடைத்தது.

"டக் டக்" கதவு தட்டப்படும் சத்தம் கேட்கிறது. சாந்தி பூட்டப்பட்டிருந்த கதவை எழுந்து சென்று திறக்கிறாள். அடுத்த வீட்டு அங்கிள் நந்தசேனாவும், மெனிக்கா அன்ரியும் உள்ளே வருகிறார்கள். "துவ நாங்கள் பன்சலைக்குப் போயிட்டு வாறம். சுது டியூசனுக்குப் போயிட்டா. வந்தவுடன் சாவியைக் குடுங்கோ" சிங்களத்தில் அன்ரி மிக ஆதரவாகக் கூறினாள். சாந்தி சிங்கள மொழியில் சரளமாகப் பேசுவாள்.

"துவ, நாங்கள் போயிட்டு வாறம்" எனத் தோளில் தட்டிவிட்டு மெனிக்கா அன்ரி போய்விட்டாள். மெனிக்கா அன்ரிக்கு சாந்தி மேல் ஒரு தனி விருப்பம்.

ஒரே திணைக்களத்தில் வேலை செய்யும் நந்தசேனவும் நடராசாவும் அன்டர்சன் தொடர்மாடியில் வீடுகிடைத்து ஒரே நாளில்தான் குடிவந்தார்கள்.

அன்று இனக்கலவரம் வெடித்தபோது சாந்தி ஐந்து மாதக் குழந்தை. நந்தசேனாவும், மெனிக்காவும் நடராசா குடும்பத்தை அகதி முகாமிற்குப் போகாமல் தங்களுடன் இருக்கும்படி பல தடவைகள் வற்புறுத்திக் கேட்டனர். தமிழர்களை வைத்திருப்பவர்ளைக்கூட தாக்கப்படுவதாக அறிந்தும் யாருக்குமே தொல்லை கொடுக்க விரும்பாத சுபாவமுடைய நடராசா அகதி முகாமிற்குப் போகப் புறப்பட்டுவிட்டார். மெனிக்கா அன்ரி கைக்குழந்தையான சாந்தியைத் தாயிடமிருந்து பிரித்தெடுத்து அகதி முகாமின் நிலைமையைப் பார்த்து அடுத்த நாள் கொண்டு வந்து ஒப்படைப்பதாகக் கூறித் தன்னுடன் வைத்துக்கொண்டாள். இரண்டு நாட்கள் சாந்தியை மெனிக்கா அன்ரியே சீராட்டி, தன் மொழியில் தாலாட்டி, தன் பாலூட்டி வளர்த்தாள்.

மெனிக்காவிற்கு இரண்டும் ஆண்பிள்ளைகள். பெண்

குழந்தை இல்லாத அவள் சாந்தியைத் தன் குழந்தை போலப் பேணுவாள். சாந்தியை ஒரு நாள் காணாதுவிட்டால் அன்ரிக்குப் பைத்தியம் பிடித்தது போலிருக்கும். சாந்திக்கும் அன்ரியைப் பார்த்துக் கதைக்காவிட்டால் ஏதோ ஒரு குறையுடன் ஒருநாள் கழிந்ததாக இருக்கும். நல்ல உணவு சமைத்தால் சாந்திக்குக் கொடுத்துச் சாப்பிடுவாள். இன்றும் அப்படித்தான்.

இன்று போல நாடு அன்று இருக்கவில்லை. நந்தசேனா வின் குடும்பம் ஒரு பாடசாலை விடுமுறைக்கு யாழ்பாணம் சென்றிருந்தார்கள். நாகதீபத்திற்குப் போனார்கள். யாழ்மக்கள் ஆழமான கிணறுகளில் இருந்து தண்ணீர் பாய்ச்சி விவசாயம் செய்யும் விதம், கடின உழைப்பு, சிக்கன வாழ்வு, கிராம மக்களின் உபசரிக்கும் பண்பு இவற்றால் நந்தசேனா பெரிதும் கவரப்பட்டார். யாழ்ப்பாணத்திலிருந்து திரும்பும்போது பலரக சுவையான மாம்பழங்கள். புழுக்கொடியல், பனங்கட்டி, பனாட்டு, முருங் கக்காய் இவற்றையெல்லாம் பார்சலாகக் கட்டி கொழும்புக்கு கொண்டுவந்து சேர்த்தார். நந்தசேனா வேலைசெய்யும் திணைக் களத்தில் தனது யாழ்ப்பாணப் பயணம் பற்றிப் பல நாட்களாக வாயாரத் தனது நண்பர்களுக்குச் சொல்லிக் கொண்டிருந்தார்.

'அவுறுது' என்று அழைக்கப்படும் தமிழ்-சிங்கள புத்தாண்டுக்கு, ஒருதடவை நடராசாவின் குடும்பம் நந்தசேனாவின் குருநாகலில் உள்ள குக்கிராமத்துக்குச் சென்றிருந்தது. கிராமத்தின் புத்தாண்டுக் கொண்டாட்டங்களை மிக ரசித்தார் நடராசா. கிராம மக்களின் பண்பாட்டுக் கோலங்கள், அவர்களது விருந்தோம்பும் பண்பு, உறவுகளைக் கட்டிக்காக்கும் பான்மை, மூத்தவர்களைக் கனம் பண்ணும் பழக்கம் நடராசா குடும்பத்தினரை வியக்கவைத்தது. புத்தாண்டில் மூத்தவர்களுக்கு வெற்றிலை கொடுத்து பாதத்தில் விழுந்து வணங்கி நல்லாசி பெறும் பண்பு நடராசாவை மிகவும் கவர்ந்தது. அந்த அவுறுது அன்று சாந்தி, அங்கிளுக்கும் அன்ரிக்கும் வெற்றிலை கொடுத்து காலடியில் வீழ்ந்து வணங்கி ஆசிபெற்றாள்.

நந்தசேனாவின் மூத்தமகன் படிப்பு முடிந்ததும் வேலைதேடி அலைந்து ஒன்றுமே கிடைக்காமல் இராணுவத்தில் சேர்ந்துவிட்டான். போரும் தீர்ந்தபாடில்லை. பல வடிவங்கள் எடுத்துக் கொண்டிருந்தது. அவன் திருமணம் செய்து குழந்தைகளும் பிறந்துவிட்டன. இரண்டாவது மகன் சரத் இராணுவத்தில் சேர்வதை நந்தசேனாவும் மெனிக்காவும் விரும்பவில்லை. தன் விருப்பத்தின்படி பெற்றோரின் அனுமதியின்றி படிப்பை இடையில் குழப்பி இராணுவத்தில் சேர விண்ணப்பித்தான்.

சரத் இராணுவத்தில் சேர்ந்து ஆறுமாதத்திற்குள் அது நடந்தது. பெரிய மகன் பூநகரித் தாக்குதலில் இறந்துவிட்டான். செய்தி அறிந்ததும் தலைமகனை இழந்த கவலையில் நந்தசேனாவும் மெனிக்காவும் துடியாய்த் துடித்தனர். பெரிய மகனை இழந்த தாக்கம் நந்தசேனா குடும்பத்தைப் பெரிதும் பாதித்தது. இருவரது முகத்திலும் நிரந்தரக் கவலை குடிகொண்டது. மகனின் ஒரு மகளான சுதுவை தங்களுடன் வைத்து வளர்க்கிறார்கள். நந்தசேனவும் மெனிக்காவும் ஒவ்வொரு போயாவிற்கும் பன்சலைக்குப்போய் பிரிந்துபோன பிள்ளையின் நினைவாக விளக்குப் போடுவார்கள். இன்றும் அதற்குத்தான் போய்விட்டார்கள். போயா தினத்திற்கு பன்சலைக்கு வருபவர்கள் பலர் நந்தசேனா குடும்பத்தைப் போன்றவர்களாம். கணவனை இழந்த மனைவிகள், பிள்ளைகளை இழந்த பெற்றோர்கள், உடன் பிறப்புக்களை இழந்த சகோதரர்கள்... அன்ரி கவலையுடன் சொல்லுவா.

இப்போது மெனிக்கா அன்ரிக்கு சின்ன மகன் சரத் பற்றியே சதா கவலை. இராணுவ முகாம்கள் தாக்கப்படுவது, விமானங்கள், ஹெலிகொப்டர்கள் சுட்டு வீழ்த்தப்படுவது, கண்ணி வெடியில் படைவீரர்கள் அகப்பட்டுக் கொள்வது, மோதல்களில் இராணுவீரர்கள் இறப்பது இவற்றையெல்லாம் தொடர்பு சாதனங்கள் மூலம் கேள்விப்படும்போது அவள் மனம் ஏங்கித் துடிக்கும். சரத்திடமிருந்து கடிதம் வர நாட்கள் சென்று விட்டால்

என்ன, ஏது என ஏங்குவாள். சாந்தியிடம் தன் மனக்கவலைகளை மனந்திறந்து சொல்லுவாள். 'ரிவிரச' 'சத்ஜய' ஒப்பரேஷன்களில் ஒன்றும் வராது காப்பாற்றிய கதிர்காமக் கடவுள் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஜயசிகுரு ஒப்பரேஷனிலும் ஒன்றும் வராமல் காப்பாற்ற வேண்டுமென அவளிடம் அடிக்கடி கூறுவாள். ஒவ்வொரு கடிதத்திலும் நடராசா அங்கிள் குடும்பத்திற்கும் சாந்திக்கும் தனது சுகத்தைத் தெரிவிக்கும்படியும் அவர்களது சுகத்தை விசாரித்ததாகவும் கூறுவாள்.

சரத்திற்கு சாந்தியை விட ஒரு வயது கூட. இருவரும் சிறுவயதில் ஒன்றாக விளையாடியவர்கள். அன்டர்சன் தொடர்மாடிகளில் ஓடிப்பிடித்தவர்கள்; ஒளித்து விளையாடியவர்கள்.

இராணுவத்தில் சேர்ந்தபின் சரத்தின் தோற்ற வளர்ச்சியில் மட்டுமல்ல, நடையுடை பாவனையிலும் பாரிய மாற்றத்தைக் கண்டாள் சாந்தி. முன்பு அவளை 'நங்கி' என்று அழைத்தவன் இப்போது சாந்தி என்றே அழைப்பான். ஒரு தடவை லீவில் வந்திருந்தபோது "சருங்கலே படம் பார்த்தாயா சாந்தி. அதில் வரும் கலப்பு மணம் எனக்கு நன்றாகப் பிடித்திருக்கிறது. இன்னும் சில சிங்களத் தொலைக்காட்சி நாடகங்களையும், அதில் வரும் கதை மாந்தர்களைப் பற்றியும், கலப்புத் திருமணங்கள் பற்றியும் சொல்லுவான். சாந்தி ஒன்றுமே பேசாது எழுந்து சென்று குசினிக்குள் அன்ரிக்கு சமைப்பதற்கு உதவுவாள். சாந்தி சமைக்கும் சாப்பாடு மிக ருசியாக இருக்கும் என்பான்.

அன்ரி சொல்வாள், "சாந்தி எனக்கு மருமகளாக வநதால நான் பாக்கியசாலிதான்."

நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கொடூர நிகழ்வுகள், சென்ற போயாவிற்கு தங்களிற்கு நடந்தவை, மெனிக்கா அன்ரியைப் பீடித்து அலைக்கும் ஏக்க உணர்வுகள், இவைபற்றி எண்ணும்போது இந்த யுத்தம் முற்றுப் பெறாதா?

நிரந்தர சமாதானத்தைத் தரும் தீர்வு ஏற்படாதா? என ஏங்குகிறாள் சாந்தி. யுத்தமும் சமாதானமும் பற்றி சென்ற ஞாயிற்றுக்கிழமை அப்பாவும் நந்தசேனா அங்கிளும் உரையாடிய கருத்துக்களை எண்ணிப் பார்க்கிறாள்.

அப்பா தன் கருத்துக்களை ஆங்கிலத்தில் சொன்னார். 'பதினைந்து ஆண்டுகளாக நடைபெறும் இந்த யுத்தம் முற்றுப்பெறாதா எந்நாளும் துப்பாக்கிகளதும் குண்டுகளதும் சத்தங்களும் மரண ஓலங்களும்தான் ஒலிக்கப்போகிறதா? இரு இன மக்களும் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள். வட- கிழக்கு மக்களின் அவலநிலை சொல்லில் அடங்கா. பிறந்த பிரதேசங்களில் அகதிகளாக அல்லல் படுகிறார்கள். பெற்ற பிள்ளைகளை, உடன் பிறப்புக்களை, பெற்றோர்களை, உறவினர்களை இழந்து, வீடு வாசல்களின்றி அரும்பாடுபட்டு உழைத்த சொத்துக்கள் அனைத்தும் இழந்து எதிர்காலமே இல்லாமல் சமாதானத்திற்கு ஏங்கித் தவிக்கிறார்கள். பலர் செய்த தொழிலையே செய்ய முடியாமல் நிவாரணப் பொருள்களுக்காக கையேந்தி வாழ்கிறார்கள். வன்னிப் பகுதி மக்களின் நிலை மிகமிகப் பரிதாபமானது. பட்டினிச்சாவுகள், நோய்க்கு மருந்து இன்றி அவலச்சாவுகள், விரக்தி நிலையால் வாழ்க்கையை வெறுத்து மனநோயாளிகளானோர், போஷாக்கின்மை, பிரசவ- சிசு மரணவீத அதிகரிப்பு போன்றவை அதிகரித்து எத்தியோப்பியா ஒன்று உருவாகிறது".

"ஆட்சியாளர்களின் தவறுதானே இனப்பிரச்சினையை இப்படி சிக்கலாக்கியுள்ளது "என்றார் அங்கிள்.

"இந்த நாட்டில் யுத்தம் இல்லாது அரசியல் நடத்த முடியாதா? யுத்தமே ஒரு வியாபாரமாகிவிட்டது சிலருக்கு. பிச்சைகாரனின் புண்ணாக இதனை வைத்துக் காலத்தை ஓட்டப் பார்க்கிறார்கள் சிலர்."

"நடா, இன ஒற்றுமைக்கு என்ன வழி? கலப்புத்

திருமணங்கள் மூலம் இது சாத்தியமாகுமா? எனது மகன் சரத் ஒரு தமிழ்ப் பெண்ணைத்தான் மணம் செய்யப் போகிறானாம்"

"இரு இன மக்களுக்கும் இன்று வேண்டுவது புரிந்துணர்வுதான். கலப்புத் திருமணத்தால் இதனைப் பூரணமாக அடைந்து விட முடியாது. கலப்புத் திருமணம் இனக்கலப்பினை ஏற்படுத்துமே தவிர பிரச்சினைகளுக்குத் தீர்வாகக் கொள்ள முடியாது. ஒரு காலத்தில் சிங்கள- தமிழ் தொழிலாளர்களில் ஐக்கியத்தின் மூலம் புரிந்துணர்வை ஏற்படுத்தலாம் என்ற நப்பாசை இருந்தது. இன்றைய அரசியல் போக்கில் அதற்கு இடமேயில்லை. புரிந்துணர்வை மனிதாபிமானம், மனித நேயப் பண்புகள் போன்றவற்றின் மூலமே அடையலாம். இதற்கு ஓர் இனத்தின் மன உணர்வுகளை ஆசாபாசங்களை, பிரச்சினையின் தாக்கங்களை மனித நேயத்துடன் மற்ற இனம் நோக்கும் வழிகள் தோன்றவேண்டும், தோற்றுவிக்கப்படவேண்டும். இதனைத் தொடர்பு சாதனங்கள், கலை இலக்கியங்கள் செய்யலாம். ஆனால் இன்று நிலை எதிர்மாறாக இருக்கிறது. தொடர்புச் சாதனங்கள் இடைவெளியை அதிகரிக்கின்றன. இனரீதியாக எதையும் நோக்கி சந்தேகக் கண்ணோட்டத்துடன், பகை யுணர்வுடன் பார்க்கத் தூண்டும் வகையிலேயே பத்திரிகைச் செய்திகள் பிரசுரிக்கப்படுகின்றன. அரசியல் கட்டுரைகள் அமைகின்றன.

இந்நாட்டை நாளுக்குநாள் மோசமடையச் செய்கின்ற, சமூக, பொருளாதார சீரழிவிலிருந்து காப்பாற்ற வன்செயல்களும் இராணுவத் தீர்வும் வழியாகாது. என்ன விலை கொடுத்தாவது கௌரவப் பிரச்சினையை ஒதுக்கி வைத்து, சிறுபான்மை மக்களது நியாயமான உரிமைகளை வழங்கும் வகையில், பேச்சுவார்த்தை நடத்தி அரசியல் தீர்வுக்கு வருவதே இந்தப் போரை முடிவுக்கு கொண்டு வந்து சாந்தியையும், சமாதானத்தையும் எமது நாட்டில் நிரந்தரமாக நிலவச் செய்ய ஒரே வழி" என்றார்.

இன ஒற்றுமைமையை ஏற்படுத்தக் கூடிய வழியாக

கலப்புத் திருமணம் பற்றி நந்தசேனா அங்கிள் குறிப்பிட்டதையும் 'சாந்தி மருமகளாக வந்தால் நான் கொடுத்து வைத்தவள்' என மெனிக்கா அன்ரி சொல்வதையும், சரத் கலப்புத் திருமணக் கதையம்சம் கொண்ட திரைப்படம், தொலைக்காட்சி நாடகம் பற்றிப் பிரஸ்தாபிப்பதையும் ஒன்றாகப் பொருத்தி பார்க்கும் போது சாந்திக்கு இதுகாலவரை எண்ணிப்பார்க்காத ஏதோ ஒரு உணர்வு உந்துகிறது. 'சரத் அய்யாவின் திருமணத் தீர்வுடன் என்னை ஏன் இணைக்கிறார்கள்? இது சாத்தியமாகுமா? சரத் அய்யா எனக்கு என்றுமே அண்ணா தான்'

"டக் டக்" கதவு தட்டிக்கேட்கிறது. 'அப்பாவும் அம்மாவும் வந்துவிட்டார்களோ, பூக்கட்டிப் பார்த்த பெறுபேறு எப்படியோ?

கதவைத் திறந்ததும் "அக்கே!" என அழைத்துக்கொண்டு சுது உள்ளே வருகிறாள். சுதுவிற்கு ஏதாவது குடிக்கக் கொடுத்துவிட்டு சாவியைக் கொடுக்கலாம் என நினைத்தாள் சாந்தி. அவளை உள்ளே அழைத்துச் செல்கிறாள்.

"டும்...! டும்...!!டும்...!!!டும்...!!!......"

கொழும்பே அதிரும்படியாக பாரிய சத்தத்துடன் குண்டுகள் வெடிக்கின்றன. வெகு தூரமாக இருக்காது. அண்டர்சன் தொடர்மாடி யன்னல்கள், கதவுகள் அதிர்ந்தன. "அய்யோ அம்மே", "அய்யோ அம்மா" சுதுவும் சாந்தியும் ஒருவரை ஒருவர் கட்டிக்கொள்கின்றனர். சுதுவின் பிஞ்சுக்கரங்கள் நடுங்குகின்றன. சாந்திக்கு ஒரே கலக்கம். வெளியே போயிருக்கும் அப்பா, அம்மா, அண்ணா யாருக்காவது ஏதாவது....., சென்ற போயா அன்று நடந்தது போன்று அண்ணாவுக்கு ஏதாவது..... அவள் மனம் பதைபதைக்கிறது......

இன்று இந்நாட்டில் இரு இனங்களுக்கும் பொது மொழியாகி விட்ட "அய்யோ", அண்டர்சன் தொடர்மாடிச் சுவர்களில் மோதி எதிரொலிக்கிறது.

~1998~

# ஆடிப்பூசை

அந்தத் தோட்டத்திற்குப் போகும் பாதையில் - பண்டார வளை வெலிமடை பஸ்ஸிலிருந்து இறங்கி - காலடி எடுத்து வைத்ததும் செந்தில்குமாருக்கு பரவசமாக இருக்கிறது.

ஆட்கள் நெரிசலாக வந்த பஸ் அந்தச் சந்தியில் தரித்தபோது பாதிக்கு மேலானோர் இறங்கிவிட்டார்கள். இவர்கள் இன்று அந்தத் தோட்டத்தில் ஆரம்பமாகப்போகும் ஆடிப் பூசையுடன் ஏதோ ஒருவிதத்தில் சம்பந்தமானவர்கள் என்பதையும் அவர்களுள் தானும் ஒருவன் என்பதையும் எண்ணும்போது செந்தில்குமாருக்கு ஒருவித சமூகநேசஉணர்வு ஆட்கொள் கின்றது.

ஒருகணம் தரித்து நின்று பஸ்ஸில் இறங்கியவர்களை நோட்டமிடுகின்றான். டவுண் ஸ்கூலுக்குப் போய்வரும் பள்ளிப் பிள்ளைகள், ஆடிப்பூசையை முன்னிட்டு ஓரிரு நாட்களுக்கு முன்பு போடப்பட்ட சம்பளத்திற்கு டவுனுக்குப் போய் செலவு எடுத்துக்கொண்டு திரும்புபவர்கள், ஆடிப்பூசைக்கு விருந்தாளியாக வேறு தோட்டத்திலிருந்து வரு பவர்கள், அவனைப்போல் கொழும்பிலோ அல்லது வேறு ஊர்களிலோ வேலை செய்பவர்கள் ஆடிப்பூசைக்காக வீட்டிற்கு வருகிறார்கள். இத்தியாதி.... சிலர் அவனுக்கு அறிமுகமானவர்கள். சாரத்துடன் தோட்டத்தில் கண்ட

சில இளைஞர்களை லோங்ஸ் அணிந்திருக்கும் தோற்றத்தில் காணும்போது செந்தில்குமாரால் அடையாளம் காணமுடிய வில்லை. கைகாட்டிச்சந்தி என்று அழைக்கப்பட்டு இப்போது தோட்டத்தின் பெயரை முன்வைத்து டயராபா சந்தியென அழைக்கப்படும் அந்தச் சந்தியும் நீண்ட காலத்துக்குப்பின் வருபவர்கள் அடையாளம் காண முடியாத வகையில் மாற்றமடைந்து வருகிறது. அவன் டவுண் பாட சாலைக்குப் போன காலத்தில், சந்தியில் ஒரேயொரு கடைமட்டும் இருந்தது. இன்று எத்தனை கடைகள்! ஒரு குட்டி பஜாராகிவிட்டது. ஆட்டோக்கள் மூன்று வரிசையாக நிற்கின்றன.

ஆடிப்பூசையை சிறப்பிக்க மேளமும், மேளவாத்தியக் கலைஞர்களும் அதே பஸ்ஸில்தான் வந்தார்கள். அவர்களின் வரவுக்காகக் காத்திருந்த ஒருவர் கோயில் கமிட்டி புதிய அங்கத்தவராக இருக்கவேண்டும், "வாங்கம்மா திறிவீலில் போவம்". இரு பெண்களும் ஒருஆணும் ஏறுகின்றனர். ஆட்டோ தோட்டத்தை நோக்கிப் பறக்கின்றது. அங்கு நின்ற ஒரு வாலிபன், "இந்தப் பயணம் நம்ப பெரிய கோயிலிலை மேளம் அடிக்கிறதுக்கு பொம்பளை ஆள்கள்தான் வந்திருக்காங்க. இவங்க மொதல்ல தோட்டத்தில் வேலை செஞ்சவங்களாம் இந்த வருஷம் ஆடிப்பூசை ஜோராகத்தான் இருக்கும். இதனைக் கேட்டபோது செந்தில்குமாருக்கு மனம் பூரிக்கிறது. காலம் காலமாக மலைகளில் ஏறிக் கொழுந்தெடுக்கும் கரங்கள் இன்று கலை படைக்கும் கரங்களாக மிளிர்கின்றனவே.

அதே வாலிபன் அவனைப் பார்த்துக் கூறுகின்றான், "அண்ணே, டிக்காப்பிட்டியா பஸ் வரச் சுணங்கும். இண்டைக்கு காலையில இருந்து வானும் ஓடல்லை; வாங்க பேசிக்கிட்டே போவம். நானும் பச்சைமலைதான். நீங்க கொழும்பிலையிருந்து ஆடிப்பூசைக்கு வாறீங்க போலயிருக்கு. என்னை ஒங்களுக்குத் தெரியல்லையா. சாக்குக்கார சங்கிலிவூட்டு மகேன் தங்கையா. இந்தப்பயணம் என்னையேதான் பச்சைமலை ஆள்கள் நம்ம

யூனியன் தலைவராக்கியிருக்கிறாங்க.”

நல்லதோர் வழித்துணை கிடைத்துவிட்டது. பலதும் பத்தும் பேசிக்கொள்ளலாம் என செந்தில்குமார் எண்ணிக்கொண்டு தோட்டத்திற்குச் செல்லும் பாதையில் நடக்கத் தொடங்குகிறான்.

தேயிலை மலைகளிலே வருடிவரும் கூதல்காற்று அவனைத் தழுவிச் செல்கிறது. அவனுக்கு இனம் புரியாத கிளுகிளுப்பு ஏற்படுகிறது. கொழும்பில் தகிக்கும் வெய்யிலின் வியர்வையில் வெந்து வதங்கி மாசுபட்ட சூழல்காற்றை சுவாசிக்கும் அவனுக்கு இந்தக் காற்று இதமாகவும் இனிமை யாகவும் இருக்கிறது. மூன்று நான்கு மாதங்களுக்கு ஒரு தடவை வீட்டிற்கு வந்து போகும் செந்தில்குமார் எப்படியும் ஆடிப்பூசைக்கு வந்தே தீருவான். அவனுக்கும் ஆடிப்பூசைக்கும் அத்தியந்த தொடர்பு. அவன் பிறந்ததும் ஓர் ஆடிப்பூசையில், அவனுக்குத் தொழில் கிடைத்துக் கொழும்புக்குப் போனதும் ஓர் ஆடிப்பூசை முடிந்து அடுத்த நாள்தான். ஆடிப்பூசையை நினைக்கும் போது அவனுக்கு மனம் இனிக்கும். வாண்டுப்பயலாக ஆடிப்பூசை நாட்களில் கோயிலில் ஓடிப்பிடித்து விளையாடியது, சிறிது வளர்ந்ததும் கோயிலில் தோரணம் கட்டியது, காவடி ஆடியது, வாலிபப் பருவம் அடைந்ததும் ரதம் ஊர்வலம் வரும்போது அறிவிப்பாளனாகி ‘சிம்மக் குரலோன் குமார்’ என நண்பர் களிடையே பாராட்டுப்பெற்றது, கரகம் குடிவிட்ட அடுத்தநாள் நடைபெறும் கலை நிகழ்ச்சியில் பாட்டுக்குப் பாட்டு நிகழ்ச்சி நடத்தி முன்வரிசையில் அவன் பார்வைக்காக பார்த்துக்கிடக்கும் அவள் பாராட்டையும் பல்சுவை உணர்வு களையும் பெற்றது......!

ஒவ்வொரு தடவையும் ஆடிப்பூசைக்கு வந்து போகும் போது அம்மா அவனுக்குக் கால்கட்டுப்போடும் முயற்சியைச் செய்கிறாள். இன்னும் பொருத்தமாக ஒன்றும் வந்தமையவில்லை.

கொழும்பில் அவனுக்குக் கிடைக்கும் சொற்ப மாதச் சம்பளத்தில் கல்யாணம் செய்து குடும்பம் நடத்தமுடியுமா?

எங்காவது வேலைசெய்யும் ஒருத்தியைக் கைப்பிடித்தால்தான் காலத்தை ஓட்டமுடியும். ஆரம்பத்தில் அவன் வாழ்க்கையில் குறுக்கிட்ட அவள் இவ்வகையில் பொருத்தமானவளாகத்தான் இருந்தாள். ஆனால் அது......? இப்போது நினைவில் வரும் அவளைப் பெருமூச்சுடன் எண்ணிப் பார்க்கிறான்.

அப்பா அவனை எவ்வளவு கஷ்டப்பட்டுப் படிக்க வைத்தார். 'நம்மளைப்போல தோட்டத் தொழில் செஞ்சு கூலி வாழ்க்கை வாழக்கூடாது' என்ற வைராக்கியத்துடன் வாயைக்கட்டி வயிற்றைக்கட்டி டவுன் ஸ்கூலுக்குப் போய்வர மாதா மாதம் சீஸன் ரிக்கட், கொப்பி புத்தகங்கள்.. இயன்றளவு அவனது தேவையைப் பூர்த்திசெய்தார். அவனும் எத்தனையோ சோதனைகளுக்கு முகம்கொடுத்துப் படித்து, எப்படியும் ஒரு ஆசிரியராக வரவேண்டும் என ஆசைப்பட்டான்; முடியவில்லை. எத்தனையோ தடவைகள் முயற்சித்தும் ஓ.எல். கணித பாடத்தில் தேற முடியவில்லை. அப்பா விசுவாசமாக உழைத்து, அந்திப் பொழுதுகளில் பெரியகிளாக்கரின் மரக்கறித்தோட்டத்தில் பாடுபட்டுக் கொடுத்த உதவியால், அவனுக்கு ஐயா மூலம் கொழும்பில் கம்பனி ஒன்றில் அதன் உற்பத்திப்பொருள் விநியோகம் செய்யும் சேல்ஸ்மன்னாக வேலை கிடைத்தது. ஐந்து ஆண்டுகள் அதே சம்பளம்தான். 'பொஸ்'ஸைக்கேட்டால், ஓ.எல். பூர்த்தியாகாத தராதரத்தையே சுட்டிக்காட்டுவார்.

'அக்காவின் மகனுக்கும் இந்த அபாக்கியம் கிடைக்கக் கூடாது. அவனுக்கு ஆரம்பத்திலிருந்தே நல்ல கட்டுமானம் போடவேண்டும்'. அவனது அக்கா தலைச்சம் பிள்ளையைப் பெற்றபோது ஏற்பட்ட ஆபத்துச் சிக்கலிலிருந்து காப்பாற்ற பெரிய ஆஸ்பத்திரிக்கு உரிய நேரத்தில் எடுத்துச் செல்வதற்கு வாகன வசதி கிடைக்கவில்லை. கொழுந்துக் காலம், தோட்ட நிர்வாகத்துக்கு நேரடியான வருமானத்தைத் தரும் கொழுந்தே முக்கியம். அதனை உற்பத்தியாக்கும் உழைப்பாளி வாரிசாக ஓர் உயிரை இந்த உலகத்துக்கு விட்டு விட்டு அவள் உயிர்

நீத்து விட்டாள். அந்த அக்காவின் மகன் இன்று இவர்களில் ஓர் அங்கத்தவனாக வளர்கிறான். இந்த வருடம் ஐந்தாம் ஆண்டு ஸ்கொலஸிப் சோதனை எழுதியிருக்கிறான். அவனே எப்பொழுதும் முதலாவதாக வருவான். நேற்றுத்தான் ஸ்கொலஸிப் முடிவு வந்தது. கட்டாயம் சித்தியடைந்திருப்பான். 'அவனை நல்ல பாடசாலை ஒன்றில் விட்டுப் படிப்பிக்க வேண்டும்; எனக்கு நடந்தது அவனுக்கு நடக்கக்கூடாது.'

மலைப்பாம்புபோல முன்னே வளைந்து செல்லும் பாதையை நோக்குகிறான் செந்தில்குமார். பஸ்ஸில் அவனருகில் இருந்து வந்த மாணவி மிக வேகமாக நடந்து வெகு தூரத்தில் செல்வது தெரிகிறது. பாவம் பஸ்ஸில் அப்பிள்ளை பட்ட கஷ்டம்! தோட்டத்துப் பிள்ளைகள் டவுண் ஸ்கூலுக்குப் போகும்போது வழியில் படும் கஷ்டங்களைப்பற்றி அவன் கேள்விப் பட்டிருக்கிறான். சமீபத்தில்கூட பத்திரிகையில் ஒரு செய்தியைப் படித்தான். நாவலப்பிட்டிப் பகுதியில் பாடசாலைக்குச் சென்ற ஒரு மாணவிக்கு நடந்த கதி! மூவாயிரத்துக்கு மேற்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லாது பகிஷ்கரித்து, மாணவிக்கு ஏற்பட்ட அவலத்தைக் கண்டித்து ஆர்ப்பாட்ட ஊர்வலம் சென்று, சந்தேக நபரின் கொடும்பாவியை ஊர்வலமாக எடுத்துச் சென்று 'கட்டப்போலா' சந்தியில் வைத்து எரித்து, அந்த கொடும் பாதகனைச் சட்டத்தின்முன் நிறுத்திவைத்தனர்.

அவன் வந்த பஸ்சில் பின் சீட்டில் இப்பிள்ளை உட்கார்ந் திருந்தது. பெரும்பான்மையின மாணவர்கள் சிலர் பைலா பாட்டு படித்துக் கொண்டிருந்தனர். இப்பிள்ளையின் மனம் நோகும்படி ஏதாவது கிண்டல் செய்திருக்க வேண்டும். இடையில் பின் சீட்டில் இருந்து எழுந்து அவனருகில் உள்ள சீட்டில் உட்கார்ந்தது அந்தப் பிள்ளை.

அருகில் வரும் தங்கையாவும் அதனைப் பற்றியே பிரஸ்தாபிக்கின்றான். "அண்ணே, பஸ்ஸில் வர்றப்போ கவனிச் சிங்களா? பயல்கள் ஸ்கூலுக்குப் போற நம்ம பிள்ளைகளை

எப்படி கில்லாடி பண்ணிக்கிட்டு வந்தாங்கன்னு.”

‘‘ஆமா தம்பி, பொம்பிளைப் பிள்ளங்க ஸ்கூலுக்குப் போயிவர்றது பெரிய கண்டிப்பு.”

“நம்ம தோட்டத்துப் பிள்ளைங்களுக்கு இனியிந்தப் பிரச்சினையே இல்லை. நம்ம ஸ்கூல்லை பதினோராம் வகுப்பு வரை வைச்சிருக்கிறாங்க. டவுனுக்குப் போகவேண்டியதேயில்ல. நம்ம ஸ்கூல்லை டீச்சர் மாஸ்டர்மார் பதினைஞ்சி பேர் படிச்சுக் கொடுக்கிறாங்க. இப்ப ஸ்கூல பெரிசாக் கட்டியிருக்கிறாங்க. இருபது லட்சம் பணம் ஒதுக்கியிருக்கிறாங்களாம். ரெண்டுதட்டு போடுறாங்க. லெப்பு, பிரின்சிபல் குவாட்டஸ் எல்லாம் கட்டுறாங்க.”

செந்தில்குமார் தான் படித்த காலத்தில பாடசாலையிருந்த நிலையை எண்ணிப் பார்க்கிறான். மாட்டுத்தொழுவம் போன்ற ஒரு கட்டிடம். ஐந்தாம் வகுப்புவரை மட்டுமேயிருந்தது. கணவனும் மனைவியுமாக இரு ஆசிரியர்கள். இன்று எவ்வளவு முன்னேற்றம் அடைந்துவிட்டது. அக்காவின் மகன் எப்படியும் ஸ்கொலசிப்பில் பாஸ் பண்ணியிருப்பான். அவனைப் பற்றிய நினைவு செந்தில்குமாரை ஆட்கொள்ள ‘ஸ்கொலசிப் பாஸ்பண்ணினால் டவுணில் நல்ல ஸ்கூல்லை படிக்க இடம் எடுக்கலாம்.’ ஆடிப்பூசை முடிஞ்சி போறத்துக்கு மொதல்ல இதைச் செஞ்சிடனும்.

“அண்ணே, ஸ்கூலைப் பெரிசாக்கட்டி இத்தனை மாஸ்டர் டீச்சர்மார் இருந்தும் படிப்பிலை வேலையில்லை. பஸ் சுணங்கிச் சின்னு எட்டுமணிக்கு வாறாங்க. பஸ்ஸை பிடிச்சிடனும்னு ரெண்டு மணிக்கு பயணம் வெச்சிடுறாங்க. பிரின்சிபல் செமினாரு டிப்பாட்டுமென்ருன்னு, போயிடுறாரு. ஸ்கூல்லை படிச்சிக் கொடுக்கிறாங்கல்ல. ஸ்கூல் அபிவிருத்திக் கமிட்டியில நானும் இருக்கேன். போன வாரம் ஸ்கூல்ல ஒரு பிரச்சினை. ஒரு டீச்சர் வீட்டுவேல கொடுக்கிற கொப்பிய திருத்திறதே இல்ல. இதைக் கேக்கப்போக, ஒரு மாஸ்டர் ‘இவுங்க என்னா படிச்சி கிழிக்கவா

போறாங்க. படிச்சி என்ன டொக்டரா, என்ஜினியரா வரப் போறாங் களா? இவ்வளவு படிச்சுக் கொடுத்தா போதும்' அப்படி என்றார்."

செந்தில்குமாருக்கு, கையில் பிரம்புடன் ஐந்து வகுப்புக் களையும் அபாரத் திறமையுடனும் கடமையுணர்வுடனும் கட்டி மேய்த்த, தனக்குப் படித்துக் கொடுத்த அந்த மாஸ்டரை எண்ணிப் பார்க்கிறான். இன்றும் அவரை நினைக்கும்போது பயமாகவும், ஒருவித மரியாதையுமாக இருக்கிறது.

"அண்ணே, இந்த வருஷம் ஸ்கொலஸிப்ல எத்தன புள்ளைக பாஸ் பண்ணியிருக்காங்க தெரியுமா?" செந்தில்குமார் ஆவலுடன் பதிலை எதிர்பார்க்கிறான். 'அக்காவின் மகன் எப்படியாவது பாஸ் பண்ணியிருப்பான்; கெட்டிக்காரன்'.

"இந்த வருஷம் ஒருத்தரும் பாஸ் ஆகல்ல" செந்தில் குமாருக்கு அதிர்ச்சியும் கவலையுமாக இருக்கின்றது.

அவன் படித்த காலத்தில் இருந்த நிலையுடன் இன்றைய நிலையை ஒப்பிடுகின்றான். லயத்துக் காம்பராவில் நிலத்தில் சாக்கை விரித்து, குப்பி விளக்கு ஒளியில் கஷ்டப்பட்டுப் பாடம் படித்தான். அன்று அவர்கள் இருந்த பதினெட்டுக் காம்பரா கொண்ட பெரிய லயத்தில், அம்மா வேலைவிட்டு வந்து அடுப்புக்குப் பச்சைமிலார் வைத்து ஊதி, பரப்பும் புகை மூட்டத்தில் படிக்க முடியாமல் கண்கள் எரியும். அடுத்த காம்பரா காத்தையா அந்திபட்டால் குடித்துவிட்டு வந்து தினமும் வீட்டில் ஏதாவதொன்றை வைத்து சண்டை இழுத்து கெட்ட பேச்சுக்களை விட்டு வீசுவது காதில் நாராசமாக வந்து விழும். பூசாரி பூவலிங்கம் உடுக்கடித்து கோடங்கி பார்க்கும் சத்தம், சாமியழைப்பது, கேள்வி சொல்லுவது.... இவையெல்லாம் படிக்கும் பாடத்தில் சிந்தையை செலுத்தவிடாது. இன்று அவர்கள் இருப்பது சந்ததியற்ற இரு குடும்பங்கள் மட்டும் வாழும் 'குவாட்டர்ஸ்' லயம். வீட்டுக்கு லயிட்டும் வந்துவிட்டது. பாடசாலைகளில் எத்தனை வசதிகள், மேல்மாடிக் கட்டடங்கள், தளபாடங்கள், இலவசப் புத்தகங்கள்,

இலவசச் சீருடை, மலையகத்தைச் சார்ந்த ஆசிரியர்கள், கல்வி அதிகாரிகள் எல்லாம் இருந்தும் கல்வி வளர்ச்சி அடைய வில்லையே! அவனுக்கு அது ஏன் என்று தெரியவில்லை. கற்றலுக்கான சூழல் இல்லையா? சமூகப்பொருளாதாரக் காரணங் களாக இருக்குமா? தோட்ட மக்களின் கல்வியின் தோற்றம்....? புதிதாக நாட்டப்பட்ட தேயிலைக் கன்றுகளை சிறார்கள் பிடுங்கி விடாமல் பாதுகாப்பதற்காகப் பிள்ளைகளை அடைத்து வைக்கும் நோக்குடனேயே தோட்டங்களில் வெள்ளைக்காரர்கள் பாடசாலைகளை ஆரம்பித்தார்களாம். ஒரு குழந்தை பிறக்கும் போது நிறை குறைவாக இருந்தால் அதன் வளர்ச்சி குறைவாக இருக்குமாம். நமது கல்வி வளர்ச்சி ஒரு நீண்ட பயணமே.'

தங்கையாவின் தோளில் தொங்கிக் கொண்டிருந்த 'றவலிங் பேக்' பாரமாக இருந்திருக்க வேண்டும், அதனை மற்றத் தோளுக்கு மாற்ற, உள்ளிருக்கும் போத்தல்கள் மோதும் சத்தம் கேட்கிறது.

எதிரே அழகாக உடுத்தி ஒரு இளவயதுப் பெண் அவர்களைக் கடந்து செல்லும் போது, "தங்கையா அண்ணே, ஆடிப்பூசைக்கு சாமானு கொண்டு போறீங்க போலிருக்கு. ஆடிப்பூசை டைமுக்கு நல்ல பிசினஸ் நடக்குந்தானே." முகத்தை உயர்த்தி ஒரு வெட்டு வெட்டி, வெண்கலக் குரலில் கூறிக்கொண்டு அவர்களைக் கடந்து செல்கிறாள். குதியுயர்ந்த பாதணிகளின் சத்தமும், வெளிநாட்டு செண்டின் வாசமும் பரவுகின்றன.

"ஒனக்கு வெளிநாட்டுக்குப் போயும் அந்த வாய் குறையல்ல." செந்தில்குமாரும், தங்கையாவும் அவளைத் திரும்பிப் பார்க்கிறார்கள். "அண்ணே, இவங்க ஆர் தெரியுமா? வாய்க்கார வள்ளியம்மாவூட்டு மக. தோட்டத்தில வேல செஞ்ச புள்ள, இப்ப சவூதியில ரெண்டு வருஷம் இருந்திட்டு வந்திருக்கு."

இந்தப் பெண்ணின் வெண்கலக் குரலையும் கில்லாடிப்

பேச்சையும் கேட்டபோது, செந்தில்குமாருக்கு தாமரைச்செல்வியின் நினைவு வருகிறது. அவளும் எப்போதும் கில்லாடியாகவே பேசுவாள். அவள் பேசும்போது அங்கமெல்லாம் அபிநயம் செய்யும். காதல் எப்போது தொடங்குகிறது எனச் சொல்லமுடியாது என்பார்கள். ஆனால் இருவரினதும் காதல் ஆரம்பமானது ஆடிப்பூசையில் மஞ்சள் தண்ணீர் விளையாடிய நாள் ஒன்றிலே தான். ஒவ்வொரு ஆண்டும் மஞ்சள் தண்ணீர் விளையாடும் நாளில் அவள் எங்கிருந்து எப்படி வருவாளோ தெரியாது. அவனுக்குப் பல தடவைகள் மஞ்சள் தண்ணீர் ஊற்றி திக்குமுக்காட வைத்துவிடுவாள். இன்று அவள் வேறுயாருக்கோ சொந்தமாகி விட்டாள். சாதிப் பிரச்சினையே அவர்கள் காதலுக்குக் குறுக்காக இருந்தது. அவள் மனத்திடமாகவே நின்றாள். அவளது பெற்றோர்கள் வேறு தோட்டத்தில் ஒருவனுக்குக் கல்யாணப்பேச்சு ஆரம்பித்த காலத்தையடுத்து வந்த ஆடிப்பூசைக்கு அவன் வந்தபோது, அன்னப்பூசை நடக்கும் தினத்தன்று இரவு ரதம் வீதிவலம் வரும் நேரம் இருவரும் ஓடிவிடுவோமா என அவளே துணிந்து கேட்டாள். அவன் கோழையாக, முடிவெடுக்க முடியாமலேயே ‘அப்பறம் பாப்பம்’ எனக் கண்கலங்கினான். அவள் அந்த வருடம் மஞ்சள் தண்ணீர் விளையாடும் போது, “இதுவே உங்களுக்கு நான் கடைசியாக ஊத்தும் மஞ்சத் தண்ணி” எனக் கண்கலங்கியவாறு ஊற்றினாள். இந்நிகழ்வு அவன் நினைவில் மஞ்சள் தண்ணீர் கறைபடிந்த உடுப்பாக நெஞ்சில் கறைபடிந்து நிற்கின்றது. வாழ்க்கையில் முதல் தடவையாக குறுக்கிடும் அன்புக்குரியவர்களின் நினைவுக் கோலங்கள் என்றும் அழியாது நெஞ்சில் பச்சை குத்தப்பட்டு விடுகிறது. ‘அவளுக்கும் அப்படித்தானோ?’

அவளைக் கட்டிக்கொடுத்த தோட்டத்தில் இருந்து அவள் ஒவ்வொரு ஆடிப்பூசைக்கும் இந்தத் தோட்டத்துக்கு வருவாள். இந்தத் தடவையும் வரவிருப்பதாக அவனது தங்கை கடிதம் எழுதியிருந்தாள். அவனையறியாமல் பெருமூச்சொன்று வெளிவருகிறது. சென்ற வருடம் ஆடிப்பூசைக்கு வந்தபோது

அவளையும் குழந்தைகளையும் கணவனுடன் கோயிலில் சந்தித்தான். அவனைக்கண்டதும் அவள் முகத்தில் ஏற்பட்ட மாற்றம்.....! தன்னைச் சுதாகரித்துக்கொண்டு கணவனுக்கு அவனை அறிமுகப்படுத்தினாள். தனது கௌதமி, பிரசாந் என்ற இரு குழந்தைகளையும் காட்டினாள். கௌதமி அம்மாவைப் போல் அழகாக இருந்தாள்; சுருண்டகேசம், சிரிக்கும் போது கன்னத்திலே குழி! . இப்போது அவள் இருக்கும் தோட்டத்தில் அவனுக்குப் 'பொண்ணு' பார்த்திருப்பதாக அவனின் தங்கை விபரமாகக் கடிதத்தில் எழுதியிருந்தாள். 'தாமரைச்செல்வி அக்கா அவுங்க அண்ணே மகவூட்டு சடங்குக்கு வந்திருந்தாங்க. நம்ம வூட்டுக்கும் வந்திருந்தாங்க. அவுங்கதான் பொண்ணு ஒண்ணு பேசியிருக்காங்க. 'காமண்ட்டுல' வேலை செய்யிதாம். நம்ப ஆட்கள் தானாம். நல்ல குடும்பமாம். அண்ணன் தம்பி எல்லாம் இருக்காங்களாம். ஆடிப்பூசைக்கு தாமரைச்செல்வி அக்கா வர்ரப்போ அவுங்ககூட பொண்வூட்டுக் காரங்களும் வர்றாங்களாம். நம்ம வூட்டுக்கும் வருவாங்களாம். தாமரைச்செல்வி அக்காவுக்கு பொண்ண நல்லாப் புடிச்சிருக்காம். அம்மா சொல்றாங்க, 'இந்த ஆடிப்பூசை முடிய ஆவணி பிறந்திடும். அப்பாவூட்டு புரொவிடன்பண்டு சல்லியும் வந்திரிச்சி. கல்யாணத்த ரொம்ப சிறப்பா செய்யணும்னு.'

தங்கையா அவனது சிந்தனையைக் கலைக்கின்றான். "அண்ணே, நம்ப தோட்டத்துல ரொம்பப் புள்ளைங்க வெளி நாட்டுக்குப் போயிடுறாங்க. இப்ப ஆட்களுக்குத் தோட்டத்துல வேல செய்ய விருப்பம் இல்ல. தோட்டம் மொதல்ல மாதிரி இல்ல. தோட்டங்கள கொம்பனிக்கு எடுத்த பிறகு ஒருநாளைக்கு வேலை செஞ்சு பேர் போடுறது ரொம்ப கண்டிசன்."

"கொம்பனிக்காரங்க லாபம், வருமானம், இதுலதானே கண்ணாயிருப்பாங்களே."

'சரியாச் சொன்னிங்க அண்ணே, கோஸ்ட்டைக் கொறைக் கிறதென்று ஆளுகள ரொம்பக் கண்டிசன் பண்ணுறாங்க.

மொதல்ல கவாத்து வெட்ட ஒரு ஏக்கருக்கு இருபத்தேழு ஆட்கள் போடுவாங்க. இப்ப இருபதே ஆளுதான். புல்லு வெட்ட, ஒரம்போட, மருந்தடிக்க, கான்வெட்ட, முள்ளுக்குத்த இப்புடி எல்லாத்துக்குமே ஆள் கொறைச்சிகிட்டு வர்றாங்க. வேல முடிக்கேல்லன்னா அரைப்பேரு போடுறாங்க.'

'இப்புடி ஆள் கொறைச்சிக்கிட்டு வந்தா, ஆட்களுக்கு மாச்சல் ஒருபக்கம் வேலையும் துப்புரவா இருக்காதே'

"ஆமா றோட்டுக்கரைகள மட்டும் செஞ்சிட்டு வாறாங்க. அவங்களுக்கு தோட்டத்த நல்லா வச்சு இருக்கணும்னு கவலையில்ல. பழைய மரத்த எல்லாத்தையும் வெறகுக்கு வெட்டுறாங்க. நல்ல மரங்கள தொரமாரும் டிரக்டர்மாரும் பங்களாவுக்கு லொறியில ஏத்திக்கொண்டு போறாங்க. நம்மளுக்கு இருக்கிற சலுகையெல்லாம் கொறைச்சிட்டுப் போறாங்க. இதன எடுத்துச்சொன்னா கொழப்பக்காரன் என்குறாங்க. பழிவாங்கப் பாக்கிறாங்க. துவேசத்த வேற தூண்டுறாங்க. புதுத்தொரமாரு வர்றாங்க. அவங்களுக்கு வேலையொண்ணும் வெளங்க மாட்டேங்குது. பெரியவூட்டுப் புள்ளைக.... இதுதான் அவுங்க வூட்டுபடிப்பு. நம்ப தோட்டத்துக்கு ஒரு சின்ன தொர வந்திருக்காரு, தோட்டத்த கொழப்பம் பண்ண. பொலிச கையில வச்சிக்கிட்டு ஆளுகள பயமுறுத்தப் பாக்கிறான். இருந்து பாருங்க அண்ணே கிட்டத்துல நம்ம தோட்டத்துல இஸ்டிரைக்கு ஒண்ணு வரும். நம்ப பிரச்சனயெல்லாம் யூனியன்ல பேசியிருக்கோம். நம்ப கோரிக்கைகளயெலலாம் ஒண்ணா வச்சிடுவோம். மொதல்ல சின்ன தொரய மாத்திப் போடணும். பசறையில நல்லா பாடம் படிச்சுக் கொடுத்திட்டாங்க.... ஒங்களுக்கு தெரியும்தானே".

செந்தில்குமார் தங்கையாவின் கருத்துக்களை ஆமோதிப்பது போல் தலையை ஆட்டுகிறான்.

தூரத்தில் பொலிஸ் ஜீப் ஒன்று வருவது தெரிகின்றது. அது சிறிது தூரத்தில் நிறுத்தப்பட்டு பஸ்ஸில் இறங்கிப்

போவோரின் டிறவலிங்பேக், குட்டிச்சாக்கு, சாமான்கள் ஆகியவை சோதனையிடப்படுகின்றன.

செந்தில்குமாருக்கு வியப்பாக இருக்கின்றது. ‘கொழும்பிலேதான் போகும் வழிப்பாதைகளில் சோதனையென்றால் இங்குந்தானா சோதனை?’. சட்டைப் பையிலிருந்து அடையாள அட்டையை வெளியில் எடுத்தவாறு திரும்பிப் பார்க்கிறான்; தங்கையாவைக் காணவில்லை. எப்படி மறைந்தானோ தெரியவில்லை.

அருகில் அரிசி போடும் அய்யாத்துரை நிற்கிறார். “மாமா, எங்க போயிருந்தீங்க?”

“நீங்க வந்த பஸ்சுலதான் நானும் பண்டாரவளையில இருந்து வந்தேன். சந்தியில கொஞ்சம் சுணங்கிருச்சு. பேரனுக்கு ஆடிப்பூசைக்கு டெயிலர்கிட்ட தைக்கக் கொடுத்த காற்சட்டையை வாங்கிக்கிட்டு வாரேன்.”

பொலிஸ் ஜீப் தரித்திருந்த இடத்தில் சோதனையை முடித்துக்கொண்டு கீழே வருகின்றது. செந்தில் குமார், அய்யாத்துரை, இன்னும் சிலர்முன் தரித்து நிற்கின்றது. பொலிஸ்காரர்கள் ஜீப்பில் இருந்து குதித்து அங்கிருந்தவர்களின் சாமான்கள், பைகள் யாவற்றையும் திறந்து பார்க்கிறார்கள். கொழும்பில் பொலிஸைக் கண்டதும் அடையாள அட்டை காட்டும் பழக்க தோஷத்தில் செந்தில்குமார் தனது அடையாள அட்டையை நீட்டியவாறு கொழும்பில் இருந்து ஆடிப்பூசைக்கு தோட்டத்திற்கு வருவதாகக் கூறுகிறான்.

பொலிஸ்காரன் ஒருத்தன் அடையாள அட்டையை மேலோட்டமாகப் பார்த்துவிட்டு அவனது பேக்கை அமுக்கிப் பார்க்கிறான். அக்காவின் மகனுக்கு ஸ்கொலசிப் பாஸ் பண்ணினால் கொடுப்பதற்கு பரிசாக வாங்கி வந்த பார்சல் அமுங்கி நசுங்குகிறது. பொலிஸ்காரன் கையில் ஏதோ உருண்டையாகத் தட்டுப்படுகின்றது. “என்ன இது? கொழும்புல

இருந்து பொம்ஸ் கொண்டு வர்றது" செந்தில் குமார் பேக்கில் இருந்த அப்பிள் பழத்தையெடுத்துக் காட்டுகிறான். அடுத்து அய்யாத்துரையின் குட்டிச்சாக்கை அமுக்க, போத்தல் ஒன்று தட்டுப்படுகிறது. "அடே நீ லயத்துல சாராயம் விக்கிறது தானே" என்று மிரட்டுகிறான். அவர் குட்டிச்சாக்கைத் திறந்து காண்பிக்கின்றார். அதற்குள் ஆடிப்பூசைக்கான பன்னீர் போத்தல், அபிஷேகச் சாமான்கள் தான் இருக்கின்றன. செந்தில்குமாரும், அய்யாத்துரையும் ஜீப்பைத் திரும்பிப் பார்க்கிறார்கள். அதற்குள் தோட்டத்து ஆட்கள் சிலர் கள்ளுமுட்டியுடனும், கசிப்புக் காய்ச்சும் பாத்திரங்களுடனும், பாதியுடைத்த சாராயப் போத்தல்களுடனும் மிரள மிரள விழித்துக் கொண்டிருக்கிறார்கள். ஜீப் புறப்பட்டு கீழே போகிறது.

"இண்ணக்கி ரொம்ப ஆட்கள் அகப்பட்டிருக்கிறாங்க போல இருக்கு. தங்கையா தொண்ணுத்து ஒன்பதுல தப்பிச்சிட்டான். இப்ப கொண்டாந்த சாமான்களோட பிடிபட்டிருந்தா கம்பிதான் எண்ணனும்." என்றார் அய்யாத்துரை.

"மாமா, இவன் தோட்டத்து தலைவர் எண்டு சொல்லிக் கிட்டானே. பாருங்க பொலிஸைக் கண்டு எப்படி மாறிகிட்டானு".

"ஆமா தம்பி, நம்ம தலைவர்மார் எப்படியும் தப்பிச்சிடுவாங்க; பொழைச்சிகிருவாங்க."

"நம்ம தோட்டத்துல குடிப்பழக்கம் ரொம்ப மோசமாயிருச்சி மாமா."

"சொல்லி வேலையில்ல தம்பி, லயத்துக்கு லயம் கள்ளுமுட்டி, வீட்டுக்கு வீடு சாராயம், கசிப்பும் வேற வந்திருச்சி. சின்னப் புள்ளைங்களும் குடிச்சுப் பழகிறாங்க. அந்திப்பட்டா கடைத்தெருவுக்கு போக முடியல. சம்பளம் போட்டா, கூப்பன் சல்லி கொடுத்தா, ஒரே தீபாவளிதான் லயத்தில."

"என்ன தம்பி, இந்தத் தோட்டத்துல பரம்பரையா இருக்குற நீங்க ஐடென்டி கார்ட்டைக் காட்டியா அடையாளங்

காண்பிக்கணும்? ஒங்க பாட்டன், பூட்டன்தான் இந்தத் தோட்டத்தில கொட்டைத் தேயில போட்டாங்க. எப்புடித் தம்பி கொழும்பில தமிழாக்களுக்கு பெரிய பெரச்சினையாமே? செக்கிங் மோசமாமே? ஒரு வயசுப் பொடியங்களைப் பொலிஸ் புடிச்சுக்கிட்டுப் போறாங்களாமே"

"ஆமாம் மாமா, நாம ரொம்ப அவதானமாத்தான் இருக்கோம். எங்க போனாலும் பொலிஸ் ரிப்போட்டையும், ஐடென்டிக் கார்ட்டையும் கையில எடுத்துக்கிட்டுதான் போவோம்."

"நம்ம மருமகன் - தங்கச்சிவூட்டு மகனை ஆடிப்பூசைக்கு வரும்படி காயிதம் போட்டிருந்தோம். அவன் நாட்டு நிலமை சரியில்ல வரக்கிடைக்காது; ஆடிமாசம் நம்மளுக்கு 'அடி'ப்பூசை நடக்கின்ற மாசம் என எழுதியிருக்கான்."

"ஆமா, நாம ஈந்தியாவிலிருந்து வந்து இந்த நாட்டுல எத்தன அடிப்பூசையைக் கண்டிட்டம். எண்பத்து மூணாம் ஆண்டு அடிப்பூசை வன்செயல், நம்ம பதுள பண்டாரவளைப் பகுதியை ரொம்ப பாதிச்சிருச்சி. இப்ப நடக்கிற சங்கதிகள பார்த்தா, இனி அடிச்சவங்களுக்கு நம்ப திருப்பி அடிப்பூசை கொடுத்து வெரட்டியே போடுவோம்."

"தம்பி, நாட்டுல துவேசம் ரொம்ப மோசமாயிருக்கு. நாங்க பஸ்சுல வர்றப்போ பின் சீட்டில் இருந்த ரெண்டு பேர் துவேசம் பேசிக்கிட்டத கவனிச்சீங்களா?"

செந்தில்குமார் அந்த இருவரினதும் உரையாடலை நினைவு படுத்துகிறான். 'மலைநாடு போற போக்கப் பார்த்தா நம்முடைய இனத்துக்கு இடமே இல்லை போலத் தெரியிது. இவர்களுக்கு பிரசாவுரிமை, வாக்குரிமை கொடுத்ததுதான் தவறு. சமீபத்தில் நமது மகாநாயக்க தேரோ சொன்னதுபோல கிராம சேவகர் போன்ற நியமனங்களை இவங்களுக்குக் கொடுத்தா எமது தனித்துவம் அழிந்துவிடும். எமது இனத்தவர்களுக்கு இறந்துவிட்டால் அடக்கம் செய்ய மலைநாட்டில இடமே

இல்லாமல் போய்விடும். பாருங்க நமுனகல நாட்டில, பசறையில நடந்ததை.... இவர்கள் கை ஓங்குகிறது....'

வானம் இருண்டு வருகிறது. "தம்பி, ஒரு மாசமா மழையில்லை. மலையெல்லாம் காஞ்சிபோய்க்கிடக்கு... கொழுந்து கொறைஞ்சிருச்சி. ஆளுகளுக்கு வேலையும் நாலு அஞ்சி நாள் தான் கொடுக்கிறாங்க. இன்னிக்கி நாளக்கி மழை வரும்போல தெரியுது. நம்ம தோட்டத்தில ஆடிப்பூசை கும்பிட்டால் புல்லுமலை மாரியம்மன் அருளால் மழை வந்தேதீரும்."

வரட்சி மிகுந்த ஆடிமாதத்தில் ஊவா மாகாணத்தில் சாமி கும்பிடும் திருவிழாவாக ஆடிப்பூசை நடைபெறும் நிகழ்வினை அர்த்த புஷ்டியுடன் உணர்ந்து கொள்கிறான் செந்தில்குமார்.

ஆடிப்பூசையின் கலகலப்பைக் காட்டிநிற்கும் ஒலிபெருக்கி ஓசை தூரத்தே மெல்லிய ஒலியில் கேட்கிறது. அவனது அப்பாவிற்கு பரம்பரையாக ஆடிப்பூசைக்கு காப்புக் கட்டப்பட்டு வந்தது. அவர் கடந்த மூன்று வருடங்களாக மகனைக் காப்பு கட்டும்படி வேண்டிக் கொண்டதால், அவனுக்கே இப்போது காப்புக் கட்டப்படுகிறது. அய்யாத்துரையும் காப்பு கட்டப்படுபவர்களில் ஒருவர். கோயில் வைபவங்களில் அதிக ஈடுபாடு கொண்டவர். செந்தில்குமார் இந்த வருட ஆடிப்பூசை நிகழ்ச்சிகளின் விபரங்களை அய்யாத்துரை மாமாவிடம் இருந்து அறிந்து கொள்ள முயல்கிறான்.

"தம்பி, இண்ணைக்கி காலயில எட்டு மணிக்கு நல்ல நேரத்துல, நம்ம பெரிய கோவிலில முகூர்த்தக்கால் ஊன்றி பந்தல் போட்டிட்டாங்க. இண்ணைக்கு இரவைக்கு காப்புக் கட்டி கொடியேற்ற நல்ல நேரம் எட்டுமணி எண்ணு பண்டாரத்தய்யா சொல்லிக்கிட்டாரு. அதுக்கப்புறம் தெப்பக் கொளத்துக்கு போய் கரகம் பாலிச்சி, சாமி அழைச்சி, குறிப்பெடுத்து, கோயிலுக்குவர எப்படியும் இரவு ணெ்டு மணியாகிடும். நாளக்கி அன்னப்பூசை; தெப்பக் கொளத்துக்குப்போய் காவடி பாலிச்சி பால்

கொடமெடுத்து, கோயிலுக்கு வர பகல் ஒரு மணி ஆகிடும். பூசாரி பூவலிங்கத்தோட பறவக் காவடியும் இருக்குதாம். கோயில்ல தீக்குளிப்பும் இருக்கு. பெரியதுரையும் வாறேன்னு சொல்லி யிருக்காரு. நான்தான் பாக்கு வைச்சென். “கண்டிப்பா அன்னப்பூசைக்கு வர்றேன் கங்காணி” அப்பிடின்னாரு. அன்னப் பூசை அன்னிக்கு இரவுதான் ரதம் எடுப்போம். ரதம் லயம், பங்களாக்காடு, டயராபா சந்தி எல்லாம் சுத்தி கோயிலுக்கு வர விடிஞ்சிடும். சனிக்கிழம மாவிளக்கு எடுக்கிறது. அன்னிக்கிரவில நம்ம பொடியன்கள் ஏதோ கலைநிகழ்ச்சி, நாடகம், பாட்டுக்குப் பாட்டு வைச்சிருக்காங்களாம். ஞாயிற்றுக்கிழம காலையில பொடியன்கள் ஏதோ விளையாட்டுப் போட்டி வைக்கிறதா பேசிக்கிட்டாங்க. கிறீஸ் மரம் ஏறுறது, இன்னும் விளையாட்டுக்கள் வைப்பாங்க போலிருக்கு. ஞாயிற்றுக்கிழம நேரத்தோட கரகம் குடிவிட்டுறோனும். அந்திப்பட்டா தெரியுந்தானே நம்ம தோட்டத்து நிலம. சும்மா கொழப்பம் இழுத்துக்கிட்டு இருப்பாங்க. கரகத்த குடிவிட்டு வந்து கோயில பூட்டிவிட்டா அப்புறம் எட்டு நாள் கழிச்சிதானே கோயில திறந்து பூசசெஞ்சி கொடிமரம் இறக்கி இடும்பன் பூசை போடுறது.”

“மாமா, ஆடிப்பூச முடிய ஏன் எட்டு நாளா கோயில மூடி வைச்சிருக்காங்க. நா கொழும்புல ஒரு பிராமண ஐயர்கிட்டே கேட்டுப் பார்த்தேன். கோயில பூட்டி வைக்காது தெனமும் நித்திய பூசை நடாத்தனுமாம். அந்தக் காலத்தில வெள்ளைக்கார தொரைமாருங்க, ‘ஆளுங்க தோட்டத்தில நாலஞ்சு நாள்கள் ஆடிப்பூசையை ஆடிப்பாடி கொண்டாடிட்டாங்க..... தொடந்து விட்டா வேலை வெட்டிய கவனிக்கமாட்டாங்க....’ அப்பிடியின்னு இப்படி ஒரு வழமையை ஆரம்பிச்சாங்களோ தெரியல. ஊவா மாகா ணத்தில சில இடங்கள்ள கோயில மூடிவிடுற வழக்கத்தை வுட்டிட்டாங்க.. நம்ம தோட்டத்தில அப்புடி செஞ்சா என்ன மாமா.”

“என்ன தம்பி, நம்ப தோட்டத்தில ஒத்துக்குவாங்களா...? நாங்க சொன்னா கேட்பாங்களா? தொட்டதுக்கெல்லாம் சண்ட.

காப்பு கட்டுறப்போ சண்ட எனக்குக்கட்டல ஒனக்கு கட்டல எண்ணு... தெப்பக்கொளத்தில கரகம் பாலிக்கையில சண்ட. அன்னப்பூச நேரத்திலயும் அடிச்சிக்கிறாங்க. சாமி தூக்கேயிலும் சண்டபோடுறான். ரதம் இழுக்கிற நேரமும் சண்ட, கரகம் குடிவிடுற நேரமும் குடிச்சுப்புட்டு சண்டையை இழுத்துக்கிறான். செலவுக் கணக்குப் பாக்கிறதிலையும் சண்டை...”

“தம்பி, ஆரம்பத்துல நம்ப தோட்டதுல புல்லுமாரி என்று சொல்லி ஒரேயொரு மாரியம்மன் கோயில்தான் இருந்திச்சி. அதுதான் பெரிய கோயில். ஒரு ஆடிப்பூசையில சாதிப் பிரச்சனையில கொஞ்ச ஆளுக பிரிஞ்சி ஒரு கோயில ஆரம்பிச்சாங்க. அப்புறம் அந்த சாதிக்காறங்களே யூனியன் பிரச்சனயில பிரிஞ்சி புதுக்கோயில் ஒன்றைக் கட்டினாங்க. இப்ப மூணு கோயில். ஒரே கோயிலாக இருந்தா எவ்வளவு சிறப்பா ஆடிப்பூசைய செய்யலாம். ஆள்கள் மூணா பிரிஞ்சி போயிட்டாங்க.”

“இல்ல மாமே, காலத்துக்குத் தக்கபடி யோசிக்கிற பொடியன்கள் ரொம்பப் பேர் நம்மள்ள இருக்குறாங்க. இத நல்ல முறையில எடுத்துச் சொன்னா கண்டிப்பா கேட்பாங்க.”

பொடிமெனிக்கா அபிஷேகத் தட்டுடன் எதிரே வந்து கொண்டிருக்கிறாள். தட்டு பலவிதமான பழங்களால் நிறைந்து கிடக்கிறது. “புத்தா எப்புடி சொகமா? கொழும்புல இருந்து ஆடிப்பூசைக்கு வர்றது. நா கோயிலுக்கு போயிட்டு வர்றது. நாளைக்கு எங்கட சொந்தக்காரனுக்கு தானம் இருக்குது. அது தான் இன்னிக்கு கோயிலுக்கு போயிட்டு வர்றது.”

செந்தில் குமார் பிறந்த வளர்ந்த பெரிய லயத்தில், இவர்கள் குடியிருந்த காம்பராவிற்கு அடுத்த காம்பராவில் பொடிமெனிக்கா வசித்து வந்தாள். இரு குடும்பமும் தாய் பிள்ளைகள் போலவே உறவாடின. செந்தில்குமாரும் பொடிமெனிக்காவின் கடைசிமகன் சிறிசேனவும் ஒரு ஆடிப்பூசை

நாளில் பிறந்தார்கள். செந்தில்குமார் பிறந்தபோது அம்மாவிற்கு மார்பில் கட்டிவந்து பால் கொடுக்க முடியாமல் இருக்க பொடிமெனிக்கா பாலூட்டி வளர்த்தாள். பொடிமெனிக்கா இப்போது நாட்டில் நிலம் கிடைத்து தோட்டத்தைவிட்டுப் போய் விட்டாள்.

செந்தில்குமார் சிங்களத்தில் அவர்களது குடும்ப சுகத்தை விசாரிக்கிறான். ஆனால் அவளோ தமிழில் வலிந்து பேசுகிறாள்.

"புத்தா, உங்க அம்மாவை நேத்து கண்டது. நீங்க ஆடிப்பூசைக்கு வாறதுன்னு சொன்னது. நீங்க இன்னும் கல்யாணம் இல்லே. ஆனா நம்ம மகன் சிறிசேனா கலியாணம் செஞ்சு ரெண்டு புள்ளையும் இருக்கு. அம்மா சொன்னது புத்தாவுக்கு இந்தப் பயணம் ஆடிப்பூசைக்கு வர்ரப்போ பொண்ணு பார்த்து கல்யாணம் செஞ்சு வைக்கிறது. நம்மளுக்கு கல்யாணத்துக்கு சொல்லியனுப்புறது."

பொடிமெனிக்கா அவனின் முகத்தைத் தடவி அபிஷேகத் தட்டிலிருந்த விபூதியை எடுத்து அவனது நெற்றியில் வைத்துப் பொட்டுமிடுகிறாள். பின்பு தட்டிலிருந்த வாழைப் பழங்களில் இரண்டை எடுத்து அவனிடம் நீட்டுகிறாள்.

அவன் பையைத் திறந்து ஓர் அப்பிள் பழத்தையெடுத்து "அம்மே, இதை உங்க மகன்வூட்டுப் பிள்ளைக்குக் குடுங்க" என்று கூறிக்கொண்டு தட்டில் வைக்கிறான்.

"நான் போட்டு வாறது."

பொடிமெனிக்கா நெற்றியில் வைத்த பொட்டுடன் செந்தில் குமாருக்கு இந்த வருட ஆடிப்பூசை ஆரம்பமாகிறது. கோயிலி லிருந்து வரும் ஒலிபெருக்கி ஓசை இப்போது தெளிவாகக் கேட்கத் தொடங்குகிறது.

வரக்கட்டான குத்து ஏற்றம் ஒன்றினை ஏறி உயரத்துக்கு வந்துவிட்டான் செந்தில்குமார். ஆடிப்பூசைக்கு விழாக்கோலம் கொண்ட மூன்று கோயில்களும் அவன் கண்முன்னே தெரிகின்றன.

ஒலிபெருக்கியின் ஓசை காதைப் பிளக்கிறது.

புதுக்கோயிலில் புதிய பிரபல சினிமாப்பாடலொன்று ஒலிப்பெருக்கியில் ஒலிக்கிறது. பெரிய கோயிலிலிருந்து ஒலிபெருக்கியில் பக்திப் பாட்டு ஒன்று கேட்கிறது.

''வேல், வேல் வெற்றிவேல்"

''முருகனுக்கு அரோகரா! கந்தனுக்கு அரோகரா!"

பெரிய கோயிலிலிருந்து வரும் பாடலின் உணர்வுப் பிரவாகத்தில் புதுக்கோயிலில் ஒலிபரப்பாகும் பாடல் அமுங்குகிறது.

செந்தில்குமாருக்கு ஆடிப்பூசை களைகட்டத் தொடங்கி விட்டது போன்ற பரவச உணர்வு நெஞ்சில் நிறைகிறது.

~1998~

# எட்டாத கனி !

சீத்தாவின் சிந்தனைகள் தெளிவற்று, மனம் போராட்டக் களமாக அமைதியற்றுக் கிடக்கிறது. தானம் முடிந்து, சரத் வீட்டிலிருந்து திரும்பி, தன் வீட்டிற்கு வந்து ஒரு மணித்தியாலத்திற்கு மேலாகிவிட்டது. வீட்டு வரவேற்புக் கூடத்தி லுள்ள நாற்காலியில் வந்து குந்திய சீத்தா உடுப்பை மாற்றாது சிந்தனைச் சாகரத்தில் சிக்கியிருக்கிறாள்.

'நிமல் ஆறுமணிக்கு முன் கட்டாயம் வருவான். அவனுக்கு என்ன பதிலைச் சொல்வது? எப்படி நடந்துகொள்வது? அவன் சில நாட்களாக 'இன்று எப்படியும் அதனைத் தரவேண்டும்' என்று கேட்கிறானே அதனை எனது சம்மதத்தின் உத்தரவாதமாக, உறவின் சின்னமாகக்கொண்டு அந்நினைவின் முத்திரையில் மன அமைதி காண முடியுமாம். ஆனால் எப்படி அதனைக் கொடுப்பது.? சீத்தாவின் கண்கள் சுவரில் தொங்கிக் கொண்டி ருக்கும் சரத்தின் புகைப்படத்தில் நிலைகுத்தி நிற்கிறது. இராணுவச் சீருடையில் சரத் நிற்கும் கம்பீரமான தோற்றம் அது. அவனது நெஞ்சு நிமிர்ந்த நடை, நேர் கொண்ட பார்வை. சரத்தை நேரில் பார்த்தவர்கள் ஒரு போர் வீரனுக்குரிய ஆளுமையை கட்டாயம் அவனிடம் தரிசிப்பார்கள்.

இறுதியாக ஊருக்கு வந்து, கடமைக்கு வடக்குக்குத் திரும்பும்போது அவர்கள் சந்தித்தது இப்படியொரு அந்திப்பொழுதிலேதான். அதுதான் கடைசிச் சந்திப்பு என சரத் எண்ணினானோ என்னவோ அன்று சீத்தாவுடன் பல விடயங்களைப் பற்றி அவன் பேசினான். தனது வாழ்வின் இலட்சியங்கள், எதிர்காலத் திட்டங்கள், இருவரும் இணைந்து வாழப்போகும் இல்வாழ்க்கை இவை பற்றியெல்லாம் பேசினான். "எனக்கு எல்லா வகையிலும் பொருத்தமான ஒரு துணை வாய்த்திருக்கிறாள்" என்று அன்று சரத் கூறும்போது சீத்தா ஆனந்தத்தால் கண் கலங்கிவிட்டாள்.

இன்று தானம் முடிந்து வீடு திரும்பும்போது, சரத்தின் தாயை கனம் பண்ணும் விதத்தில் சீத்தா குனிந்து வணங்குகையில் அம்மா அவளை இரு கரங்களாலும் மார்புடன் அணைத்து, அவளது முகத்தைத் தடவி கண்கள் கலங்கியமையை ஒரு கணம் எண்ணிப் பார்க்கிறாள். அந்த உணர்வுப் பிரவாகத்தில் அம்மா உணர்த்தியமை சரத்- சீத்தா உறவின் உயர்வையும், சரத்தின் மறைவால் சீத்தா துணையிழந்த பறவையாக தவிப்பதையுமே. அடுத்த தடவை பதிவுத்திருமணம் செய்துகொள்வதாக வாக்களித்துவிட்டு சென்றிருந்தான் அவன்.

சரத்தின் அம்மா சீத்தாவை துவ [மகள்] என அன்பாக அழைப்பாள். அவளும் 'அம்மே' என்பாள் பாசத்துடன். முல்லைத்தீவுத் தாக்குதலில் சரத் இறந்தவிட்டதாக இராணுவ ஜீப்பில் வந்து சொல்லிவிட்டுப் போனார்கள் என்ற செய்தியை பாடசாலையில் கடமையில் இருக்கும்போதே அவள் அறிந்தாள். உடனே லீவு போட்டுவிட்டு ஓட்டமும் நடையுமாக சரத் வீட்டுக்குச் சென்றாள். அங்கே எவ்வளவோ ஆட்கள் கூடியிருந்தார்கள். அம்மா சீத்தாவைக் கண்டதும் துடித்தெழுந்து, ஓடிவந்து அவளைக் கட்டியணைத்து பெருங்குரலில் அழுது புலம்பியதும் சீத்தா அலறித் துடித்ததும், சரத்தின் தங்கை, "அக்கா, அண்ணா போய்விட்டார்" என அழுதவாறு கால்களைக் கட்டி அணைத்த காட்சியும் அங்கிருந்த அனைவரது நெஞ்சங்களையும் நெருடின.

சரத்தின் பிரிவிக்குப் பின்பு சீத்தா அடிக்கடி சரத்தின் அம்மாவைச் சந்திக்கப் போவாள். இந்தத் தடவை அவள் சிங்களப் புத்தாண்டுக்கு எங்கும் போகவில்லை. எதையுமே செய்யவில்லை, ஆனால் சரத் வீட்டிற்குச் சென்று அம்மாவின் பாதத்தைத் தொட்டு நிலத்தில் விழுந்து வணங்கி, வெற்றிலை கொடுத்து அவளது ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டாள். அம்மா விழுந்து வணங்கியவளைத் தூக்கி அணைத்து கண்ணீர் சிந்த "துவ சரத்போல ஒரு மகன் இனி எனக்குக் கிடைக்கப் போவதில்லை. சீத்தாபோல ஒரு மகள் எனது வீட்டிற்கு வர எனக்குக் கொடுத்து வைக்கவில்லை." என்றாள்.

சரத்தும் நிமலும் சிறுவயதிலிருந்தே இணைபிரியாத நண்பர்கள். பல தடவைகள் சீத்தாவை சந்திக்க வந்த சரத்தைத்தேடி நிமல் அவள் வீட்டிற்கு வந்திருக்கிறான். நண்பர்கள் இருவரும் பலதும் பத்தும் பேசுவார்கள். அரசியல் விஞ்ஞானப் பட்டதாரியான நிமலுடன் சரத் நாட்டு நடப்புக்கள் பற்றி விவாதிப்பான். சரத்தின் சிந்தனைத் திறமையையும் ஆய்வறிவுத் தரத்தையும் சீத்தா வெகுவாகப் பாராட்டுவாள். ஒரு நாள் அவள் சொன்னாள். "சரத், நீங்கள் உயர்வகுப்புப் படிப்பைத் தொடர்ந்திருந்தால் பல்கலைகழகத்தில் படித்துப் பட்டதாரி ஆகி இருப்பீர்கள்."

"சீத்தா, உனக்குத் தெரியுந்தானே; எனது தந்தை நான் ஓ. எல். படிக்கும்போதே இறந்துவிட்டார். ஏழை விவசாயியான அவர் வாழும்போதே பணம் சேர்த்து வைக்கவில்லை. ஓயாது உழைத்து மண்ணுடன் போராடினார். உருளைக்கிழங்கு உற்பத்தியில் பலதடவைகள் நஷ்டங்கள் ஏற்பட்டது. கடைசியாக வெலிமடை டவுனில் உள்ள ஒரு முதலாளியுடன் பங்குக்குப் பாடுபட்டார். முதலாளிக்கு உழைத்துக் கொடுத்தார். உழைப்பின் பங்காக - முதலாளி கணக்கின் பிரகாரம் - கிடைத்த சொற்ப பணத்தைக்கொண்டே காலத்தை ஓட்டினார். பட்ட கடன்களை திருப்பிக் கட்டாமலே தந்தை இறந்துபோக நான் படிப்பைத்

தொடர முடியாமலே வேலை தேட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. மந்திரிமாரை நாடினேன். நான் எந்தக் கட்சியென மோப்பம் பிடித்து காலத்தைக் கடத்தினார்கள். பாதுகாப்புப் படைக்கு ஆள்சேர்ப்பதாக பத்திரிகையில் விளம்பரம் வந்தது விண்ணப் பித்தேன், தெரிவானேன்."

இராணுவத்தில் சேர்ந்த பின்பு சரத்தின் குடும்பம் பொருளாதார ரீதியில் எவ்வளவோ முன்னேறிவிட்டது. பட்ட கடன்கள் தீர்க்கப்பட்டதுடன் மண் குடிசையாக இருந்த வீடு ஒரு அழகான சிறு வீடாக அமைந்தது. தம்பி உயர் வகுப்புப் படித்து பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகியிருக்கிறான். தங்கை உயர் வகுப்புப் படித்துக்கொண்டிருக்கிறாள். சீத்தா பெருமூச்சுடன் அவர்களது குடும்பத்தைப்பற்றி எண்ணிப் பார்க்கிறாள். பிழைப்புக்காகக் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காகத் தெரிந் தெடுத்த தொழிலால் இன்று சரத்திற்கு இந்தக் கதியா?

நிமலும் சீத்தாவும் ஒரே பாடசாலையிலேதான் ஆசிரியர்கள். சக ஆசிரியர்களுடன் பழகுவதுபோலத்தான் ஆரம்பத்தில் சீத்தா நிமலுடன் பழகினாள். ஆனால் நிமல் அவள்மேல் அதிக அக்கறை காட்டினான். நண்பனின் காதலி என்ற காரணத்தாலேதான் இவன் அவ்வாறு ஆதரவாக இருப்பதாக சீத்தா எண்ணினாள். அவன் அவளது தேவைகளை வலிந்து கேட்டு நிறைவேற்றினான். குறிப்பறிந்து உதவினான்.

'நீங்கள் செய்யும் உதவிக்கு நான் என்ன கைம்மாறுதான் செய்யப்போகிறேனோ' என அவள் வாய்விட்டு சொன்னதும் அவனது உதவிக் கரங்கள் நீண்டன. சரத்தின் பிரிவால் ஏற்பட்ட காயத்தின் புண்களுக்கு நிமலின் ஆதரவு சீத்தாவுக்கு ஒத்தடமாக இருந்தது. இருவரும் தங்கள் குடும்பப் பிரச்சினைகள்பற்றி மனந்திறந்து பேசுவார்கள். சீத்தாவின் ஒரேயொரு உடன்பிறந்த மூத்த சகோதரன் கொழும்பில் அரசாங்க சேவையில் லிகிதராகக் கடமையாற்றுகின்றார், சில மாதங்களுக்கு முன்பு குடும்பத்துடன் இங்கு வந்தபோது, அவனுடன் வேலைசெய்யும் கந்தோரில் உயர்

பதவியிலிருக்கும் - இன்னும் திருமணமாகாத - ஒரு நண்பனும் கூடவே வந்திருந்தான். கொழும்புக்குத் திரும்பியதும் தமையனார் தனது நண்பன் சீத்தாவை திருமணம் செய்ய விரும்புவதாகவும், தங்கை பாக்கியசாலி எனவும் உடனே அவளது விருப்பத்தை எழுதும்படியும் எழுதியிருந்தார். கடிதம் கிடைத்தவுடன் நிமலுக்கு பாடசாலையில் வைத்து விடயத்தைச் சொன்னாள். இதனைக் கேட்டதும் அவனது முகத்தில் இப்படியொரு மாற்றம் ஏற்படும் என அவள் எதிர்பார்க்கவில்லை. ‘காதலித்த எனது நண்பன் மறைந்து ஒரு வருடத்திற்குள் திருமணம் செய்ய இவள் எண்ணி விட்டாளோ!, என எண்ணுகிறானோ’ என சீத்தா நினைத்தாள். ஏதோ ஆழமாக யோசித்துவிட்டு சிறிது நேரத்துக்குப் பின்பு நிமல் கேட்டான், “சீத்தா உனக்கு அவரைத் திருமணம் செய்ய விருப்பமா?”

“நிமல் எந்நெஞ்சில் சரத்தின் இடத்திற்கு இன்னும் ஒருவரை நிறுத்திப் பார்க்கக்கூட முடிவில்லை. கல்யாணம் செய்யாமல் இருந்து விடலாம் என நினைக்கிறேன்.”

“சீத்தா உன்னுடன் தனிப்பட்ட முறையில் சில விடயங்கள் பேசவேண்டும். இன்று பிற்பகல் வீட்டிற்கு வருகின்றேன்.” அவள் வியப்படைந்தாள். ‘என்ன விடயமாக இருக்குமோ?’ குறிப்பிட்ட வாறே வீட்டிற்கு வந்த நிமல் சொல்லப்போவதை ஆவலுடன் கேட்டாள். “சீத்தா நான் மனந்திறந்து உன்னுடன் சிலவிடயங்கள் பேசப்போகிறேன்” கையில் புகைந்து முடிந்து கொண்டிருந்த சிகரட்டால் பொக்கற்றுக்குள் இருந்த புதிய சிகரெட்டை எடுத்து மீண்டும் பற்ற வைத்துவிட்டுத் தொடர்ந்தான் நிமல் “உனக்குக் கல்யாணம் செய்துவைக்க வேண்டுமென்று உனது அம்மாவும், அண்ணாவும் விரும்புகிறார்கள் போல் தெரிகிறது. இந்தக் காலகட்டத்தில் எனது மனக்கிடக்கையை உனக்குச் சொல்ல வேண்டும். சுற்றிவளைக்காமல் சொல்லு கிறேன். சீத்தா நான் உன்னை மனதார விரும்புகிறேன். உன்னை எனக்கு என்றோ பிடித்துவிட்டது. உனது மென்மையான சுபாவம், ஆளுமை,

எல்லோருடனும் பரிவுடன் பழகும் விதம், எப்போதும் சிரித்த முகத்துடன் பேசுவது குறிப்பறிந்து மனதிற்கு இனிய வகையில் உரையாடுவது உன்னிடமுள்ள ஒரு காந்தசக்தியாக இருக்கிறது. இந்தக் காந்த சக்தியினாலே கவரப்பட்டுத்தானோ என்னவோ ஓரிரு நாட்கள் பழகிய உனது அண்ணாவின் நண்பன் ஸ்டாப்ஸ் ஓபிஸர் உன்னைக் கல்யாணம் செய்ய விரும்பினார். அந்தக் காந்தசக்தியே என்னையும் உன்மேல் பைத்தியம் கொள்ள வைத்தது. உனக்கும் சரத்திற்கும் உள்ள காதலை அறிந்ததும் என் எண்ணத்தைக் கைவிட்டேன். ஆயினும் உன்னைக் காணுவதிலும், உன்னைக் கண்டு பேசுவதிலும் இனம் புரியாத இன்பங்கண்டேன். கிஞ்சித்தும் தவறான நோக்கத்துடன் என்றுமே பார்த்ததில்லை. ஏதோ ஒரு பாச உணர்வு நீறு பூத்த நெருப்பாக என்நெஞ்சில் கனன்று கொண்டிருந்தது. சரத்தின் பிரிவால் நாமிருவரும் ஆறாத்துயர் அடைந்தோம். உன்மேல் எனக்கிருந்த பாசம் மறுபிறப்பெடுத்தது. முற்போக்கு எண்ணம் கொண்ட சரத் ஒருநாள் நாம் மூவரும் பேசிக்கொண்டிருந்தபோது "சீத்தா நான் ஒரு போர் வீரன், இறப்பு எனக்கு எப்பவும் ஏற்படலாம், அப்படி ஒரு கட்டம் ஏற்பட்டால் நீ வேறொருவரை மணந்து மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும்" எனச் சொன்னவற்றை நான் அடிக்கடி எண்ணிப் பார்ப்பேன். நான் என்ன நினைக்கின்றேன் என்பதை நீ இப்போது நன்றாக உணர்ந்திருப்பாய். யோசித்து எனக்குப் பதில் சொல். உனக்காக நான் எவ்வளவு நாளும் காத்திருக்கத் தயார். எனது அன்புக் கதவு உனக்காக என்றுமே திறந்திருக்கும்." நிமலின் குரல் கரகரத்தது; உணர்ச்சி வசப்பட்டதை எடுத்துக்காட்டியது. மீண்டும் புகைத்து முடிந்த சிகரெட்டால் இன்னுமொரு சிகரெட்டைப் பற்றவைத்தான்.

தேநீர் தயாரித்து வந்து அவள் அவன் முன் நீட்டியவாறு சொன்னாள், "நிமல் ஏன் இவ்வளவு சிகரெட்டைக் குடித்து அநியாயமாக உடம்பைக் கெடுக்கின்றீர்கள். இதனை நிற்பாட்ட முடியாதா?"

"சீத்தா, சரி நீ சொல்லிவிட்டாய். இன்றுடன் சிகரெட் குடிப்பதை நிற்பாட்டுகிறேன். இது சத்தியம்" அவன் கையிலிருந்த சிகரெட்டை வீசிவிட்டு அவள் கொடுத்த தேநீரை அருந்திவிட்டுப் போய்விட்டான். சீத்தாவிடமிருந்து அவன் பதிலை ஆவலுடன் எதிர்பார்த்தான். ஆனால் அவள் அதுபற்றி ஒன்றுமே சொல்லவில்லை. தமையனாருக்கு மட்டும் அவன் பேசிவரும் கல்யாணத்தில் தனக்கு விருப்பமில்லை என உறுதியாகப் பதில் எழுதிவிட்டாள்.

சீத்தாவுடன் வீட்டில் வயதில் முதிர்ந்த அம்மா மட்டும் தான் இருக்கிறாள். வேறு ஆண்துணை இல்லை. ஊரில் தபாற்காரனாக வேலை செய்யும் அடுத்தவீட்டு சுனில், அவர் களுக்கு பெரும் ஒத்தாசையாக இருந்தான். கடையில் சாமான்கள் வாங்கிக் கொடுத்து உதவுவான். சீத்தா சுனிலை 'அய்யா' என அழைப்பாள். அவனும் அவளை 'நங்கி' என ஆதரவாக அழைப்பான். ஒருநாள் சுனில் சீத்தாவிடம் கேட்டான். "சரத் போய்விட்டான். நீ இப்படி எத்தனை நாளைக்குக் கல்யாணம் செய்யாமல் இருக்கப் போகிறாய்? எனக்கு நல்ல விருப்பம் உன்னைக் கட்டிக்கொள்ள. என்னுடன் வேலைசெய்யும் ஒரு போஸ்ட்மன்னின் மனைவியும் டீச்சர் தானே" சுனில் கிண்டல் பேசுகிறான் என எண்ணிய சீத்தா "சும்மா இருங்க அண்ணா கிண்டல் பேசாதீங்க" என்று அதனைப் பெரிசுபடுத்தாது ஒதுக்கிவிட்டாள். பிறிதொரு நாள் தாய் வீட்டில் இல்லாதவேளை சுனில் அவளுடன் தவறாக நடக்க முயற்சித்ததும் அவள் செருப்பால் அடித்துத் துரத்தியதும் அவன் பின்பு யாரிடமும் சொல்ல வேண்டாம் என மன்றாடியதும், சீத்தாவின் மனத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. இந்த உலகில் வாழ்வதற்கு ஒரு துணையின் அவசியத்தைப்பற்றி ஆழமாகச் சிந்தித்தாள். ஒரு நோயாளி வைத்தியரிடம் பரிகாரத்தை எதிர்பார்த்துத் தன் வியாதியை விபரமாகச் சொல்லுவதைப்போல நிமலுக்கு மட்டும் நடந்தவற்றைச் சொன்னாள். இந்நிகழ்வு நிமலுக்கு நம்பிக்கை யூட்டியது. இவ்வளவு காலமும் எட்டாத கனியாக இருந்த சீத்தா

தனது கைக்கு எட்டப் போகின்றாள் என அகமகிழ்ந்தான். திட்டமிடும் அமைச்சில் ஓர் அதிகாரிக்கு பதவி வெற்றிடம் 'கெசட்'டில் வந்து விண்ணப்பம் போட்டிருந்தான். நேர்முகப் பரீட்சைக்கும் கடிதம் வந்துவிட்டது. சீத்தா உறுதியளித்தால் வேறு தொழிலுக்கு போவதில்லை எனவும், ஆசிரியர் தொழிலைச் செய்துகொண்டு கிராமத்தில் தங்கியிருந்து மக்களுக்குச் சேவை செய்வதெனவும் கூறி ஓர் உறுதிமொழியைப் பெற பிரயத்தனம் செய்தான். சீத்தா சரத்தின் முதலாண்டு தானம் முடிந்தபின் தனது முடிவை உறுதியாகக் கூறுவதாகச் சொன்னாள். அந்த உறுதிமொழியின் சின்னமாக நிமல் அவளிடம் அதனைக் கேட்டிருந்தான். 'அது சம்மதத்தின் உத்தரவாதமாம் உறவின் சின்னமாம். சத்தியத்தின் முத்திரையாம்.' சீத்தாவால் ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லை.

சுவர்க் கடிகாரம் ஐந்து அடித்து ஓய்கிறது. சீத்தாவுக்கு இன்னும் ஒரு மணித்தியாலத்தில் வரப்போகும் நிமலுக்கு என்ன பதிலைச் சொல்வது எனப் புரியவிலலை. முடிவை மட்டும் சொல்லுவோம். அவன் கேட்டதைப் பின்பு பார்க்கலாம்.

இன்று நடந்த தானம், நேற்றிரவு நடந்த பிரித் எல்லா வற்றையும் முழுப்பொறுப்புடன் அவனே முன்னின்று செய்தான். பிரித் வைபவத்தில் உரையாற்றிய பிரதம பிக்கு [சாது] சரத்தை நாட்டின் தியாகி எனப் புகழ்ந்துவிட்டு, தொடர்ந்து அவனது குணவியல்புகளைப் பற்றிச் சொல்லும்போது நிமலும் சரத்தும் இரட்டையர்கள் எனப் புகழ்ந்தார், சாது சொன்னவற்றைத் தொடர்ந்து எண்ணிப் பார்க்கிறாள் சீத்தா. "எங்களுடைய மனம் கருணையாலும், கருணை உச்ச நிலையான மைத்திரியினாலும் நிரம்பி இருந்தால் தீமைக்கு இடம் வராது. நாங்கள் மற்றவர்களுக்கும், மற்றவர்களைப்போல பிராணிகளுக்கும் கருணை காட்டினால் நல்ல பலாபலன் கண்முன்னே தென்படும் . சில வேளைகளில் எங்களிடம் அன்புவைத்து மறுலோகம் போனவர்கள் மீண்டும் வந்து எங்களுடன் சீவிக்க முடியும்.

ஆகையால்தான் சில பிராணிகள் தன் எசமானர்களிடம் அன்பாக இருக்கின்றன'

சீத்தாவிற்கு நிமல் சில நாட்களுக்கு முன் சொன்னது ஞாபத்துக்கு வருகிறது. 'சரத் எங்கள் இருவருக்கும் பிள்ளையாக வந்து பிறப்பான்.'

சுவர்க்கடிகாரம் ஐந்தரை அடிக்கிறது. சீத்தா உடுப்பு களை மாற்றுவதற்குத் தனது அறைக்குப் போகிறாள்.

வெளியே கதவு தட்டப்படும் சத்தம் பலமாகக் கேட்கிறது. 'சீத்தா சீத்தா' என பலமான குரலில் யாரோ அழைக்கிறார்கள். 'யாரின் குரல் இது? நிமல் இப்படிக் கதவைத்தட்டிச் சத்தமாக அழைக்கமாட்டாரே!'

"சீத்தா, நான்தான் சரத் வந்திருக்கின்றேன்; ஓடி வா" அவள் ஓடி வந்து கதவைத் திறக்கிறாள். சரத்தேதான் கண்முன் நிற்கிறான். அவளுக்குத் தான் காண்பது கனவா பிரமையா எனத் தெரியவில்லை. அதிர்ச்சியடைந்த நிலையில் நிலத்தில் சாய்கிறாள். சரத் அவளைக் கைகளில் ஏந்திப் படுக்க வைக்கிறான்.

சரத் சீத்தாவின் கைகளை அழுத்திப் பிடித்துக்கொண்டு கூறுகிறான். "வீட்டிற்கு வந்து அம்மா சகோதரர்களைப் பார்த்துவிட்டு உன்னைப் பார்க்க வந்திருக்கின்றேன். இன்று எனக்கு முதலாண்டு தானம் கொடுத்திருக்கின்றீர்கள். நான் முல்லைத்தீவுத் தாக்குதலில் சாகவில்லை. சூடுபட்டு மயக்கமுற்ற நிலையில் தீவிரவாதிகளால் எடுத்துச்செல்லப்பட்டு பணயக் கைதியாக வைக்கப்பட்டிருந்தேன். சென்ற வாரம் நல்லெண் ணத்தின் சமிக்ஞையாக நிபந்தனை எதுவுமின்றி விடுதலை செய்யப்பட்ட ஐந்து வீரர்களில் நானும் ஒருவன்."

சீத்தாவுக்கு அதிர்ச்சியின் தாக்குதலில் இருந்து சுயநினைவுக்கு வர சில நிமிடங்கள் சென்றன. "சரத் சரத் உண்மையாக நீங்கள் வந்துவிட்டீர்களா."

மயக்கம் தெளிந்த நிலையில் கேட்டுக்கொண்டு, வைத்த கண் வாங்காமல் பார்க்கிறாள். அதே வாட்டசாட்டமான தோற்றம். தீட்சண்ணியம் நிறைந்த பார்வை . நெற்றியிலே சுருண்டு தவழும் கேசம். சதா சிரித்த முகம்.

வெளிவாசலில் மோட்டார் சைக்கிள் வந்து தரிக்கும் சத்தம் கேட்கிறது, நிமல் வருகிறான். கதவுகளுடன் மோதிக்கொண்டு உள்ளே ஓடிவந்த நிமல் அவனைக் கட்டியணைத்தவாறு "சரத், சரத், உயிருடன் வந்துவிட்டாயா"என்று பெருங் குரலில் விம்முகிறான். நிமல் தொடர்கிறான். "சரத் உன்னை இழந்து நான் பட்ட வேதனை, உண்மையில் நீ மறுபிறப்பெடுத்து வந்திருக்கிறாய்." சரத்தைத் தழுவிய கரத்தை நிமல் விடவே இல்லை. குழந்தைப் பிள்ளைபோல கண்ணீர் சிந்திக்கொண்டிருந்த நிமலின் கண்ணீரைத் தனது கைக்குட்டை யால் துடைத்து அவனை நாற்காலியில் உட்கார வைக்கிறான் சரத். சீத்தா, நிமலுக்குச் சரத் மேலுள்ள பாச உணர்வின் உயர்வை எண்ணி அதிர்ச்சி அடைகிறாள்.

சரத் தனக்கு நடந்ததை ஆதியும் அந்தமுமாகச் சொல்லுகிறான். மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்த நிமல், உணர்வுகள் மாமூல் நிலைமைக்குத் திரும்பியதும் இடைமறித்து விளக்கங்கள் கேட்கத் தொடங்குகிறான்.

"சரத் உன்னைப் பயங்கரவாதிகள் சித்திரவதை செய் திருப்பார்களே."

"நிமல், தீவிரவாதிகள் ஆரம்பத்தில் என்னுடன் கண்டிப்பாகத்தான் இருந்தார்கள். பின்பு மிக அன்பாக உடன் பிறப்புக்கள் போலப் பழகினார்கள்.

என்னைக் காவல் காத்த மூவர்களில் ஒருவனின் தகப்பன் தென்னிலங்கையில் வியாபாரம் செய்தார்.83ஆம் ஆண்டுக் கலவரத்தில் அவரது கடைகள் சூறையாடப்பட்டு தீக்கரையாக்கப்பட்டன. அந்த எரியும் தீயில் அவர் உயிருடன்

பொசுக்கப்பட்டார்.

மற்றவனின் சகோதரன், எஞ்சினியர் மாணவனாக இருந்தபோது வடமராட்சி ஒப்பரேஷன் நடவடிக்கையில், முழங்காலுக்குக் கீழ் பழைய புண் ஒன்று இருந்ததால் பயங்கரவாதி எனக் கூறி, பெற்றதாயிற்கு முன் பாதுகாப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டான். அவனது தாய் இதனால் பைத்தியம் பிடித்து தற்கொலை செய்துகொண்டாள்.

மூன்றாமவனின் கதையும் பரிதாபகரமானதுதான். பாதுகாப்புப் படையினர் ஏதோவொரு ஒப்பரேஷன் நடவடிக்கையில் மக்கள் எல்லோரையும் வழிபாட்டுத் தலத்திற்கு போகும்படி சொன்னார்கள். குடும்பமாகக் கோயிலொன்றில் தஞ்சம் புகுந்த அவனது தாயும் ஒரேயொரு சகோதரியும் வான் தாக்குதலில் கொடூரமாக இறந்துவிட்டனர்."

"சரத், இன்றைய வட- கிழக்கு நிலை எப்படி?

"யுத்தகளமாக இருக்கின்றது. விடுவிக்கப்படாத பிரதேசங்களில் வாழும் மக்களின் நிலை மிகவும் பரிதாபமானதாக இருக்கின்றது. வான் தாக்குதல்களுக்கும், ஷெல் அடிக்கும் தப்ப உயிரைக்கையில் பிடித்துக்கொண்டு அகதிகளாக வாழும் அவல நிலை. ஏழை விவசாயிகள், மீனவர்கள் தொழில் செய்ய முடியாத நிலையில் அகதி நிவாணரங்களுக்காக உணவிற்கும் கைநீட்டி அரைப்பட்டினியாகக் காலத்தை ஓட்டுகின்றார்கள், பச்சைக் குழந்தைகளுக்கு பால்மா இல்லை, சத்துணவு இல்லை. ஆஸ்பத்திரிகளில் மருந்து இல்லை. நோயாளிகள் அநியாயமாகச் சாகின்றார்கள். விடுவிக்கப்பட்ட இடங்களில், வான்தாக்குதலால், ஷெல் அடிகளால் உடைந்து சிதைந்த வீடுகள், பாடசாலைகள், வழிப்பாட்டுத்தலங்கள் அப்படியே இருக்கின்றன. இன்று சந்திக்குச் சந்தி சோதனைச் சாவடிகள். ஆக்கிரமிக்கப்பட்ட மக்களின் உணர்வுகளுடன், ஏதோ வாழ்கின்றோம் என்ற நிலையில் எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையற்ற விரக்தியுடன்

வாழ்கிறார்கள். எல்லோருமே சமாதானம் வராதா என ஏங்கிய வண்ணம் இருக்கிறார்கள்."

"இதற்கெல்லாம் காரணம் யார்? அவர்கள் தானே".

"என்ன நிமல், அரசியல் விஞ்ஞானப் பட்டதாரியான நீயே இப்படி - நமது அரசியல் வாதிகளைப்போல் - பேசுகிறாய். தமிழ் இளைஞர்களை ஆயுதமேந்தும் நிலைக்கு ஆளாக்கியது, நமது அரசும், ஐம்பத்தியெட்டு, எழுபத்தேழு, எண்பத்து மூன்று களில் ஏற்பட்ட இனக்கலவரங்களும்தான்.

1977 இல் தமிழர்களின் ஆயிரக்கணக்கான வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. அவர்களது கடைகள் சூறையாடப்பட்டன. தமிழ் பெண்கள் கற்பழிக்கப்பட்டார்கள். தென்கிழக்காசியாவிலே அதிசிறந்த யாழ்ப்பாண நூலகம் தீக்கிரையாக்கப்பட்டது. கலாசார நினைவுச் சின்னங்கள் நிர்மூலமாக்கப்பட்டன. ஒன்றுமே அறியாத அப்பாவித் தமிழ் தோட்டத் தொழிலாளர்கள் தாக்கப்பட்டார்கள். அவர்களது லயன்கள் தீக்கிரையாக்கப்பட்டன.

1983ம் ஆண்டு கறுப்பு ஜுலை, ஆசியாவிலே விருந்தோம்பலுக்கும் பரோபகாரமான சிந்தைக்கும் முன்னணியிலிருந்த எமது சிங்கள இனத்துக்கு அபகீர்த்தியைத் தேடிக்கொடுத்தது, வெட்கித் தலைகுனிய வைத்தது. பஞ்சசீலம் நிலவ வேண்டிய நாட்டிலே இரத்த ஆறு ஓடியது. திட்டமிட்டு பட்டியல் போட்டு தமிழ் மக்கள் தேடித்தேடித் தாக்கப்பட்டார்கள். தமிழ் சிறைக் கைதிகள் குரூரமாகக் கொலை செய்யப்பட்டார்கள், நமது ஆட்சியாளர்கள் தமிழ் மக்களின் நியாயமான பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வு காண முயற்சி எடுக்காது இனத்துவேசத்தைத் தூண்டினார்கள். ஆகவே தமிழ் இளைஞர்கள் பாராளுமன்ற முறையில் நம்பிக்கை இழந்தார்கள். தங்கள் உரிமைகளைப் பெற்றுக்கொள்ள ஒரேவழி ஆயுதம் ஏந்துவதே என்ற முடிவுக்கு வந்தனர்."

"சரத், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான

முயற்சிகள் எடுக்கப்படவில்லையா? வட்டமேசை மாநாடு, திம்புப்பேச்சு, இலங்கை இந்திய ஒப்பந்தம், சர்வகட்சி மாநாடு பாராளுமன்றத் தெரிவுக்குழு, தீர்வுப்பொதி எல்லாம் என்ன?"

"இவற்றால் உருப்படியாக ஏதாவது தீர்வு ஏற்பட்டதா? இவைகள் எல்லாம் இலங்கைக்கு உதவி அளிக்கும் நாடுகளையும், சர்வதேச மனித உரிமை இயக்கங்களையும் திருப்திப்படுத்தவும் தேசிய அரசியல் நீரோட்டத்தில் சேர்ந்த தமிழ் அரசியல் வாதிகளைத் தம்வசப்படுத்தவும் எடுத்த முயற்சிகளே."

"சரத், நீ பணயக்கைதியாக இருக்கும் போது பயங்கரவாதிகள் உனது மூளையை நன்றாகச் சலவை செய்துவிட்டார்கள்"

"இல்லை நிமல், நான் யதார்த்தத்தைதான் பேசுகிறேன்"

"சரத், நீ அவர்களது போராட்டத்தையே பெரிதாகப் பேசுகிறாய். எமது இனத்திற்கு எத்தனையோ பிரச்சினைகள் இருக்கின்றன. எல்லைக் கிராமங்களில் பலர் கொலை செய்யப் பட்டார்கள். அகதிகளானோர் எத்தனையோபேர். குண்டுத் தாக்குதல்களின் எத்தனையோ உயிர்களை இழந்தோம். எங்கள் இளைஞர்கள் எத்தனைபேர் இந்தப் போராட்டத்தில் இறந்து போனார்கள். எத்தனையோ பேர் கை கால் இன்னும் பல உறுப்புக்களை இழந்து நடைப்பிணமாக இருக்கிறார்கள். பிள்ளைகளை இழந்து தவிக்கும் தாய்மார்கள், கணவனை இழந்து கலங்கும் இளம் விதவைகள். தகப்பனைப் பறிகொடுத்த பிள்ளைகள்.....

அரசியல்வாதிகளா, செல்வந்தர்களா போராடுகிறார்கள்?. அவர்களின் பிள்ளைகள் சொகுசாக வாழ்கிறார்கள். வெளிநாட்டில் படிக்கிறார்கள். எமது ஊவா பரகணகம போன்ற கிராமங்களில் வாழும் ஏழைகளின் பிள்ளைகள் தொழிலுக்காகவும், வயிற்றுப் பிழைப்புக்காகவும் இராணுவத்தில் சேர்கிறார்கள்." என்று

கூறிக்கொண்டு நிமல் எழுந்து பொக்கற்றுக்குள் இருந்த சிகரெட் பெட்டியை வெளியே எடுத்து உடைத்து சரத்தை நோக்கி நீட்டுகிறான்.

"நிமல், நான் தீவிரவாதிகளுடன் இருந்தபோது சிகரெட் குடிப்பதை நிற்பாட்டிவிட்டேன்."

நிமல் நீண்ட நாட்களுக்குப் பின் ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்றவைத்துப் புகையை வெளியே விரக்தியுடன் ஊதுகிறான். சீத்தா நிமலை வெறித்துப் பார்த்தப்படி பெரு மூச்சுவிட்டுத் தேநீர் தயாரிக்கக் குசினிக்குள் போகிறாள்.

"நிமல் நம் இன மக்களின் உண்மையான நிலைப்பாடு என்ன? இந்த யுத்தம் முடிவுக்கு வராதா? சமாதானம் ஏற்படாதா?"

"எல்லாம் எட்டாத கனி. நேற்று உனது தானத்திற்கான பிரித் வைபவத்தில் பெரிய சாது பிரசங்கத்தில் சொன்னார். பயங்கரவாதம் பூண்டோடு ஒழிக்கப்படவேண்டும். அதற்குப் பின்புதான் அரசியல் தீர்வு முன்வைக்கப்பட வேண்டும் என. அது உண்மையான வாக்கு. பயங்கரவாதிகள் போர்த்தவிர்ப்பு என்று சொல்லி எமது பாதுகாப்புப் படையினரைப் பலவீனப் படுத்தித் தங்களைப் பலப்படுத்திக் கொண்டார்கள். இனி அவர்களுடன் பேச்சு வார்த்தைக்கு இடமே இல்லை, போர்தான் ஒரே வழி."

"நிமல் யதார்த்த நிலையை யாருமே எண்ணிப்பார்க்க மாட்டார்களா?"

"சரத், உன்னுடன் விவாதிக்க இப்பொழுது எனக்கு நேரமில்லை, நான் நேர்முகப் பரீட்சைக்கு நாளைக்கு கொழும்புக்குப் போகிறேன். ஆசிரியர் தொழிலை விட்டு 'ஸ்டாப் ஒபிஸராக' வர முயற்சிக்கிறேன். எனக்கு ஒரு மாற்றம் தேவை. நான் நேர்முகப் பரீட்சைக்குக் கொண்டு செல்ல மந்திரியிடம் ஒரு கடிதம் வாங்க வேண்டும். அதனை முடித்துக்கொண்டு உனது வீட்டிற்கு வருகிறேன். தொடர்ந்து விவாதிப்போம்" என்று

சொல்லிக்கொண்டு எழுந்து புகைத்து முடியும் சிகரெட்டால் புதிய ஒரு சிகரெட்டைப் பற்றவைத்தவாறு வாசற்படியை நோக்கிப் போகிறான்.

"நிமல், சீத்தா தேநீர் தயாரிக்கிறாள் குடித்துவிட்டுப்போ"

"பரவாயில்லை சரத், நான் அவசரமாகப் போக வேண்டும். நீ ஆறுதலாக தேநீர் குடித்து, சீத்தாவுடன் உரையாடு; நான் போகிறேன்."

உறுமல் சத்தத்துடன் நிமலின் மோட்டார் சைக்கிள் வீதியில் பறக்கின்றது.

இரு தேநீர் கோப்பைகளுடன் வந்த சீத்தா நிமலைத் தேடுகின்றாள், அவன் அங்கில்லை. சிகரெட் நெடி மட்டும் வீசிக்கொண்டிருக்கின்றது.

தேநீர்க் கோப்பையுடன் மிக அருகில் வரும் சீத்தாவின் கன்னத்தில் சரத் முத்தம் இடுகிறான். நிமல் இன்று சீத்தாவிடம் எதிர்பார்த்த அந்த உறவின் சின்னத்தை அவள் மனமுவந்து தனது பங்காக மறுகன்னத்தில் சரத்துக்குக் கொடுக்கிறாள். தீக்குளித்தப்பின் இராமாயணத்தில் சீத்தாவுக்கு ஏற்பட்ட அமைதி இந்தச் சீத்தாவுக்கு ஏற்படுகின்றது. எங்கோ தொலைதூரத்தில் நிமலின் மோட்டார் சைக்கிள் சத்தம் தேய்ந்து ஒலிக்கிறது .

"சீத்தா, நான் போட்ட கடிதங்கள் ஒன்றுக்குமே உன்னிடமிருந்து பதில் வராதால் நீ வேறு யாருக்கும் சொந்தமாகி விட்டாயோ என எத்தனை நாட்கள் தவித்திருப்பேன்."

"நீங்கள் போட்ட கடிதங்கள் ஒன்றுமே எனக்குக் கிடைக்க வில்லை"

"தீவரவாத இளைஞர்கள் என்னை ஏமாற்றிவிட்டார்கள். நான் கொடுத்த கடிதங்கள் யாவற்றையும் தபாலில் சேர்த்து விட்டதாகக் கூறினார்கள்."

"சரத், அவர்கள் உங்களை ஏமாற்றவில்லை. இது தபாற்காரன் அயல்வீட்டு சுனிலின் நயவஞ்சக வேலை. அது பெரிய கதை ஆறுதலாகச் சொல்லுகிறேன். உங்களுக்குத் தேநீர் மட்டுந்தானே கொடுத்தேன். களைப்படைந்திருக்கிறீர்கள். சாப்பிட ஏதாவது கொடுக்க வேண்டும்." என்று கூறிக்கொண்டு அறைக்குள் போகிறாள் சீத்தா.

நம் நாட்டில் தீராத இனப்பிரச்சினையின் கோர விளைவுகள் பற்றிச் சரத் ஆழமாக யோசிக்கின்றான்.

'பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த யுத்தம் முடிவடையாதா? இரு இன மக்களிடையே எத்தனை பேர் யுத்ததிற்குப் பலியாகிவிட்டார்கள். அங்கவீனமானவர்கள் எத்தனைபேர்? அநாதைகள் எத்தனைபேர் சொத்து சுகம் இழந்து தவிப்போர் எத்தனைபேர்? வாவிகளில் சடலங்கள் மிதக்கும் கொடுமைகள் ஒழியாதா, அநியாயமாக இளைஞர்கள் சுடப்பட்டுச் சுடுகாட்டுப் புதைகுழிகளில் புதைக்கப் படும் பாதகச்செயல் நீங்காதா?

இந்த யுத்தத்தில் வருடம் ஒன்றுக்கு எத்தனையோ கோடி ரூபா செலவாகின்றது. இந்தத் தேசத்தின் மானுடம் அழிவதைத் தடுக்க, பொருளாதாரச் சீரழிவிலிருந்து மீள, சம்பந்தப்பட்டவர்கள் மனித நேயத்துடன், புத்திபூர்வமாகச் சிந்தித்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கமாட்டார்களா? நாம் இனரீதியாக ஒருவர் ஒருவர்மேல் அவநம்பிக்கையுடனும், சந்தேகக் கண்ணோட்டத் துடனும் பகையுணர்வுடனும் நோக்கும் நிலை மாறாதா? இரத்தம் தோயாத வெண்தாமரை மொட்டு விரியாதா? வெண்புறா வானத்தில் வட்டமிடாதா?"

சரத்தின் மனம் சமாதானத் தாகத்தால் தவிக்கிறது.

–1998–

# ஐயோ ! அம்மே !!

"அம்மே........அம்மே"

அது மகனின் குரல் என்பதை உணர்ந்து கொண்ட பொடிமெனிக்கா, உரலில் இடிப்பதற்குக் கைகளால் உருவிக் கொண்டிருந்த மரவள்ளிக் கீரையுடன் வீட்டு வாசற்படிக்கு விரைந்து வருகிறாள். "புத்தா" என மகன் அஜீத்தை உச்சி யிலிருந்து உள்ளங்கால்வரை ஏற இறங்க வாஞ்சையுடன் நோக்குகிறாள்.

"புத்தா, பகல் ஒன்றுமே சாப்பிடவில்லைப் போலிருக்கு தேநீர் போட்டுத் தருகிறேன்; குடித்துவிட்டு ஏதாவது சாப்பிட வேண்டும். நங்கி காஞ்சனமாலா வீட்டிற்குப் போய்விட்டாள்."

மூன்று மாதங்களாகக் காணாத மகனை நேரில் கண்ட மகிழ்ச்சில் ஒரு கணம் திணறிப்போன பொடிமெனிக்காவிற்கு மறுகணம் 'இன்று நாடு இருக்கும் நிலையில் அஜீத் வீட்டிற்கு வருவதைத் தவிர்த்திருக்கலாம். ஏதாவது நடக்குமோ, தெய்யனே!' என மனம் ஏங்கித் தவிக்கிறது .

கடந்த சில மாதங்களாக எத்தனையோ நிகழ்வுகள் அந்தக் கிராமத்தில் நடந்துவிட்டன. இரவுகளில் ஜீப்புகளில் கடத்திச் செல்லப்பட்டவர்கள், காணாமல் போனவர்கள், சந்தியில் சுடப்பட்டு எரிக்கப்பட்டவர்கள்.... இன்று வீட்டில் வாலிபர்கள் உள்ள தாய்மார்கள் வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு இருக்கிறார்கள். இந்நிலையில் அஜீத் வேலை செய்யும்

இடத்திலிருந்து வீட்டிற்கு வந்தது நடுக்கத்தைக் கொடுக்கிறது அவளுக்கு.

"புத்தா! நமது ஊரில் நடந்த அநியாங்களைக் கேள்விப் பட்டாயா?" பொடிமெனிக்காவின் குரல் கரகரக்கிறது.

"அம்மா, எனக்கு லீவு கிடைப்பதில்லை. இன்று காலை ஹோட்டல் விடயமாக பாங்கிற்குப் போகும்போது நுவரேலியா டவுனில் நமது பழைய ஆராய்ச்சி மாத்தியாவைச் சந்தித்தேன். அவர்தான் விக்கிரமசிங்க மாஸ்டர் சென்ற செவ்வாய்க்கிழமை இரவு கடத்தி வரப்பட்டு, சுடப்பட்டு முச்சந்தியில் டயர் போட்டுக் கொளுத்தப்பட்டதாகவும், பாதி எரிந்த மாஸ்டரின் உடலை ஊர் மக்கள் ஒன்று திரண்டு எடுத்து அடக்கம் பண்ணியதாகவும் சொன்னார். இதைக் கேட்ட நேரம் தொட்டு என்னால் வேலை செய்ய முடியவில்லை. இரண்டு நாள் லீவு போட்டுவிட்டு வந்தேன் அம்மே."

அஜீத்துக்கு இத்தொழிலை எடுத்துக் கொடுத்ததே விக்கிரமசிங்க மாஸ்டர்தான். கலைப்பட்டதாரியான அஜீத் பல்கலைக்கழகப் படிப்பு முடித்து இரண்டு ஆண்டுகள் வேலை தேடி அலைந்தான். ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற விக்கிரமசிங்க மாஸ்டர் நுவரெலியாவில் உள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் மனேஜராகக் கடமையாற்றும் தனது பழைய மாணவன் ஒருவனுக்கு ஒரு கடிதம் கொடுத்தார். உடனே அஜீத்துக்கு வேலை கிடைத்தது. ஒரு வருடத்திற்கு ரிசப்ஷனிஸ்டாக வேலை செய்ய வேண்டும். பின்பு ஹோட்டல் துறைப் பயிற்சிப் பாடசாலையில் பயிற்சி. அதன்பின் நல்லதோர் பதவி. பண்டாரவளை வெலிமடை பாதையில் அமைந்துள்ள அவனது ஊருக்கும் நுவரேலியாவுக்கும் ஐம்பது கிலோமீற்றர் தூரம்தான் இருக்கும். ஆனால் அஜீத் வீட்டிற்கு மூன்று மாதற்திற்கு ஒரு தடவைதான் வருவான். வேலை பழகிக்கொள்ள வேண்டிய தேவை, விருப்பம், வேலை தேடி அலைந்ததால் ஏற்பட்ட வைராக்கியம் ஆகியன அவனுக்குப் பொறுமையையும்

கடின உழைப்புக்கான மனோவலிமையையும் கொடுத்தன.

நுவரேலியாவிலுள்ள முன்னணி ஹோட்டல்களில் ஒன்று அது. எதனையும் சிந்திக்கவே அவகாசம் கிடையாத வேலை; ஓய்வே இருக்காது. இயந்திர வாழ்வு. முன்பதிவு செய்தவர்களுக்கு அறைகள் ஒதுக்கி, ரிஜிஸ்டரில் பதிந்து சாவி கொடுத்து, சாமான்கள் கொண்டுபோக பையன் பார்த்து அனுப்பவது, திடீரென்று வருபவர்களுக்கு அறை தேடிக்கொடுப்பபது . அறை இல்லா விட்டால் பரிவு ஒழுகப் பேசி மீண்டும் அறை கிடைக்கும் போது வரக்கூடிய விதத்தில் இன்முகத்துடன் அனுப்பிவைப்பது. ஏற்கனவே தங்யிருப்பவர்களின் புகார்களை, தேவைகளை இனிது நிறைவேற்றுவது , எங்கெல்லாமோ சுற்றிவிட்டு நேரங்கெட்ட நேரத்தில் வந்து சாவி கேட்பவருக்கு அதனைக் கொடுத்து அறைக்கு அனுப்பிவைப்பது..... இத்தியாதி வேலைகளுடன் மனேஜரின் நம்பிக்கைக்குப் பொறுப்பாக இருந்து அவரது வேலைகளுக்கு ஒத்தாசையாகவும் இருப்பான் அஜீத்.

விக்கிரமசிங்க மாஸ்டருக்கு நடந்ததைக் கேள்விப் பட்டதும் அவனுக்குக் கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை. மனேஜருக்கு இதனைச் சொன்னபோது அவர் தனது ஆழ்ந்த கவலையைச் சம்பிரதாயமாகக் கூறினார்.

நாற்காலியில் உட்கார்ந்து யோசனையில் ஆழ்ந்திருந்த அஜீத்திடம் தேநீர்க் கோப்பையை நீட்டியப்படி, "புத்தா, நிலைமை மோசமா இருக்கிறது. இன்றைக்கு இரவு என்ன நடக்குமோ என்ற ஏக்கமாக இருகிறது. வந்த நீ இன்று மட்டும் தங்கிவிட்டு காலையில் போய்விடு. இங்கிருந்தால் பெரும் ஆபத்து. வேலை செய்யும் இடத்தில் இருந்தால் அது உனக்குப் பாதுகாப்பு" என்று கூறிக்கொண்டு அம்மா வெளியே வந்து கித்துள் மரத்தில் வெகு நேரமாகக் கரைந்து கொண்டிருந்த காகத்தைத் துரத்துகிறாள். காகம் கித்துள் மரத்திலிருந்து பறந்து பக்கத்துப் பலாமரத்து உச்சிக் கொப்பிலிருந்து தொடர்ந்து கரைகிறது.

பொடிமெனிக்கா வீட்டுக்குப் பின்புறமாகச் சிறிது நடந்து வந்து, அடுத்த வீட்டிற்குச் சென்றிருந்த மகளை அழைக்கிறாள்.

“துவ குசுமா, அண்ணா வந்திருக்கிறார்.”

குரல் கேட்டு குசுமா வரவில்லை. காஞ்சனமாலவே ஓடிவருகிறாள்.

“அம்மா குசுமாவைக் கடைக்கு அனுப்பியிருக்கிறேன்” என்று பொடிமெனிக்காவிற்குக் கூறிவிட்டு உள்ளே வந்து, “அஜீத் எப்போது வந்தீங்க? எப்படி லீவு கிடைத்ததோ? நான் போட்ட மூன்று கடிதங்களுக்கு ஒன்றுமே பதில் போடவில்லையே.“ என அஜீத்திடம் வினவுகிறாள்.

அஜீத் அவளை வெறித்துப் பார்க்கிறான். அம்மா மீண்டும் குசினிக்குள் போய்விட்டாள். காஞ்சனாமாலாவே தொடர்கிறாள்.

“அன்பு என்பது ஒருவழிப்பாதை அல்ல. உங்களுக்கு என்மேல் விருப்பம் இல்லை என்றால் இன்றே எனக்குச் சொல்லிவிடுங்கள். நான் ஒதுங்கிக் கொள்கிறேன். எனக்குத் தெரியும், இப்படி நடக்கும் என்று. நான் உங்களைப் பார்க்க ஒரு தடவை நுவரெலியாவுக்கு வந்தபோது உங்களுடன் வேலை செய்யும் பெண்களைப் பார்த்தவுடனே யோசித்துவிட்டேன். வண்ணச்சேலை கட்டி, சேலைக்கு ‘மெச்’ பண்ண கையில்லாத ரவிக்கை அணிந்து, சென்ரிலும், பே·.பியூமிலும் தோய்ந்து எழுந்து, உதட்டிலே சாயத்தைப் பூசி முகத்திலே மோகத்தைக் காந்தமாகப் பரப்பி, பகட்டுச் சிரிப்பும், கடைக்கண்ணில் வலைவீச்சுமாக நிற்கும் ஒருத்தியில் நீங்கள் மயங்கிவிட்டீர்கள் அல்லது அவள் உங்களை மயக்கிவிட்டாள். ஏதோ நடந்திருக் கிறது.”

“காஞ்சனா, இன்று அன்பு அல்ல எல்லாமே ஒருவழிப் பாதைதான். தாடி எரியும் போது பீடிக்கு நெருப்புக் கேட்டவன் கதை போல இருக்கிறது உன் பேச்சு. நான் எனது குருவை,

தந்தைப்போல் இருந்தவரை இழந்து இரத்தக் கண்ணீர் வடிக்கின்றேன் நீ...."

அம்மாவின் காதுகளில் கேட்கவேண்டுமென்ற நோக்குடன் சிறிது சத்தமாக காஞ்சனமாலாவின் குரல் ஒலிக்கிறது. "அம்மே கேட்டிங்களா அஜீத்தின் கதையை...... நாட்டின் நிலைமையை உணராது பைத்தியக்காரன் போலப் பேசுகிறார். மாஸ்டரைக் குருவாகக் கொண்டவர்கள் எல்லோருமே போய்விட்டார்கள். இவர் ஒருவர் மட்டும்தான் தப்பி இருக்கிறார். அம்மா நான் நேற்றுச் சொன்னது, செய்தது எவ்வளவு சரி என்பது இப்போது நன்றாகப் புரிகிறது."

"என்ன அது ?" என ஆவலுடன் கேட்கிறான் அஜீத்.

"அஜீத், நீங்கள் பீ, ஏ. பாஸ் பண்ணியபோது விக்கிரம சிங்க மாஸ்டர் தனது ஒப்பமிட்டு அன்பளித்த மக்ஸீம் கார்க்கியின் சிங்கள மொழிபெயர்ப்பான 'தாய்' என்ற புத்தகத்தை அடுப்பில் போட்டு எரித்து விட்டோம்."

"ஐயோ அம்மே" வாய்விட்டு அலறிவிட்டான் அஜீத்.

அங்கு சிறிது நேரம் நிலவிய பயங்கர அமைதிக்குப்பின் அஜித் கேட்டான், "ஏன் அந்தப் புத்தகத்தைத் தீயிட்டுப் பொசுக்கினீர்கள்?"

"அஜீத், நீங்கள் உணர்ச்சிவசப்பட்டுப் பேசுகிறீர்கள். விகிரமசிங்க மாஸ்டருடன் தொடர்பு இருக்கிறதா என்பதை அறிய புத்தகங்கள் புகைப்படங்கள் எல்லாவற்றையும் இரவில் வந்து செக் பண்ணுவார்கள். அவர் பலருக்குத் "தாய் " நாவலை அன்பளித்திருக்கிறார். அன்பளிக்கப் பட்டவர்கள் இரவில் கடத்திச் செல்லப்பட்டிருக்கிறார்கள். அவர்களில பலருக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. சிலர் எங்கோ பொசுக்கப்பட்டிருக்கலாம்" என்று சொல்லிக்கொண்டு காஞ்சனமலா அம்மாவுக்கு சமையலில் ஒத்தாசை செய்ய குசினிக்குள் போகிறாள்.

அஜீத் வரும்போது வெலிமடை பாலத்துக்கு அருகில் பாதி எரிந்த நிலையில் கிடந்த உடல்களை வேதனையுடன் எண்ணிப் பார்க்கிறான். அவனுக்கு விக்கிரமசிங்கா மாஸ்டரின் உருவம் மனக்கண்முன் வந்து நிற்கிறது. மாஸ்டர் ஒரு முற்போக்குவாதி. எதனையும் முற்போக்கு நோக்கில் அணுகுபவர். அவரது அன்றாட வாழ்வில் ஒவ்வொரு நடத்தையிலும் அதனைத் தரிசிக்கலாம். இன்று அவ்வாறு கொள்கையுடன் வாழ்பவர் யார்? அரசியல் நடத்துபவர்கள் அவருக்குப் பயம். அதனால் அவரிடம் ஒருவித மரியாதை. பணக்காரர்கள் அவரது கொள்கைப் பிடிப்பையும் வஞ்சகமற்ற நேர்மையான போக்கினையும் கண்டு ஒதுங்கிக் கொள்வார்கள். மோதினால் மோசம் வருமெனத் தெரியும். ஏழைகளின் அன்பன், மெலியோர்களின் காவலன். தொழிலாளர்களின் தோழன். இளைஞர்கள் அவரைச் சுற்றி சதா வட்டமிடுவர். இந்நாட்டில் இடதுசாரி இயக்கம் வளர்த்த வரலாறு அவரது வரலாறு. அஜீத்துக்கு அரசியல் அறிவில் தெளிவு ஏற்படுத்தியவர் அவர். வாழ்க்கையில் காணும் முரண்பாடுகளைக் காரண காரியத் தொடர்புடன் எடுத்துக் காட்டுவார். அவன் பல்கலைக் கழகத்தில் படிக்கும் காலத்தில் மாணவர்களின் இடதுசாரி சங்கத்தின் தலைவராக இருந்தான் என்றால் அதற்குக் காரணம் மாஸ்டரிடம் பெற்ற அறிவே. அவன் அவரை ‘மாஸ்டா’ என்றே அன்புடன் அழைப்பான். இன்று அவரைப் பிரிந்ததால் நெஞ்சம் துடிக்கிறது. ‘ஐயோ மாஸ்டர், ஒன்றுமே அறியாத பாமர மக்களின் இரத்தத்தை உறிஞ்சிக் குடிப்பவர்கள் - சந்தர்ப்பம் பார்த்திருந்து அழித்துவிட்டார்கள். எமது பயணம் நீண்டது எத்தனையோ பின்னடைவுகளைச் சந்திக்கலாம் என அடிக்கடி சொல்வீர்களே இதுவும் ஒரு பின்னடைவா?’

குசினிக்குள் இருந்து வெளியே வந்து கொண்டே காஞ்சனாமாலா “அம்மே ஹோட்டலில் வேலை செய்பவருக்கு மரவள்ளிக் கீரையோடையா சோறு கொடுப்பது? நீங்கள் பொலஸ் கறியை வையுங்க... நான் வீட்டுக்குப்போய் கொஞ்சக்கறி

கொண்டுவாறன்" எனக் கூறிக்கொண்டே தனது வீட்டை நோக்கி ஓடுகிறாள்.

அஜீத்தின் மாஸ்டரைப் பற்றிய சிந்தனை தொடர்கிறது. மக்ஸீம் கார்க்கியின் ஆக்க இலக்கியப் படைப்புக்களில் அவருக்கு அலாதிப் பிரியம். 'தாய்'நாவலில் வரும் பல நிகழ்வுகளை, கதைமாந்தர்களின் குணவியல்புகளை அடிக்கடி எடுத்துக் கூறுவார். இலக்கியம் மானிடவாதத்தின் வெளிப்பாடாக, மனித இதயத்துள் புதைந்திருக்கும் மானிடத்தை உணர்வால் நேசிக்க வழி அமைப்பதாக இருக்க வேண்டும் என மாஸ்டர் சொல்லும்போது அஜீத், தனது தாயிலும் 'தாயி'ன் பண்பைக் கண்டு களிப்படைவதுண்டு.

சில வருடங்களுக்கு முன் இறந்துவிட்ட அவனது தந்தை ஒரு ஏழை விவசாயி. அவர்களுக்குச் சொந்தமாக இருந்த சிறு வயல் நிலத்தில் பாடுபடுவது சீவியத்திற்குப் போதாமையால் வெலிமடை நகரில் வியாபாரம் செய்யும் ஒரு முதலாளியிடம் பங்குக்கு உருளைக்கிழங்கு போட்டார்கள். அறுவடை வரும்போது அப்பாவித் தந்தையை ஏய்த்து பாதிப்பங்கு கொடுக் காமல் தட்டிக் கழிக்க முயலும் முதலாளியை வாயால் போராடி கடும் சொற்களால் வசைபாடி, பகல் மட்டுமல்ல இரவுகூட பன்றிகளுக்குக் கிழங்குத் தோட்டத்தில் காவல் காப்பது ஆகிய கடின உழைப்பை ஊரறியச் செய்து, செம்மையாக உழைப்பின் ஊதியமான அரைப்பங்கைப் பெற்றுக் கொள்வாள் தாய். அப்போதெல்லாம் அஜீத் அம்மாவில் கார்க்கியின் தாயைக் கண்டான். இன்று இங்கு நடக்கும் கொடுமைகளைக் கண்டு அம்மாவின் நெஞ்சம் மரத்துவிட்டதோ, வலுவிழந்துவிட்டதோ!

தாய்நாவலில் மகன் சிறையில் இருந்து வருகிறான். எதிர்பாராத வரவைக் கண்டு தாய் உணர்ச்சிவசப்படுகிறாள். மகன் தாயின் கையைப்பற்றி அவருக்கு நன்றி கூறினான். "தானும் தன்தாயும் ஒரே மாதிரி உணர்ச்சி கொண்டவர்கள், ஒரே கொள்கை வசப்பட்டவர்கள் என்று ஒருவன் கூறிக் கொள்வது

கிடைப்பதற்குரிய பேரானந்தம் அம்மா."

'அம்மே நானும் அப்படித் தான் நினைத்தேன். ஆனால் இன்று நீ தளர்ந்துவிட்டாய். அன்று அங்கு நடந்த கொடுமை களைவிட பெருங் கொடுமைகளா இன்று இங்கு நடக்கிறது....!'

அஜீத் நாற்காலியை விட்டெழுந்து சமையலில் ஈடுபட்டுள்ள அம்மாவுடன் பேசுவதற்குக் குசினிக்குள் வருகிறான்.

அம்மா ஊரில் சமீபத்தில் நடந்த கொடுமைகள், யார் யார் காணாமல் போனார்கள், கடத்திச் செல்லப்பட்டார்கள், கொலை செய்யப்பட்டார்கள், எவ்வாறு இவைகள் நடந்தன, பாதிக்கப்பட்ட குடும்பங்கள் யாவை, இவற்றையெல்லாம் - தான் அறிந்தவற்றை மகனுக்குக் கூறினாள். அஜீத்துக்கு நெஞ்சம் வேதனையால் கொதித்தது. அவன் அம்மாவுக்கு நாட்டில் நடைபெறும் பல்வேறு சம்பவங்களைச் சொன்னான். எம்பிலிப் பிட்டியாவில் 31 பள்ளிச் சிறுவர்கள் கடத்திச் செல்லப்பட்டதையும் அவர்களுக்கு நடந்த கதியையும் அவன் சொல்லும்போது அம்மா வேதனையால் அதிர்ச்சி அடைந்து விட்டாள்.

அஜீத் மீண்டும் முன்கூடத்திற்கு வந்து இப்படியெல்லாம் நம்நாட்டில் நடப்பதற்குரிய காரண காரியத் தொடர்புகளைப் பற்றி எண்ணிப் பார்க்கிறான். இரு வாரங்களுக்கு முன்பு அவன் வேலை செய்யும் ஹோட்டலில் தங்கியிருந்த ஒரு பிரித்தானிய சுற்றுலாப் பிரயாணி தன்னை ஒரு பல்கலைக்கழக சமூகவியல் மாணவன் என அறிமுகம் செய்து இவ்விடயம் பற்றி உரையாடினார். பல தகவல்களை அவர் சேகரித்து வைத்திருந் தார். வாவியில் மிதந்த சடலங்கள், டயரில் எரியும் மனித உடல்கள் ஆகியவற்றின் பல புகைப்படங்களும் அவரிடமிருந்தன. இன்று நமது நாட்டிற்கு வருவதற்குத் தடை செய்யப்பட்ட சர்வதேச மனித உரிமை இயக்கங்களைச் சேர்ந்த ஒருவர்தான் மாறு வேடத்தில் வந்திருக்கிறாரோ என அஜீத் சந்தேகப்பட்டான்.

அஜீத் அவரிடமிருந்து நாட்டில் நடைபெறும் இந்த

நடத்தைக்குரிய காரண காரியத் தொடர்பை அறிய முற்பட்டான். அவர்தான் முதலில் கேட்டார். " 'ஐயோ அம்மே' என்றால் அர்த்தம் என்ன? நான் கொழும்பிருந்து நுவரெலியாவுக்கு ஓரிரவில் வரும்போது மனிதர்கள் துப்பாக்கிச் சூடுபட்டுத் துடிக்கும் போதும் டயரில் குற்றுயிராக எரியும் போதும் இப்படியே சத்தம் போடுகிறார்களே."

நாம் வேதனையின் வெளிப்பாடாக "ஐயோ அம்மே" என அலறுகிறோம் 'அம்மே' என்பது தாயைக் குறிப்பது. அன்பை அம்மாவுடன் தொடர்பு படுத்துவது கீழைத்தேய மரபு".

வெள்ளைக்காரன் தலையை ஆட்டியபடி அஜித் சொல்வதைக் கவனமாகக் கேட்டான். அவருக்கு கீழைத்தேய பண்புகளைப் பற்றி நிறைய அறிவு இருக்கிறது. ஆனந்த குமாரசாமியின் படைப்புகளைப் படித்திருக்கிறார். புத்த சமயத்தைப் பற்றி, பஞ்சசீலக் கொள்கையினைப் பற்றியெல்லாம் அறிந்து வைத்திருக்கிறார். அவருக்கு தலைசிறந்த பண்பாட்டுப் பாரம்பரியம் உள்ள இந்த நாடு ஏன் இப்படி ஆனது என்பதில் வியப்பாக இருந்தது.

அஜித் விளக்கம் அளித்தான்.

"இந்நாட்டு அரசியல் வாதிகளால்தான் இந்நிலை ஏற்பட்டது. பதவி மோகம்கொண்ட அரசியல் வாதிகள் நாட்டையும் மக்களையும் பற்றிக் கவனிப்பதில்லை. தங்கள் உயர்விலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். இளைஞர்கள் விரக்தியின் விளிம்பிற்கே தள்ளப்பட்டார்கள். வேலையில்லாப் பிரச்சினை தலைவிரித்தாடுகிறது. வேலை வாய்ப்புக்கள் தராதர அடிப்டையில் இல்லை. அரசியல் தலையீடு அதிகம். வடக்கிலும் கிழக்கிலும் தீர்க்கப்படாத சிறுபான்மையினரின் நியாயமான பிரச்சினை விசுவரூபம் எடுத்துள்ளது. நாட்டில் அடாவடித்தனமும் அராஜகமும் ஆட்சி நடத்துகின்றன. பணக்காரர்கள் மேலும் பணக்காரர் ஆகிறார்கள். ஏழைகள் மேலும் ஏழைகளாக ஆகிறார்கள்."

"அஜீத் சாப்பாடு ரெடி" என்று கூறிக்கொண்டு கறிக் கோப்பையுடன் தனது வீட்டிலிருந்து வரும் காஞ்சனமாலா குசினிக்குள் போகிறாள்.

அம்மா பிளேட்டில் நிறைந்து வழியும் சாப்பாட்டை அஜீத்திடம் கொடுத்துவிட்டு, அவன் சாப்பிட ஆரம்பித்ததும் 'வானம் இருண்டு' வருவதால் வெளியில் இருந்த விறகுகளை குசினிக்குள் போடும் வேலையில் ஈடுபடுகிறாள்.

சாப்பிட்டுக்கொண்டிருக்கும் அஜீத்தை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருக்கிறாள் காஞ்சனமாலா.

"என்ன யோசிக்கிறீர்கள் ? அஜீத் சாப்பிடுங்க. உங்கள் அருகே ஹோட்டல் ரிசப்ஷனிஸ்ட் ஒருத்தி நிற்பதாக நினைத்து சாப்பிடுங்க"

"காஞ்சனா! மீண்டும் நீ என்னைச் சீண்டுகிறாய். பாவம் அவர்களைக் குறைகூறுவது தவறு. வயிற்றுப் பிழைப்புக்காக அந்தத் தொழிலை அவர்கள் செய்கிறார்கள். அந்தத் தொழிலைச் செய்யும்போது அப்படித்தான் இருக்க வேண்டும்."

"பாருங்கள், அவர்களைக் குறைகூற உங்களுக்கு இவ்வளவு கோபம் வருகிறது"

"மீண்டும் நீ எரியும் தாடியில் பீடிக்கு நெருப்புக் கேட்கிறாய். பெண்கள் முதலாளித்துவ சமுதாய அமைப்பில் போதைப் பொருளாகக் கணிக்கப்படுகிறார்கள். காதல் என்பது ஏதோ களியாட்ட நிகழ்வாகக் கருதப்படுகிறது. ஹிந்தி - தமிழ் படங்களில் ஓடிப்பிடிப்பது, ஒளிந்து விளையாடுவது, கட்டி யணைப்பது காதல் காட்சிகளாகக் காட்டப்படுகின்றன. பணக்காரர் களுக்கு இது பொருந்தலாம், ஆனால் எங்களைப் போன்ற ஏழைகளுக்கு காதல் என்பது வாழ்க்கைத் துணையைத் தேடும் ஒரு புனித கைங்கரியம். இதனை நீ ஒப்புக் கொண்டால் எங்கள் அன்பு இரு வழிப்பாதை."

"அஜீத்துக்கு கோபம் வந்துவிட்டது என்னை மன்னித்து கொள், இப்போது நன்றாகப் புரிகிறது , எமது அன்பு ஒரு வழிப் பாதை அல்ல என்பது."

அப்போது கடைக்குச் சென்றிருந்த அஜீத்தின் தங்கை குசுமா ஓடி வந்து துள்ளிக் குதித்தப்படி "எங்கள் அண்ணா வந்துவிட்டார்." என்று ஒருவித ராகத்தில் கூறிவிட்டு அறைக்குள் புகுந்து அண்ணாவின் பிரயாணப்பையைத் திறந்து எதையோ துருவித் துருவித் தேடுகிறாள்.

சிறிது நேரத்துக்குப் பின் கை நிறைய டொபியும் சிறு பை ஒன்றில் அப்பிள் பழங்களுடனும் வெளியே வந்து "எங்கள் அண்ணா எனக்குக் கட்டாயம் வாங்கி வருவார்; எனக்குத் தெரியும் அச்சா அண்ணா" எனக் கூறிக்கொண்டு அஜீத்துக்கு அருகே போகிறாள். அவன் விரல்களால் தடவிக் கொண்டே "டீச்சர் அக்காவுக்கு ஒரு பழம் கொடு குசுமா" என்கிறான். காஞ்சன மாலாவின் கன்னங்கள் அப்பிள் பழமாகச் சிவக்கிறது.

இரவு வந்துவிட்டது. அம்மாவுக்குத் தூக்கமே வரவில்லை. 'இன்று எமது ஊரில் என்ன நடக்குமோ, யார் யார் கடத்தப்படுகிறார்களோ, கதிர்காமத் தெய்வமே!, இன்றிரவு எனது பிள்ளைக்கு ஒன்றுமே வராமல் காப்பாற்றிக்கொள்' என்று பிரார்த்தித்தாள். இரவின் நிசப்தத்தில் எங்கோ இரைந்து செல்லும் வாகனம் வீட்டுக்கு அருகில் வருவது போன்ற பிரமை அம்மாவுக்கு. அஜீத் காலையில் ஏற்பட்ட பிரயாணக்களைப்பில் அசந்து தூங்கிக் கொண்டிருக்கிறான்.

நடுச்சாமம் இருக்கும். வாகனம் வந்து நிற்கிறது. வெளியே பூட்ஸ் ஒலி கேட்கிறது. வீட்டிற்குள் ஐந்தாறு பேர் நுழைகிறார்கள். வந்தவர்களில் ஒருவன் மட்டும்தான் சீருடையில் நிற்கிறான். ஒருவன் துப்பாக்கியை அம்மா முன் நீட்டி எரியும் மின்விளக்குகள் அனைத்தையும் அணைக்கும்படி கட்டளை யிடுகிறான். சீருடை அணிந்தவன் டோர்ச் அடிக்க, முகமூடி அணிந்த 'கோணிபில்லா' ஒருத்தன் வீட்டிற்குள் படுத்திருந்த

வனைக் காட்டி 'இவன்தான் அஜீத்' என்கின்றான். "வாடா வெளியே, ஏறடா வேனில் என சீருடை அணிந்தவன் கூற கூடிநின்ற தடியர்கள் அஜீத்தை இழுத்துச் செல்கிறார்கள். அம்மா அழுது குளறுகிறாள். "பயப்பட வேண்டாம், பொலிஸ் ஸ்டேசனுக்குத்தான் கொண்டு போகிறோம். குற்றம் ஒன்றும் இல்லாவிட்டால் காலையில் அனுப்புகிறோம்."

இலக்கத்தகடு இல்லாத வானில் அஜீத் ஏற்றப்படுகிறான். வான் ஒரு சந்தியில் போய் நிற்கிறது. சீருடை அணிந்த அதிகாரி அந்தஸ்த்தில் உள்ளவரிடம் அஜீத் ஒப்படைக்கப் படுகிறான். விசாரணை ஆரம்பமாகிறது.

நீ நுவரேலியாவில் உள்ள ஹோட்டல் ஒன்றில் வேலை செய்கிறாய் அல்லவா?"

"ஆம்"

"விக்கிரமசிங்க உனது குருவா?"

"ஆம்"

"நீ பல்கலைக்கழகத்தில் படிக்கும்போது தீவிர இடது சாரி இயக்கங்களோடு சம்பந்தபட்ட மாணவர் மன்றத்தில் தலைவராக இருந்திருக்கிறாயா......?"

"ஆமாம் "

"இன்னும் இந்தத் தீவிர இடதுசாரி இயக்கங்களுடன் ஈடுபாடும் செயற்பாடும் இருக்கிறதல்லவா?"

"இல்லை, நான் ஒரு ஹோட்டல் ஊழியன். எனக்கு இது பற்றிச் சிந்திக்கவோ செயற்படவோ நேரமில்லை"

"பொய் சொல்லாதே, இன்று உங்கள் இயக்கம் மாறு வேடத்தில் தான் இயங்குகிறது. இன்றும் நீ வீட்டுக்கு வந்தது ஏதோ நாசகார வேலையில் ஈடுபடவே."

"இல்லை."

"இவற்றைவிட உன்மேல் ஒரு பாரிய குற்றம் இருகிறது. நீ சர்வதேச மட்டத்தில் செயல்படத் தொடங்கி விட்டாய். நமது அரசாங்கத்தால் இந்த நாட்டிற்கு வருவதற்குத் தடை செய்யப்பட்ட சர்வதேச மனித உரிமை இயக்கப் பிரதிநிதி ஒருத்தன் சுற்றுலாப் பிரயாணியாக வந்திருக்கிறான். அவனுக்கு நீ தகவல்களைக் கொடுத்திருக்கிறாய். புகைப்படங்கள் கொடுத்திருக்கிறாய். இவற்றையெல்லாம் நாம் பறிமுதல் செய்துவிட்டோம். உனது விலாசம் உன்னைப் பற்றிய குறிப்பு எல்லாம் அவனது டயரியில் பார்த்தோம்...... இதற்கு மேல் என்ன விசாரணை இவனுக்கு... இதுதான் தண்டனை... கொண்டு போங்கள்.

மீண்டும் வான் பயணம் ஆரம்பமாகிறது.

போகும் வழியில் வேன் சாரதியும் சிவில் உடை அணிந்த ஒருத்தனும் உரையாடுவது அஜீத்தின் காதுகளில் நாராசமாய் ஒலிக்கின்றது.

"இன்று இது மூன்றாவது ஆள்; பாவம் சில அப்பாவிகளும் அநியாமாக அழிக்கப்படுகிறார்கள்."

"எங்களுக்கு மேலிடத்தில் கட்டளையிடும் பொழுது மேலதிகாரிகள் சொன்னார்கள், நச்சு மரங்கள் உள்ள காட்டை அழிக்கும்போது சில நல்ல மரங்களும் அழியத்தான் செய்யும். உடலில் உள்ள ஆபத்தான ஒரு கட்டியை வெட்டும்போது இரத்த நாளங்கள் வெட்டுப்படத்தான் செய்யும்."

அவ்வாகனம் சுடலை வீதியை நோக்கிப் போகிறது. டயர் எரியும் நாற்றம் வீசுகிறது. அவனுக்குப் புரிந்து விட்டது. அஜீத் சுய உணர்வை இழந்தான். வேனை விட்டு இறக்கப்படுகிறான். அவனது கைகள் கட்டப்படுகின்றன. வேனிலிருந்த தடியன் துப்பாக்கியை எடுத்து அஜீத் முன் நீட்டுகிறான்.

"ஐயோ அம்மே, ஐயோ அம்மே" அறையில் படுத்திருந்த அஜீத் அலறித் துடித்தக்கொண்டு படுக்கையை விட்டு

எழும்புகிறான். புற்பாயில் தூக்கம் வராது புரண்டு கொண்டிருந்த அம்மா, "என்ன புத்தா" எனப் பதட்டக் குரலுடன் எழுந்து அறைக்குள் போகிறாள்.

"பொல்லாத கனவு ஒன்று கண்டேன் அம்மே"

"என்ன கனவு அது?"

அஜீத் ஒன்றுமே சொல்லவில்லை.

"நான் போன வாரம் ஒரு கனவு கண்டேன். இரவு வந்து உன்னை ஒரு ஜீப்பில் ஏற்றிச் சுடலைக்குக் கொண்டு செல்கிறார்கள். அங்கு உன்னை...." மேலும் தொடர முடியாமல் அம்மா விக்கி விக்கி அழுகிறாள், "ஐயோ அம்மே."

அதன் பின் யாருக்கும் தூக்கம் வரவில்லை. விடிந்ததும் நுவரேலியாவுக்குப் போக வேண்டிய ஒழுங்குகளைச் செய்கிறான் அஜீத்.

அவன் பயணம் புறப்பட்டு விட்டான், அம்மாவும் தங்கையும் காஞ்சனமாலாவும் வழி அனுப்புகிறார்கள். பன்சலைக்கு எதிரேயுள்ள பாலத்திற்கு அருகில் உள்ள பஸ்தரிப்பு நிலையத்துக்கு அண்மையில் அவன் வந்து விட்டான். ஆற்று மணலைச் சாக்கிலே சுமந்து கொண்டு, ஆற்றிலிருந்து பாலத்துக்கருகில் வரும் படிகளில் பெண்கள் சிலர் ஏறி, வீதிக்கு வருகிறார்கள். அஜீத்துக்கு அதிர்ச்சியாக இருக்கிறது. குணதாசவின் மனைவி அப்பெண்களில் ஒருத்தியாகக் காணப்படுகிறாள்.

ஆறு மாதங்களுக்கு முன்பு, குணதாசா பொலிஸ் பொறுப்பதிகாரியால் கைதுசெய்து அழைத்துச் செல்லப்பட்டான். ஒரு வாரத்திற்குப் பின் இராணுவ முகாம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருப்தாகக் கூறப்பட்டது. இராணுவ முகாமில் விசாரித்த போது "விசாரணையில் குற்றவாளியாகக் காணப்பட்டவர்களை மட்டுமே தடுத்த வைத்திருக்கிறோம்

மற்றவர்கள் விடுதலை செய்யப்பட்டுவிட்டார்கள்" எனச் சொன்னார்கள். ஆனால் குணதாச அங்கு இருக்கவில்லை. மனைவி மூன்று மாதங்களாக எங்கோ எல்லாம் தேடினாள். பாராளுமன்ற ஆளும் கட்சி உறுப்பினர்களை, எதிர்க்கட்சி உறுப்பினர்களை அணுகினாள். பயன் எதுவும் கிடைக்கவில்லை. இன்று இத்தொழில் செய்து வாழ்க்கையை ஓட்டுகிறாள். பிள்ளைகளின் வயிற்றுப்பசி தணிய வேண்டுமே.

அஜீத் நடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்க்கிறான். காஞ்சனாமாலா கை அசைத்து டாட்டா காட்டுவது அவன் கண்களுக்குப் படவில்லை. வீட்டின் இடது பக்க மேட்டில் அமைந்திருக்கும் விக்கிரமசிங்க மாஸ்டர் வீடும் அவரது திருவுருவமும் கண்முன்னே வருகின்றன. மாந்தளிர் நிறம், பரந்த நெற்றி , ஒளி படைத்த தீட்சண்ணியப் பார்வை, சதா சிரித்த முகம், தாய் நாவலில் இறுதிக் கட்டதில் கூறும் சில வார்த்தைகளை மாஸ்டர் அடிக்கடி கூறுவார். அஜீத்துக்கு ஞாபகம் வருகிறது.

"எதைக் கண்டும் நீங்கள் பயப்படாதீர்கள், நீங்கள் இப்போது வாழ்கின்ற வாழ்க்கையை விட எதுவும் கொடுமை வாய்ந்ததாக இருக்கப் போவதில்லை."

தாய் மூர்க்கத்தனமாக தாக்கபடும்போது கூறுகிறாள். "உங்களது கொடுமைகளெல்லாம் ஒரு நாள் உங்கள் தலையிலேயே வந்து விடியப்போகின்றன."

தூரத்திலே அஜீத் பிரயாணம் செய்யப் போகும் பஸ் வரும் சத்தம் கேட்கிறது. ஏற்றங்கள் வளைவுகள் தாண்டி வர இன்னும் எவ்வளவோ நேரம் செல்லும்.

-1995-

# இடறும் கால்.......!

அவளை மீண்டும் சந்திப்பேன் என நான் என்றுமே எதிர்பார்க்கவில்லை. இன்று காலை ஜீப்பில் வந்து கொண்டிருந்த போது, சுமார் நூறு மீட்டர் தூரத்திலேயே ஒடுங்கிய இடையும் ஒய்யார நடையும் உள்ள புறத்தோற்றம் அவளாகத்தான் இருக்க வேண்டும் என்ற யூகத்தை ஏற்படுத்தியது.

அருகில் வந்ததும் ஜீப் சாரதியை வேகத்தைக் குறைக்கும்படி சைகை காட்டி விட்டு , அவளைச் சிறிது நேரம் உற்றுப் பார்த்துவிட்டு ஜீப்பை பாதை ஓரத்தில் நிறபாட்டியதும் இறங்கி அருகில் வந்து "நீங்கள் மரகதமா?" என்றேன்.

ஒரு கணத் தயக்கத்திற்குப் பின் "ஆமா நீங்க .... குமார் டாக்கரய்யாவா?" என்றாள். அவளின் கண்கள் அகல மலர்ந்தன.

தலையை அசைத்துக்கொண்டே "நீ இங்க எப்படி வந்தாய்" என்றேன்.

"நாங்க நாவலபிட்டியிலிருந்து பண்டார வளைக்கு மாறி வந்து ஐஞ்சு வருஷமாச்சு...... ஐயா எங்க வந்தீங்க "

"நான் இப்ப ஆறுமாதமாக பண்டாரவளையில் தான் வேலை. வெலிமடை றோட்டிலை வாடகைக்கு வீடு எடுத்துத் தங்கியிருக்கிறன்."

"ஐயா நல்லா தடிச்சிட்டீங்க. அடையாளமே கண்டு பிடிக் முடியாமல் இருக்கு. நாங்க ரெயில்வே குவாட்டேசிலைதான் இருக்கிறம், அந்திக்கு நம்ம வூட்டுக்கு வாறீங்களா?"

நான் சிரித்துக்கொண்டு தலையை மட்டும் ஆட்டிவிட்டு ஜீப்பை நோக்கிப் போனேன். மீண்டும் அவள் "கண்டிப்பாக வந்திடுங்க" என கன்னங் குழிவிழ, கண்கள் சிதறடிக்கக் கூறினாள்.

இச்சந்திப்பிற்குப் பின் என்மனம் வேலையில் ஒன்ற வில்லை. இன்று காலை பண்டாரவளை நகரத்தை அடுத்த இரண்டு மூன்று கிராமங்களை உள்ளடக்கிய ஒரு மத்திய நிலையத்தில் மாடுகளுக்கு செயற்கை முறையில் சினைப்படுத்தும் வேலையில் நான் ஈடுபட்டுக்கொண்டிருந்தாலும், என்மனமோ மரகதத்திற்கும், எனக்கும் இருந்த அந்த உறவைப்பற்றியே அசைபோட்டுக் கொண்டிருந்தது.

மிருக வைத்திய அதிகாரியாக என் தொழில் வாழ்வு நாவலப்பிட்டியில் ஆரம்பித்தது. அப்போது யாழ்பாணத்தவரான ஒருவரே நாவலப்பிட்டி புகையிரத நிலையத்தில் ஸ்டேசன் மாஸ்டராக இருந்தார். அவரது பங்களாவிலேதான் நான் குடி யிருந்தேன். ஸ்டேசன் மாஸ்டரின் மனைவி ஓர் ஆசிரியை. நாவலப்பிட்டி புகையிரத நிலையத்தில் 'சிக்னல் மன்'னாக வேலை செய்யும் கறுப்பையாவின் மனைவி மரகதம் பகலில் சமைப்பதற்காகத் தினமும் வீட்டிற்கு வருவாள்.

அவள் எப்போதும் என்னை 'டாக்டர் ஐயா' எனக் குழைவாக அழைப்பாள். வெளிக்கள வேலையில் ஈடுபட்டி ருந்ததால் வீட்டிற்கு எந்த நேரத்திலும் போகும் சந்தர்ப்பம் எனக்கிருந்தது. சிலவேளைகளில் ஸ்டேசன் மாஸ்டர், அவரது

மனைவி ஆகிய இருவரும் இல்லாத வேளைகளில் மரகதம் சமையல் செய்து கொண்டிருக்கும் போது நான் செல்வேன். ஈடுபட்டிருக்கும் வேலையைப் பாதியில் நிறுத்திவிட்டு எனக்குத் தேநீர் தன்கையால் பரிமாறுவாள். எனக்கு இப்படி ஒரு பெண்ணுடன் தனிமையில் பழகும் வாய்ப்பு இதுவே முதல் தடவை. மரகதம் மிகவும் சரளமாகவே என்னுடன் பழகுவாள். தனது சமையலின் குறை நிறைகளைப் பற்றிக் கேட்டறிவாள். நான் அவளது சமையலை விதந்து பாராட்டுவேன். அவள் பரிமாறிய தேநீரைக் குடித்துக்கொண்டு ஊரிலிருந்து வந்த கடிதத்தைப் படித்துக்கொண்டிருப்பேன். தேநீர்க் கோப்பையை திருப்பி எடுக்க வரும்போது என் முகத்தில் கடிதச் செய்தியின் தாக்கத்தில் ஏற்பட்ட மாற்றத்தை இனங்கண்டு "ஏனய்யா ஊரிலை யாருக்கும் சொகமில்லைங்களா" என்பாள்.

ஆரம்பத்தில் கடிதத்தில் உள்ள சில முக்கிய செய்திகளை மட்டும் கூறிவந்த நான், நாளடைவில் என் தங்கையின் கல்யாண விடயமான முயற்சியைப் பற்றிக் கூறலானேன். தங்கைக்குக் கல்யாணம் முடிவான கடிதச் செய்தியைச் சொன்னதும் மரகதம் மகிழ்ச்சியால் பூரித்துப் போனாள்.

தனது கவலைகளையும் இடைக்கிடை எனக்குச் சொல்லுவாள். ஆனால், அவள் முகம் வாடியதை நான் என்றும் கண்டதேயில்லை. மிக முக்கியமான உதவி என்றால் மட்டுமே என்னை வாய்திறந்து கேட்பாள். அவளது கணவன் கறுப்பையா நிரந்தரக் குடிகாரன். குடிக்கு அடிமையாகி, நரம்பு மண்டலமே பாதிக்கப்பட்டு நிபுணத்துவ வைத்திய ஆலோசனையைக் கேட்க வேண்டிய கட்டம் ஏற்பட்டுவிட்டது. என்னுடன் ஒன்றாக இளவயதிலிருந்து படித்து பல்கலைக்கழகத் தரப்படுத்தல் தடையைத் தாண்டுதலில் என்னை உச்சி, என்னைப்போல கால் நடைகளுக்கு வைத்தியம் செய்யாது, மனித இனத்துக்கு வைத்தியம் செய்யும் பாக்கியம் கிடைத்த நண்பன் ஒருவன் பேராதனைப் போதனா ஆஸ்பத்திரியில் "கவுஸ் ஒவ்வீஸராக "

இருந்தான். அவனது உதவியுடன் மிகத்தரமான வைத்திய உதவியைக் கறுப்பையாவுக்குப் பெற்றுக்கொடுத்தேன். மரகதம் இந்த உதவியைத் தான் என்றுமே மறக்கமாட்டேன் எனப் பலமுறை சொல்லி இருக்கிறாள்.

அவளுக்கு என்மேல் இருந்த சிரத்தையின் காரணமோ என்னவோ அவளுக்கு வலிந்து ஏதாவது விதத்தில் உதவ வேண்டுமென்ற விருப்பத்தை எனக்கு ஏற்படுத்தியது. அவளுக்குத் திருமணமாகி ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. ஆனால் குழந்தைகள் இல்லை. அவளது அக்காவின் குழந்தை ஒன்றையே வளர்த்து வந்தாள். ஆறாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்த அவளது அக்காவின் மகளுக்கு அந்தி நேரத்தில் எனக்கு ஓய்வு கிடைக்கும்போது கணக்குப் பாடத்திற்கு ரியூசன் கொடுத்தேன்.

மரகதத்திற்கும் எனக்கும் உள்ள உறவில் இப்படி ஒரு திருப்பம் ஏற்படுத்தப் பட்டதற்குரிய காரணத்தை என்னால் அறுதியிட்டு அனுமானிக்கமுடியவில்லை. மனதில் சூல்கொண்டிருந்தது அன்று பிரசவித்ததோ அல்லது அன்றைய நிகழ்வுதான் இப்படி ஒரு விபத்திற்கு வித்திட்டதோ.?

அன்று ஒரு 'பார்ட்டி'. நான் அங்கத்தவனாக இருந்த நாவலப்பிட்டி நகரில் உள்ள 'கிளப்' ஒன்றில் எனது வயதை ஒத்த சில நண்பர்கள் சேர்ந்து அண்மையில் திருமணம் செய்யப் போகும் ஒரு நண்பனுக்கு வைத்த 'பச்சிலேஸ் பார்ட்டி' அது. நண்பர்கள் சோடாவில் கலந்து கொடுத்த குடிவகை எனக்குச் சிறிது ஓவராகி விட்டது. சக நண்பனின் வாழ்வில் ஏற்பட்ட திருமணமாகப்போகும் திருப்பம் தங்களுக்கு இப்போது கிட்டாத பாக்கியமாகி ஆற்றாமை கொண்டு, அதற்கு ஈடுசெய்வது போல வீடியோவில் ஒரு ' புளூபிலீம்' பார்ப்பதற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். அதுமட்டுமல்ல, அதற்குப் பிறகு வேறு ஏதோ ஒன்றிற்குத் திட்டம் தீட்டினார்கள். என்னை அவர்கள் அணுகிய போது நான் அறவே மறுத்துவிட்டேன். நான் ஒன்றுமறியாத பபா என்று என்னைக் கிண்டல் செய்தார்கள்.

'கிளப்' பிலிருந்து வீட்டிற்கு வந்தபோது மரகதம் மட்டும் தான் வீட்டிலிருந்தாள். அன்று குளித்து உலராத சுருண்ட கேசங்களை விரித்தவாறு ஏதோ ஒரு போதைப் பொருளாக எனக்குச் காட்சி தந்தாள். நான் அவளை ஏற இறங்கப் பார்த்துக்கொண்டு எனது அறையை நோக்கிச் சென்றேன். அவள் கன்னங்குழியச் சிரித்தவாறு என்னையே ஏறிட்டுப் பார்ப்பது போல் இருந்தது. ஐந்து நிமிடங்கள் கூடச் சென்றிருக்காது. கையில் தேநீர் கோப்பையுடன் வந்த எனது அறையின் வாசலில் நின்றாள். படுக்கையில் சாய்ந்தவாறு உள்ளே வரும்படி சைகை காட்டி னேன். தயக்கத்துடன் உள்ளே நுழைந்த மரகத்தை நோக்கி கிளப்பில் நண்பர்கள் உரையாடுவது போல சிலேடை சிந்தக் கூறினேன். "எனக்கு இப்ப ரீ வேண்டாம் வேறு தாகம்தான் இருக்கிறது......! தேநீர்க் கோப்பையை மேசையில் வைத்துவிட்டு தலை குனிந்து நின்றாள். அடுத்த கணம் நடந்தது..... எப்படி ஏற்பட்டதென என்னால் நினைவுகூர முடியவில்லை.

ஒரு கணத்து உந்துதல் இப்படி... ஒரு விபத்தில் முடியுமென நான் எதிர்பார்க்கவில்லை.!

அடுத்த நாள் அவளது முகத்தை என்னால் பார்க்க முடியவில்லை.

ஆனால் அவள் அதே கன்னங் குழிவிழும் சிரிப்பை உதிர்த்துச் சொல்வதைக் கடைக்கண்களால் கண்டேன். தனிமையில் அவளைச் சந்திப்பதைச் சில நாட்களாகத் தவிர்த்தேன். அடுத்த தடவை தனிமையில் சந்தித்த போது மரகதம் எதுவுமே நடக்காததது போல என்னுடன் உரையாடினாள். தனது கணவண் மீண்டும் குடிக்கத் தொடங்கிவிட்டார் எனவும் நான் புத்தி சொன்னால் கேட்பார் எனவும், என்னை இந்த உதவியைக் கட்டாயம் செய்யும்படியும் கேட்டாள். சிறிது நேரம் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தவள், என்னை ஏற இறங்கப் பார்த்து விட்டு, குரல் கரகக்கக் கூறினாள். "ஒங்க தங்கச்சிக்கு கல்யாணம் முடிஞ்சிது தானே...... நீங்க நல்ல இடமாப் பார்த்து கல்யாணம்

செய்யலாம் தானே.....?" நான் கடைக்கண்ணால் அவளது முகத்தை உற்று நோக்கினேன். என்னால் புரிந்து கொள்ள முடியாத ஒரு மாற்றம் அவளது முகத்தில் பளிச்சிட்டது. நான் அவளது கேள்விக்கு ஒன்றுமே பதில் சொல்லாது அவளது கணவனின் வியாதி பற்றி உரையாடலைத் திசை திருப்பினேன்.

இது நடந்து ஒரு வாரம் கூட முடிந்திருக்காது. ஊரிலிருந்தது என்னை உடனடியாக வரும்படியாகக் கடிதம் ஒன்று வந்தது. ஊரில் அப்பாவும் அம்மாவும் "நல்ல இடமாக ஒண்டு வந்திருக்கு நழுவவிடக் கூடாது" என வற்புறுத்தி திருமண ஏற்பாடுகளைத் திடீரென முடித்தனர். ஊருக்கு அவசரமாகப் போன நான், கையோடு மனைவியையும் கூட்டிக்கொண்டு இரு வாரத்துள் நாவலபிட்டிக்குத் திரும்பினேன். புது மணத் தம்பதிகள் சமேதராய் ஸடேசன் மாஸ்டர் வீட்டுக்குள் அடியெடுத்து வைத்தபோது, ஸ்டேசன் மாஸ்டர் குடும்பத்துடன் ஆரத்தி எடுத்து எம்மை வரவேற்றாள் மரகதம். நான் குடும்பமாக அங்கிருந்த போதும், வழக்கம்போல் அவள் அங்கு வருவாள். என் மனைவியை "அம்மா.... அம்மா" எனக் குழைவாக அழைப்பாள். சமையலுக்கு ஒத்தாசை செய்வாள். என் மனைவியைச் சமையல் செய்யவிடாது, தானே எல்லாம் செய்வாள். மரகதத்தை என் மனைவிக்கு நன்றாகப் பிடித்து விட்டது. ஸ்டேசன் மாஸ்டரின் மனைவி இவளிடம் உதவி பெறுவதற்கு கொடுத்து வைத்தவளென அடிக்கடி என் மனைவி சொல்லிக்கொள்வாள். மூன்று மாதங்கள் மட்டும்தான் அங்கிருந்தேன். அதற்குள் எனக்கு வவுனியாவுக்கு மாற்றம் கிடைத்தது. நாவலபிட்டியை விட்டு நிரந்தரமாகவே நான் போய் விட்டேன். மரகதம் தாங்கொணாத பிரிவுத் துயரால் கண்கள் கலங்க நாவலபிட்டி ஸடேசனில் என்னை வழி அனுப்பி வைத்த அந்தக் காட்சி இன்னும் என் நெஞ்சில் பசுமையான நினைவாக நிற்கிறது.

இன்று காலையில் அவளைச் சந்தித்த நேரம்தொட்டு என்றோ நடந்த - கெட்ட கனவாக நான் மறந்திருந்த - அந்தச்

சம்பவம் என நெஞ்சில் பூதாகரமாக உருவெடுத்து நிற்கிறது.

நாட்டின் நிலைமை காரணமாக நான் ஊருக்குப்போய் ஆறு மாதங்களுக்கு மேலாகிவிட்டது . இவ்வளவு நீண்ட காலமாக நான் மனைவியைப் பிரிந்திருக்கவில்லை. பிரிவுக் கொடுமையின் தாக்கம் என் சிந்தனையில் புதிய பரிமாணத்தைக் கொடுக்கிறதோ? ஆறு மாதங்களாக மனத்தில் உறங்கிக் கொண்டிருந்த உணர்வுகள் விழித்துக் கொள்கின்றனவோ ? மனக்குரங்கு எங்கோ எல்லாம் தாவுகிறது.

என் மனநிலையை முகம் இலகுவில் காட்டிக்கொடுத்து விடும். "என்ன டொக்டர், ஒரு மாதிரி இரிக்கீங்க ஊரிலிருந்த ஏதாச்சும் செய்தி கிடைச்சிருச்சா? " என என்னுடன் கூட இருக்கும் ஆப்டீன் கேட்கிறார்.

"மனதிலை மகிழ்ச்சி இருந்தால்தானே மாஸ்டர் முகத்திலை மகிழ்ச்சி இருக்கும் ? ஊருக்குப் போக போக்குவரத்து வசதிதான் இல்லாவிட்டாலும் அங்கு என்ன நடக்குது என்று கூட அறிய முடியவில்லையே ? நமது நாட்டு நிலைமை என்றுதான் சரிவரப் போகிறதோ ? என்றுதான் எமக்கு நிரந்தர நிம்மதி கிடைக்கப் போகிறதோ?"

புதிதாக இன்று முளைவிட்ட மனக் குழப்பத்தைப் பற்றி எப்படி மாஸ்டரிடம் சொல்வது ? புரையோடிப்போன நாட்டுப் பிரச்சினையின் தாக்கத்தைச் சொல்லி தப்பித்துக் கொள்ள முனைகிறேன்.

அந்தச் சம்பவத்தைப் பற்றி என்னையறியாமல் மனம் மீளாய்வு செய்கிறது. அந்த நிகழ்வுக்கு மரகதம் மனப்பூர்வமாக இசைந்திருப்பாளோ? அவளது அனுபவம் எப்படி இருந்திருக்கும். என்னை ஆட்கொண்ட இன்ப உணர்வினை அவளும் பெற்றிருப்பாளோ? இப்பேற்பட்ட ஓர் உறவினை அவள் முன்னரே எதிர்பார்த்திருப்பாளோ?.

அவளது கணவன் குடி என்னும் போதைப் பொருளுக்கு

அடிமையானவன். போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் சிற்றின்ப வேட்கையில் ஈடுபாடு குறைந்தவர்கள் என்பார்கள். இக்குறைப்பாட்டினை ஈடுசெய்து அடக்கப்பட்ட உணர்வுகளுக்கு ஒரு வடிகாலாக அந்நிகழ்வு அமைந்திருக்குமா?

'என் சிந்தனை விபரீத எண்ணங்களுக்கு வித்திடுறதோ? வேண்டாம்! மரகதத்தைச் சந்திப்பதையே தவிர்த்துக்கொள்வோம்' வலிந்து மன அடக்கத்தை வரவழைத்துக்கொண்டு அன்றைய பத்திரிகையைப் புரட்டுகிறேன்.

பத்திரிகைச் செய்திகளில் என் மனம் ஒன்றவில்லை. பாவம் மரகதம். கட்டாயம் என்னை வரும்படி அழைத்தாளே என் வரவை எதிர்பார்த்து ஏமாற்றமடையப் போகிறாள். ஏனோ அவளை ஏமாற்ற என்மனம் ஒப்பவில்லை.

வரவேற்பு மாடத்தில் உட்கார்ந்திருந்த நாற்காலியியை விட்டெழுந்து என் அறைக்குச் சென்று அழகான 'ரீ சேட்' ஒன்றை அணிந்து நிலைக்கண்ணாடி முன்னின்று பல தடவைகள் தலையை வாரிக்கொண்டு புறப்பட்டு, மரகதம் குறிப்பிட்ட 'றெயில்வே குவாட்ட'சை நோக்கி என் பயணத்தை ஆரம்பிக் கின்றேன்.

கடிவாளம் அறுந்த குதிரையாக என் சிந்தனைகள் துள்ளுகின்றன. மனித ஒழுக்க பிறழ்வுக்குப் பாலியல் பங்கு பற்றியும், காரண காரியத் தொடர்புகள் பற்றியும் ஆழமாக நோக்குகின்றேன். இயற்கை உந்துதல் மிருகங்களைப் போல் மனித இனங்களுக்கும் உண்டல்லவா ? மிருகங்களின் இனப்பெருக்கத்தைப் பற்றி நான் பட்டப்படிப்புக்கு எழுதிய ஆய்வுக் கட்டுரையில் மனிதனை ஒரு முன்னேறிய மிருகமாக நிறுவி, இனப்பெருக்க இயல்புகள் இரு இனங்களுக்கும் ஒத்திருப்பதைச் சுட்டிக் காட்டியிருந்தேன். எனது ஆய்வுக் கட்டுரையை நெறிப்படுத்திய பேராசிரியர், மிருகங்கள் வேட்கைக் காலத்தில் தொழில்படும் விதத்தை சில மனித இயல்புகளுடன் ஒத்திருப் பதைப் பற்றிக் குறிப்பட்ட பகுதியை விதந்தும், வியந்தும் பாராட்டி,

இக்கருத்து தொடர்ந்து விரிவாக ஆய்வு செய்யப்பட வேண்டு மெனக் கூறியதை என் மனம் நினைத்துப் பார்க்கிறது. அன்று நான் குறிப்பிட்ட அந்தக் கருத்து இன்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றதோ? நானே பரிசோதனைப் பொருளாக நிற்கின்றேனோ?

பண்டாரவளை புகையிரத நிலையத்தை அண்மிக்கும் போது நன்றாக இருட்டிவிட்டது. கறுப்பையா ஒரு வேளை 'டியூற்றி'யில் இருப்பானோ என்ற யூகத்துடன் புகையிரத நிலை யத்தை நோக்கிப் போகிறேன்.

சிக்னல் போடும் அறைக்கு முன்னால் மெலிந்தது வாடிய சிறிது வயது முதிர்ந்த தோற்றமுடைய ஒருவர் நிற்கிறார். புகையிரத நிலைய சிற்றூழியராக இருக்க வேண்டும். "இண்டைக்கு கறுப்பையா டியூற்றி இல்லையா?" நான் விசாரிக்கிறேன்.

"நான்தான் கறுப்பையா ? நீங்க யாரு சிறிது நேரம் உற்றுப் பார்த்துவிட்டு "யாரு குமார் டாக்டரய்யாவா? ஆமா மரகதம் சொல்லிச்சு ஓங்களைக் காலையிலே கண்டேன் எண்டு"

"கறுப்பையா நல்லா மெலிஞ்சிட்டாய். ஆளையே அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லையே "

பரஸ்பரம் குடும்ப சுகம் பற்றி பிரஸ்தாபித்த பின் கறுப்பையா கூறுகிறான். "இண்டைக்கு எனக்கு டியூற்றி முடிய இரவு பன்னிரண்டு மணியாகும். நம்ம வூட்டுக்கு கண்டிப்பாய் போயிட்டுபோங்க, மரகதம் பகல் பூரா ஓங்களைப் பற்றியே பேசிக்கொண்டிருந்திச்சு. கண்டிப்பா நீங்க வருவீங்க என்று சொல்லிட்டிருந்துச்சு. பாத்துக்கிட்டிருப்பாங்க. ஏமாத்தீடாதீங்க. நம்ம குவாட்டஸ் கிட்டதான் இருக்கு. அதோ பாருங்க அந்த தேரியிலை லயிற் தெரியுதே அது தான். இந்தக் குறுக்குப் பாதையிலை போங்க "

கறுப்பையா என்னை வழி அனுப்பி வைத்து விட்டு,

தியத்தாலவ புகையிரத நிலையத்தில் இருந்து புறப்பட்டுவிட்ட கொழும்பில் இருந்து வரும் புகையிரதம் பண்டாரவளைக்கு வந்தடைய ஏதுவாக சிக்னலைப் போடுகிறான்.

குறுக்குப் பாதையில் சிறிது நேரம் நடந்தபின் திரும்பிப் பார்க்கிறேன். கறுப்பையாவின் உருவம் மறைந்து விட்டது. ஆனால் அவன் போட்ட சிக்னல் பச்சை விளக்கு, தெளிவாகவே தெரிகிறது.

கறுப்பையாவின் தோற்ற ஆளுமையுடன் மரகத்தின் தோற்ற ஆளுமையை ஒப்பிட்டுப் பார்க்கிறேன். கறுப்பையா வாடி வதங்கி வயோதிபப் பருவத்தை எட்டிப் பிடிப்பது போன்ற தோற்றம் . மரகதமோ இன்னும் இளமைப் பூரிப்புடன் சீரஞ்சீவிக் கவர்ச்சியுடன் இருக்கிறாளே. இருவரையும் ஒன்றாகக் காணும் ஒரு புதியவர் கணவன்- மனைவி என்பதை நம்பவே மாட்டார். தந்தையும் மகளும் போன்ற தோற்றம், ஒரு மனைவி கணவன் துணையோடுதானே காமனை வென்றாக வேண்டும். மரகதம் நிறைவேறாத ஆசைகளைச் சுமந்து வாழ்கிறாளோ ? இதுவும் ஒரு வகையில் பாவம் தானே!

ஒற்றையடிப் பாதையில் கிளை பிரிந்து, கறுப்பையா வீட்டுற்குப் போகும் வழியில் அமைந்த படிக்கட்டுக்களில் ஏறுகிறேன். படிகளில் ஏறும் போது கல்லொன்று காலில் இடறி அசைகிறது. மரகதம் வாசற் கதவின் வெளிப்புறத்தில் நிற்பது தெளிவாகத் தெரிகிறது.

"வாங்க! வாங்க டாக்டரய்யா! அந்தியில் இருந்து நீங்க வருவீங்க என்று பார்த்துக்கிட்டிருந்தன்; உட்காருங்க"

மரகதத்தை உற்றுப் பார்க்கிறேன். எனக்குப் பிடித்த பச்சை நிறச் சேலை கட்டி, குங்குமப்பொட்டிட்டு பத்தாண்டுகளுக்கு முன்பு அந்த விபத்து நடந்த தினத்தில் காட்சி கொடுத்த தோற்றத்துடன் நிற்கிறாள்.

நான் உட்கார்ந்து விட்டு திரும்பிப் பார்க்குமுன் என்ன

நினைத்தாளோ கலைந்திருந்த கேசங்களை அநாயாசமாக முடிந்து கொண்டை போட்டுக் கொள்கிறாள். மார்புச் சேலையை லாவகமாகச் சரிசெய்துகொண்டு மரகதம் கூறுகிறாள். "அவருக்கு இன்னைக்கு இரவு டியூற்றி. உங்களைக் காண மிகவும் ஆசையாக இருக்கு எண்டு சொன்னாரு "

"நான் ஸ்டேசனுக்குப் போய் கறுப்பையாவை சந்திச்சு கிட்டுதான் வாரேன். என்னைக் கண்டிப்பா வீட்டுக்குப்போய் விட்டுப் போகச்சொன்னார்" மரகத்தை நிமிர்ந்து பார்க்கிறேன். நாவலப்பிட்டியில் நான் கண்ட அதே தோற்றப்பொலிவு, கன்னங் குழியச் சிரிக்கிறாள்.

"அம்மா சொகமா இருக்கிறாங்களா? ஐயாவுக்கு எத்தினை கொழைந்தீங்க " மரகதம் வினவுகிறாள்.

"இரண்டு குழந்தைகள். ஒரு மகனும் ஒருமகளும். மகளுக்கு ஏழுவயது; மகனுக்கு இரண்டு வயது."

"மகள் அம்மாவைப்போல ரொம்ப அழகாக இருப்பாங்க" கடைசிச் சொற்களைக் கூறும்போது அவளது முகத்தில் வெட்கம் பளிச்சிட குரல் குன்றி ஒலிக்கின்றது.

"மரகதம் நீ வளர்த்த மகள் இப்ப எங்கை?"

"டாக்டரய்யா, அவ இப்ப ரீச்சரா இருக்கிறா. நீங்க செஞ்ச உதவியை அவ இண்டைக்கும் மறக்கேலை. அடிக்கடி உங்களைப்பற்றி சொல்லிட்டு இருப்பா. அவவோடை படிச்ச பிள்ளைகள் ஒருத்தரும் கணக்குப்பாடம் பாஸ் பண்ணாததால வேலை கெடைக்கெலை. குமார் டாக்கடரய்யா படிச்சுக் கொடுத்ததாலே தான் கணக்கு பாஸ்பண்ணி இன்னைக்கு டீச்சரா இருக்கிறேன். அந்த புண்ணியவான் எங்கே இருக்கிறரோ, அவர் வூட்டு எட்ரஸ கூடத் தெரியவில்லை. அவற்றை படம் ஒன்று கூட நம்ப கையில இல்ல அப்படின்னு போன வாரம் கூட ஏதோ சங்கதியிலை சொல்லிட்டிருந்திச்சி."

நான் திக்குமுக்கடைகிறேன். என்றோ ரெயில் பயணம் என ஒதுங்கிய உறவு இப்படி இறுக்கமாக இருக்கும் என நான் எதிர்பார்க்கவில்லை! என் புகைப்படம் அவர்களிடம் இல்லை என ஏங்குகிறார்கள்.?

அவளே தொடர்கிறாள். "அவ பண்டாரவளை வெளிமடை பாதையிலை உள்ள டயரபா இஸ்கூலிலை படிச்சிக் கொடுக்கிறாள். வெள்ளிக்கிழமை நம்மவூட்டுக்கு வந்து திங்கட்கிழமை காலையிலைதான் போவா."

அவர்களுக்கு செய்த உதவிகளைச் சுட்டிக்காட்ட வேண்டுமென்று என் அடிமனம் எண்ணியதோ என்னவோ கறுப்பையாவின் உடல் நிலைபற்றியும் மருத்துவ ஆலோசனைப்படி நடக்கிறாரா என்பதையும் விசாரிக்கிறேன்.

"நீங்க பண்டாரவளைக்கு மாறி வந்தது நல்லதாப் போச்சு பழையபடி குடிக்கத்தொடங்கிவிட்டார். மூணு மாசத்துக்கு முன்னாடி இரண்டு வாரமா ஆஸ்பத்திரியிலை ரொம்ப வருத்தமா இருந்தாரு - பண்டாரவளை டி. எம். ஓ சொல்லிப்புட்டார் ஈரல் கெட்டுப்போச்சு ஒரு துளி கூடக் குடிக்ககூடாதென்னு. நீங்க புத்தி சொன்னாக் கேப்பாரு."

சிறிது நேரம் மௌனம் நிலவுகிறது. மரகதம் ஏதோ யோசித்துக் கொண்டிருப்பது போல் தெரிகிறது.

"உட்கார்ந்திருங்க... டீ போட்டுக்கொண்டு வாறன்" என்று கூறிக்கொண்டு குசினிப்பக்கம் போகிறாள்.

இந்தத் தனிமையில் எனது எண்ணம் எங்கெல்லாமோ தாவுகிறது. என்மனதில் விசித்திரக் கற்பனைகள் தோன்றி மறைகின்றன. காலையில் என்னைக் கட்டாயம் வரும்படி அழைத்ததும் விழுந்து விழுந்து இப்போது என்னை உபசரிப்பதும் பழைய உறவினை பசுமையுடன் மீட்டி உயிர்பெறச்செய்யும் எத்தனிப்பின் எதிரொலியோ?

"இந்தாங்க, டீயைக் குடியுங்க" என்று கூறிக் கொண்டு மரகதம் அருகில் வருகிறாள்.

என் கண்கள் பல உணர்வுகளுடன் அவள் உடலை ஒட்டி மேய்கிறது.

"ரொம்ப நாளா அம்மாவையும் பிள்ளைகளையும் காணாதது ஒங்களுக்கு ஒரு மாதிரியா இருக்கும் ...... இல்லீங் களா ஐயா?" தலையை மட்டும் ஆட்டுகிறேன். அவள் கூறியதில் ஏதோ வேறு அர்த்தம் பொதிந்திருப்பது போல் எனக்குப்படுகிறது.

உணர்வு உக்கிரம் அடைகிறது. பண்டாரவளைக் குளிரிலும் என் உடல் வேர்த்துக் கொட்டுகிறது. நாவலப்பிட்டியில் அன்று நடந்த அந்த நிகழ்வின் தொட்டகுறை விட்டகுறை தொடர்ச்சிக்கு காலம் கனிந்து கட்டளையிடுகிறதோ? மரகதமும் என்னைப்போல மனப் போராட்டத்தில் சிக்கியிருக்கிறாளோ?.

நாவலப்பிட்டி 'கிளப்' பில் அன்று நண்பன் ஒருவன் கூறிய கருத்து எனக்கு நினைவுக்கு வருகிறது, "விருப்பம் இருந்தாலும் பெண் முதலில் கேட்கமாட்டாள். ஆண்கள் தான் முதலில் ஆரம்பிக்கவேண்டும்."

தற்கொலைப்படையின் அசாதாரணத் துணிவை எனக்குள் வலிந்து ஏற்படுத்திக்கொள்கிறேன். "மரகதம் இப்ப இங்க ஒருதரும் வரமாட்டினம் தானே ? உன் அறைக்குள்ள இருந்து கதைப்பம்" என் குரல் கிணற்றில் இருந்து ஒலிப்பது போல் கேட்கிறது.

"வேண்டாம் ஐயா! அம்மாவுக்கு நான் துரோகம் செய்யக்கூடாது . அந்த மகராசிக்குத் துரோகம் நெஞ்சிலை கூட நெனைக்கக் கூடாது"

நான் விக்கித்துப் போகிறேன். இப்படிப்பட்ட பதிலை நான் அவளிடம் இருந்து எதிர்பார்க்கவேயில்லை. அவளது முகத்தை நிமிர்ந்து பார்க்கத் திராணியற்று, குனிந்து குற்ற உணர்வுடன் குறுகிப்போய் நிற்கிறேன்.

"ஏன் ஐயா அம்மாவிலும் பார்க்க நான் அழகா? குற்றுயிராகத் துடித்துக்கொண்டிருந்த அந்த உணர்வு தொடர்ந்து வந்த சொல் அம்பால் செத்து மடிகிறது .

மரகதத்தை எதிர்கொண்டு நோக்காது எங்கோ பார்த்த வண்ணம் "நான் இருக்கிற வீட்டிலை என்னைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள். நான் போயிட்டு வாறன் " என்று சொல்லிக் கொண்டு அவளது பதிலை எதிர்பார்க்காமலேயே இருக்கையை விட்டு எழுந்து வாசலை நோக்கி வருகின்றேன்.

"ஐயா அடிக்கடி எங்க வூட்டுக்கு வந்து போங்க. ரொம்ப நாளைக்குப் பிறகு ஒங்களைச் சந்திச்சது எவ்வளவோ சந்தோஷமா இருக்கு. அவருக்கு குடிக்க வேணாமெண்டு புத்தி சொல்லுங்க. நீங்க சொன்னா கண்டிப்பா கேட்பார்."

மரகதம் என்னைப் பின்தொடர்ந்து வழி அனுப்ப வாசல்படி மட்டும் வருகிறாள்.

படிகளில் இறங்கிக்கொண்டிருக்கிறேன். 'காலையில் கருத்தாழம் மிக்கதாகத் தோன்றிய என் கட்டுரை மீளாய்வுக் குரியதா? மனிதனுக்கும் மிருகத்திற்கும் உடல் கூற்றுத் தொழிற் பாட்டில் ஒற்றுமையிருப்பினும், மானுட உறவு ஈடு இணையற்று உயர்ந்து நிற்கிறதே?'

படிகளில் ஏறும் போது தகர்ந்த கல் இப்போது என் கால்பட்டு இடம் பெயர, அடுத்த படியை மிதியாது தாண்டி தள்ளாட நான் நிலத்தில் விழாது பெரும் பிரயத்தனத்துடன் சமன் செய்து கொள்கிறேன். மரகதம் வெளி லயிற்றைப் போடுகிறாள். அவள் போட்ட வெளிச்சத்தில் நான் நிதானமாக நடக்கிறேன்.

~1991~

# புதிய பரிமாணம்.

"பொறளை, மருதானை, பிற்றகொட்டுவ, கொட்டுவ" நாரஹேன்பிட்டிய சந்தியில் கொண்டுவந்து நிறுத்தப்பட்டிருக்கும் 'பிறேவேட்' வானில் அழைப்பு என் சிந்தனையைக் கலைக்கிறது. வானுக்குள் புகுந்து ஒரு மூலையில் உட்கார்ந்து கொள்கிறேன். சூழலை மறந்து என் சிந்தனை தொடர்கிறது.

வேலைக்குச் செல்லும் மனைவி வந்து வாய்த்ததின் பலாபலன்களைப்பற்றி பல சந்தர்ப்பங்களில் நான் மீளாய்வு செய்வதுண்டு. கந்தோருக்குச் செல்லும் நாட்களில் மனைவி மாலதி பம்பரமாகச் சுழன்று சமைத்து, பாடசாலைக்கு மகன் பார்த்தீபனைப் புறப்படுத்தி, தானும் புறப்பட்டுச் செல்லும் பரபரப்பின் உச்சக் கட்டங்களில்..., மகள் கீதாவிற்கு திடீரென்று காய்ச்சல் ஏற்பட்டு வலிப்பு உண்டாகி வேலைக்காரப்பிள்ளை நாங்கள் வாழும் 'அன்டர்சன்' தொடர்மாடியில் அடுத்தவீட்டு அன்ரியின் துணையுடன் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றபோது, நான் சுகவீனமுற்றிருந்தபோது கந்தோரில் மிக முக்கியமான வேலையிருந்ததால் லீவு எடுக்கமுடியாது, அவளால் என்

அருகிலிருந்து கவனிக்க முடியாத இக்கட்டான சந்தர்ப்பத்தில்...... என் ஆய்வு பாதகமான முடிவுக்கு வருவதுண்டு. இன்று மனைவி வேலைக்குச் செல்வது நல்லதா என்ற பிரச்சனை மீளாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதிற்கான அடிப்படைக் காரணத்தை என்னால் பிரித்தெடுக்க முடியவில்லை.

நேற்றுப்பிற்பகல்தான் இந்த ஆய்வு ஆரம்பித்திருக்க வேண்டும். மாலதி கந்தோரிலிருந்து வீட்டுக்கு வந்ததும் வராததுமாக சொல்லிக்கொண்டே வந்தாள்.

"ஐயோ பாவம் இண்டைக்கு எங்கடை ஒவ்வீசிலை வேலை செய்யிற போய் அக்சிடன் மீற்பண்ணி சீறியஸ்....., அவன் போன மோட்டபைக் துண்டு துண்டாப் போச்சாம்...."

"யார் கமலதாசனா?" என்றேன் நான். எப்பொழுதும் அவனது பெயரை நான் பிழையாகத்தான் கூறுவதுண்டு. ஆனால் அவனைத்தான் குறிப்பிடுகின்றேன் என்பதை மனைவி உணர்ந்து விடுவாள். "ஓ பாவம் கமலநாதனுக்கு இன்னும் மயக்கம் தெளியவில்லையாம். ஒவ்விசிலை கேள்விப்பட்ட உடனே எல்லோரும் கொஸ்பிற்றலுக்குப் போட்டினம். நான் மட்டும்தான் போகேல்லை."

அவளது முகத்தில் அசதி பளிச்சென்று தெரிந்தது. 'ஹான்பேக்'கை ஒரு கதிரையில் வைத்துவிட்டு உட்கார்ந்து கொண்டு சொன்னாள், "எனக்குச் சுகமில்லை; இந்த மாதம் மோசமாயிருக்கு " எனக்குப்புரிந்துவிட்டது. மாதம் மாதம் அவளை வாட்டும் வருத்தம்தான் இன்று வந்துவிட்டது. மாலதி தொடர்கிறாள். "கமலநாதன் ஒரு வஞ்சகமில்லாத பெடியன். அவன் ஒவ்விசிலை இருந்தால் ஒரே கலகலப்பாக இருக்கும். பொஸ்கூட தங்கடை வீட்டிலை ஏதோ துக்கமான சங்கதி நடந்தமாதிரிக் கவலையாக இருக்கிறது எனறார். சுகயீனத்தாலை நான் நாளைக்கு லீவு போட்டிட்டு வந்திட்டன். வசதியிருந்தால் நீங்கள் ஒருக்கால் போய் பார்க்கிறியளே. அக்சிடன் வார்ட்டிலை அட்மிற்பண்ணியிருக்கு."

நான் ஒன்றுமே பேசவில்லை. கடைக்கண்களால் மாலதியைப் பார்த்துவிட்டு, முன்பு ஒருதடவை படித்து முடித்து விட்ட அன்றைய பத்திரிகையின் தலையங்கத்தை மீண்டும் படித்தேன்.

தலையைக் கைகளால் ஏந்தி சிறிது நேரம் ஏதோ யோசித்துக் கொண்டிருந்துவிட்டு, மாலதி குசினிக்குள் சென்றாள். சிறிது நேரத்திற்குப்பின் தேநீர்க்கோப்பையை என்னிடம் நீட்டிக்கொண்டே சொன்னாள். "கமலநாதனுக்கு இப்ப உணர்வு வந்திருக்குமோ தெரியவில்லை. ஆறுமணிக்கு முன்பு மயக்கம் தெளியாட்டால் கஷ்டம் தானாம்." நான் தேநீரை வாங்கியதும் அவள் கதிரையில் உட்கார்ந்து கொண்டே கெஞ்சுங்குரலில் என்னைக்கேட்டாள். "நாளைக்கு போய்ப் பார்க்க உங்களுக்கு நேரம் இருக்குமே." "அதை நாளைக்கு யோசிப்பம்" வேண்டா வெறுப்பு என்குரலில் தொனிப்பதுபோல் தெரிந்தது. நான் விளையாட்டில் ஈடுபட்டிருந்த பார்த்திபனை அன்றைய வீட்டுப் பாடத்தை பார்வையிடுவதற்காக அழைத்தேன். மாலதி வெளியே வெறித்துப்பார்த்தபடி எதனையோ யோசித்துக் கொண்டிருந்துவிட்டுப் படுக்கையறையை நோக்கிப்போனாள்.

சிறிது நேரத்திற்குப்பின் அடுத்த வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த கீதாவை வேலக்காரப்பிள்ளை தூக்கிக்கொண்டு வந்தாள். சாப்பாட்டு மேசையில் சாப்பாடு எதையும் காணாத கீதா "அம்மா" என்று வீரிட்டழுதாள். வழக்கமாக இரவில் ஏதாவது பலகாரம் சமைப்போம். ஆனால் இன்று மனைவியின் சுகயீனம் காரணமாகப் பாண்வாங்க மறந்துவிட்டேன். மனைவி படுக்கையை விட்டெழுந்து "ஏனப்பா பிட்டவிக்கிறதே"என்று கேட்டதும், சுய உணர்வு பெற்றவன் போல் எழுந்து சேர்ட்டை அணிந்துகொண்டு கடையை நோக்கிப் புறப்பட்டேன் . மாடிப்படிகளில் இறங்கும் பொழுது கமலநாதனை முதல் முதலில் நான் சந்தித்ததை அசை போட்டுக்கொண்டிருந்தேன்.

கந்தோரில் நடைபெறும் நிகழ்ச்சிகள், பிரச்சினைகள்

ஒன்றும் விடாது மனைவி எனக்குச் சொல்லுவாள். சிலவேளை களில் குழந்தைப்பிள்ளை போல சிறு பிரச்சினைகளுக்கு என்னிடம் தீர்வு கேட்பாள். வேலை செய்யும் ஒரு பெண்ணுக்கு இதற்கெல்லாம் தீர்வு காணக்கூடிய தைரியமும் ஆற்றலும் இருக்க வேண்டும் என்று நான் பல தடவைகள் கூறியதுண்டு. கமலநாதன் மாலதி வேலை செய்யும் கந்தோருக்கு மாற்றலாக வந்து சில மாதங்களாகத் தான் இருக்கும். அவன் கந்தோரில் கூறிய ஏதோ ஒருவிகடத்தைப்பற்றிச் சொல்லும்போதுதான் அவனைப்பற்றி முதற்தடவையாக மாலதி எனக்குச் சொன்னாள். சக ஊழியர்களுக்கு மிக ஒத்தாசையாக இருப்பதாவும், சுய நலமின்றி மற்றவர்களுக்கு உதவும் மனப்பான்மையுடைய இவனைப்போன்ற ஒருவனைத் தனது பதினைந்து வருடத் தொழில் வாழ்வில் சந்திக்கவில்லை என்றும் சொன்னாள்.

சென்ற மாதம் ஒரு நாட் காலையில் வழக்கம் போல மாலதி குசினி வேலையில் மூழ்கியிருந்தாள். யாரோ கதவு தட்டும் சத்தம் கேட்டதும், குசினிக்குள் விசிறி போன்ற யன்னலைச் சிறிது திறந்து பார்த்துவிட்டு, கதவைத் திறக்காது என்னை நோக்கி ஓடி வந்து, "என்னுடன் ஒவ்வீசிலை வேலை செய்யும் ஒருவர் வந்திருக்கிறார்." என்று மெல்லிய குரலில் சொல்லிவிட்டு அறைக்குள் புகுந்த விட்டாள். நானே எழுந்து சென்று கதவைத் திறந்தேன். வாட்டசாட்டமான ஒரு வாலிபன் டெனிம்ஜீன்ஸ் உடை, ஒரு இளம் பெண்ணின் முகமும் ஏதோ மையல் தரும் வசனம் பொறிக்கப்பட்ட 'ரீசேர்ட்', நவீன பாணியிலே தலைமுடி அலங்காரம், இடது கையிலே ஒரு வெள்ளி வளையம்

இவன் யாராக இருக்குமோ என நான் தடுமாற்ற மடைந்திருக்கும்போது, அழகாகப் புன்னகைத்தபடி கம்பீரமான குரலில் அவன் தன்னையே ஆங்கிலத்தில் அறிமுகம் செய்துகொண்டு எனது கைகளைக் குலுக்கினான்.

"நான் கமலநாதன் , நீங்கள் மிஸ்டர் மகாலிங்கம் தானே." நான் தலையை மட்டும் ஆட்டினேன். அவன் தானாக

உள்ளே வந்தான். நான் அவனை முன்மாடத்திலுள்ள நாற்காலியில் உட்காரும்படி கூறினேன். அவன் உட்கார்ந்து கொண்டு கூறினான், "இன்றைக்கு நான் அவசரமாக லீவு எடுக்க வேண்டும். முக்கியமான ஒரு பைலை எக்கவுண்டனிடம் கொடுக்கவேண்டும். எனது மேசைச் சாவியையும் கொடுத்து சில விபரங்களையும் மிஸ்ஸிஸ் மகாலிங்கத்திடம் சொல்லி விடவேண்டும்."

குசினிக்குள் வேலை செய்ததால் முகத்திலும் உடையிலும் படிந்திருந்த அழுக்கைப்போக்கிக் கொண்டு மாலதி அறைக்குள் இருந்து முன்மாடத்துக்கு வர 'ஹலோ மிஸிஸ் மகாலிங்கம் குட்மோணிங்" என்று கமலநாதன் மாலதியைப் பார்த்துக் கூறிவிட்டு, தமிழில் உரையாடலைத் தொடர்கிறான். அன்று அவன் கந்தோருக்குப் போகாததால் ஏற்படும் இழப்பை ஈடுசெய்வற்கு வேண்டியவற்றைக் கூறினான். அவனது தமிழ் உச்சரிப்பு கொழும்பைப்பிறப்பிடமாகக் கொண்டவன் என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டியது. மூலையில் புத்தகம் ஒன்றில் படம் பார்த்துக்கொண்டிருந்த கீதா வீட்டிற்கு வந்த புதிய முகத்தைப் பார்த்துக்கொண்டு என்னை நோக்கி ஓடிவந்தாள்.

கமலநாதன் நாற்காலியை விட்டெழுந்து வந்து கீதாவை இருகரங்களாலும் அள்ளி அணைத்தபடி "சரியா அம்மாவின்ரை பேஸ்கற்தான் பேபிக்கும் " என்று சொல்லிக்கொண்டு கீதாவை முத்தமிட்டான். கீதா முகத்தில் குழிவிழச்சிரித்தாள். மாலதி முகத்தில் புன்னகைத்தபடி என்னைக் கடைக்கண்களால் பார்த்துக்கொண்டிருந்தாள். கீதா நீண்டநாட்களாகப் பழக்கப்பட்ட மாமாவிடம் இருப்பதுபோல எந்தவிதமான குழப்பமும் இன்றி அவனது முகத்தைத் தடவியபடி இருந்தாள். மீண்டும் கீதாவை ஒரு தடவை முத்தமிட்டு விட்டு மாலதியிடம் அவளை நீட்டியபடி சொன்னான் "எனக்கு ரொம்ப வேலையிருக்கு நான் போயிற்று வரட்டுமா" மாலதி கமலநாதனிடம் வாங்கிய கீதாவை என்னிடம் நீட்டியபடி அவனை நோக்கிக்கொண்டு "ரீ குடிசிட்டுப் போங்கோ

இன்றைக்குத் தானே நீங்கள் எங்கள் வீட்டுக்கு முதல் தடவையாக வந்திருக்கீங்க" என்று சொல்லிவிட்டுக் குசினிக்குள் சென்றுவிடுகிறாள். கமலநாதன் நான் வேலை செய்யும் திணைக்களம், சேவை புரிந்த காலம் முதலியவற்றைக் கேட்டறிந்து கொள்கிறான். மாலதியிடமிருந்து தேநீர்க் கோப்பையைப் பெறும் பொழுது "மிஸ்ஸிஸ் மகா, உங்களுக்கு வீண் சிரமத்தைக் கொடுத்து விட்டேன்" என்கிறான். "இதில் என்ன சிரமம்" எனக் கூறிப்புன்னகைக்கிறாள் மாலதி. தேநீர் குடித்து முடிய காத்திருந்து தட்டை நீட்டி கோப்பையை மாலதி பெற்றதும் மீண்டும் அவளுக்கு நன்றி கூறிவிட்டு அவன் எழுந்திருந்து "மிஸ்டர் மகாலிங்கம் உங்களைச் சந்தித்ததில் எனக்கு மிக மகிழ்ச்சி" என்று ஆங்கிலத்தில் கூறிவிட்டு சப்பாத்து 'டக்டக்' எனச் சத்தமிட கம்பீரமான நடையுடன் வீட்டைவிட்டு வெளியேறினான். மாலதி எமது மேல் மாடி வீட்டு யன்னலின் ஊடாக கீதாவிற்கு மோட்ட சயிக்கிளில் போகும் மாமாவைக் காட்ட, எங்கோ பார்த்துக்கொண்டு விரைவாகச் செல்லும் மாமாவிற்கு கீதா 'டட்டா' காட்டிச்சிரித்தாள். மோட்ட சயிக்கிளின் இரைச்சல் பயங்கர ஒலியாக என்காதுகளில எதிரொலித்தது.

"பொறளை ........ மருதானை பிற்றக்கொட்டுவ, கொட்டுவ"

நேற்றிரவு மாலதி ஒரு துண்டுப்பாண் மட்டுமே சாப்பிட்டாள். வலி பொறுக்க முடியவில்லை எனப்பல முறை முனகிக் கொண்டாள். அந்த வலியிலும் கமலநாதனின் உடல் நிலை எப்படி இருக்குமோ என்ற ஆதங்கம். "ஏதாவது வித்தியாசம் என்றால் போன் பண்ணச்சொல்லி ஒவ்வீசிலை வேலை செய்யிற சிங்காரவேலரட்டைச் சொல்லி, பிளற்ஸ் எதிர்வீட்டு அங்கிளின்டை டெலிபோன் நம்பரும் கொடுத்தனான். இதுவரை ஒரு மெசேச்சும் வரேல்லை பாவம் எப்படியோ தெரியேல்லை" மாலதி பெருமூச்சு விட்டுக் கொண்டே சொன்னாள்.

இரவு முழுவதும் மாலதி கட்டிலில் புரண்டுகொண்டே யிருந்தாள். வலி பொறுக்க முடியாது இரண்டு டிஸ்பிறின்

விழுங்கியும் கூட அவளால் தூங்கமுடியவில்லை.

நடுச்சாமம் இருக்கலாம். நான் நல்ல நித்திரையில் ஆழ்ந்திருந்தேன். மாலதி என்னைத்தட்டி எழுப்பினாள். ஏதோ கனவில் விழித்தது போல் அதிர்ச்சியுடன் படுக்கையை விட்டெழுந்த போது "யாரோ கதவைத்தட்டுகினம். ஆஸ்பத் திரியிலை இருந்து டெலிபோன் 'மேசேஜ்' ஏதாவது வந்ததோ தெரியேல்லை. எதிர்வீட்டு அங்கிள்தான் தட்டுகிறாரோ."

நான் எழுந்து சென்று கதவைத் திறந்தேன். யாருமேயில்லை பூனைகள் ஓடியதால் ஏற்பட்ட சத்தம்தான் கதவுதட்டும் சத்தமாக மாலதிக்குக் கேட்டிருக்கிறது. என்னைக் கண்டதும் பூனை ஒன்று ஓடி மறைந்து விட்டது. கொழுத்த கடுவன் பூனை ஒன்று தீப்பந்தம் போன்ற கண்களால் என்னை உற்று நோக்கியபடி படிகளின் பக்கங்களுக்குப் போட்ட கம்பிகளில் உட்கார்ந்திருந்தது. என் கோபத்தை கதவை அடைத்துச் சாத்துவதன் மூலம் வெளிப்படுத்திவிட்டு தூக்கம் குழம்பிய அசதியுடன் படுக்கைக்குத் திரும்பியபடி சொன்னேன். "அதைப்பற்றியே யோசித்துக் கொண்டிருந்தால் கதவு தட்டிற மாதிரித்தான் கேட்கும்; சாகிறவனைத் தடுக்கேலுமே" மாலதி ஏதோ தவறு செய்தவள் போல மன்னிப்புக்கோரும் முகபாவனை யுடன் என்னையே பார்த்துக்கொண்டிருந்தாள். நான் அதனைக் கவனிக்காதது போல மறுபக்கம் திரும்பிப் படுத்துவிடுகிறேன். இன்று காலையில் மாலதி நான் கந்தோருக்குப் புறப்பட்டு வரும்பொழுது வழியனுப்புவதற்கு மாடிப்படிவரை வந்தாள். நான் அவளின் இடுப்பில் உட்கார்ந்திருந்த கீதாவிற்கு 'டட்டா' சொல்ல, இடைமறித்து "நேரமிருந்தால் ஒருக்கால் மறக்காமல் ஆஸ் பத்திரிக்குப் போய் கமலநாதனைப் பார்த்துக்கொண்டு வாருங்கோ. எங்கடை ஒவ்வீசிலை எல்லாரும் பார்த்திட்டினம் நான் மட்டும்தான் போகேல்லை நீங்கள் போய்ப் பார்த்தால் போதும். "அக்சிடன் வாட்டு, ஏழாங் கட்டில்" என்கிறாள் மாலதி. அவளின் முகத்தில் தெரியும் உணர்வுகளைப் பார்க்க விரும்பாதது போல, கீதா காட்டும் டட்டாவிற்கு எனது முகத்தைத்திருப்பாது கைகளை

மட்டும் காட்டிவிட்டு இரண்டாவது மாடிக்கீழ்ப்படிகளில் மறைந்து விட்டேன்.

வான் கனத்தைச் சந்திக்கு அருகில் உள்ள தரிப்பில் போய் நிற்கிறது. கனத்தை மயானத்தை வெறித்துப் பார்க்கிறேன்.

"குட்மோனிங் மிஸ்டர் மகாலிங்கம்" ஒரு பெண்ணின் குரல் கேட்டு திடுக்குற்று திரும்பிப்பார்த்துக் கொண்டு பதிலுக்கு வந்தனம் தெரிவிக்கிறேன். அது திருமதி சில்வா தமயந்தி. அவள் என் இருக்கையைத் தாண்டி பின்னுக்குச் செல்கிறாள். அவளை, "குட்மோனிங் என்று சொல்லி ஒரு நடுத்தர வயதினர் வரவேற்று, யாரோ ஒருவர் இறங்கியதால் ஏற்பட்ட வெற்றிடத்தில் தனக்கு அருகில் உட்காரும்படி சொல்கிறார். தமயந்தி முன் ஆசனத்திலிருந்த என்னிடம் கந்தோர் புதினம், குடும்ப சுகம் எல்லாவற்றையும் சுருக்கமாகக் கேட்டறிந்து கொள்கிறாள். இவள் நான் வேலை செய்யும் கந்தோரில் ஏழு எட்டு வருடங்கள் டைப்பிஸ்ட்டாக வேலை செய்தவள். பழகும் விதத்தால் எல்லோரிடமும் நல்லெண்ணத்தைப் பெற்றவள். கந்தோரில் அவள் இருக்கும் பொழுது ஒரே கலகலப்பாக இருக்கும். உயர்ந்த அதிகாரிகளுக்கு அவளிடமிருந்த அபிமானம், அளித்த சான்றிதழ்கள், ஒரு தடவை பார்த்தால் இன்னும் ஒரு தடவை பார்க்கத்தூண்டும் அவளது தோற்றம் ஆகியவற்றின் துணையால் பிரபல கம்பனி ஒன்றுக்கு 'டிறக்ட'ரின் பிறைவேற் 'செக்கிறற்ரறி' பதவி கிடைத்துப்போனதால் ஏற்பட்ட 'டைப்பிஸ்ட்' வெற்றிடம் வேறு ஒரு பெண்ணால் நிரப்பப்பட்டாலும் இன்றும் தமயந்தியின் பிரிவு நிரப்ப முடியாத வெற்றிடமாகவே இருக்கின்றது.

தமயந்தி 'மிஸ்டர் மகா' என்று குழைவாக என்னை அழைப்பாள். தனது பிறந்ததினத்திற்கு கந்தோரில் வேலை செய்யும் எல்லோருக்கும் வீட்டிலிருந்து கேக்கும் வேறு பட்சணங்களும் கொண்டு வந்து தன் கையால் பரிமாறி மகிழ்வாள். நான் யாழ்ப்பாணம் செல்லும் பொழுது அழகாகப் பரிந்து கேட்டு ஒவ்வொரு சீசனுக்கும் கறுத்தக்கொழும்பான்

மாம்பழம் அன்பளிப்பாகப் பெற்றுவிடுவாள்.

நான் பழைய நினைவுகள் அசைபோட பின் ஆசனத்தைத் திரும்பிப் பார்க்கிறேன். தமயந்தியும் அருகில் உள்ளவரும் அவள் வேலை செய்யும் கம்பனியின் அலுவலகத்தில் உள்ள பிரச்சினைபற்றி பேசிக் கொண்டிருக்கிறார்கள். அருகில் இருப்பவர் அவள் வேலை செய்யும் கம்பனியின் அக்கவுண்டன் போல் தெரிகிறது. தமயந்தி தன்னை மறந்து அவளது நேரடி அதிகாரியான 'டிறக்டரின்' சுபாவம், நோக்கு, போக்கு முதலியவற்றைப்பற்றி சொல்லிக்கொண்டிருந்தாள். அவள் ஒரு கட்டத்தில்,

"I never discuss my office problems with my husband, He does not know where I stand"

நான் மாலதியை தமயந்தியுடன் ஒப்பு நோக்குகிறேன். மாலதி கந்தோரில் நடைபெறும் எந்தச் சின்னவிடயம் என்றாலும் எனக்குக் கூறாமல் விடமாட்டாள். எந்தப்பிரச்சனையின் தீர்வுக்கும் எனது அபிப்பிராயத்திற்கே முக்கியத்துவம் கொடுப்பாள். இங்கே தமயந்தி அலுவலகத்தில் நடைபெறுவன ஒன்றையுமே தனது கணவனுக்குச் சொல்வதில்லையாம். இவளது இன்றைய நிலைபற்றி ஒன்றுமே அவருக்குத்தெரியாதாம்.

தமயந்தியின் கணவன் சில்வாவை எனக்கு நன்றாகத் தெரியும். தமயந்தி சுகயீனமுற்று ஆஸ்பத்திரியில் இருந்தபோது இரு தடவைகள் சென்று பார்த்தேன். அப்போதுதான் என்னுடன் பழக்கமாகி, பழகுவதற்கு இனிய சுபாவமுடைய சில்வாவை பலதடவை 'போலா'வில் சந்தித்து உரையாடியிருக்கிறேன். என் சிந்தனை தெளிவடைகிறது. 'மாலதி, கமலநாதனின் உடல்நிலைப்பற்றி அக்கறை கொள்வது தவறா? வேலை செய்யும் பெண்களுக்கு வேலை செய்யும் இடம் ஒரு சமூகம். சக ஆண் உத்தியோகத்தர்களுடன் பழக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படத்தான் செய்யும். மானிடப்பரிவின் தாக்கம் அந்தச் சமூகத்தில் இருக்காதா?

அலுவலகத்தில் வெறும் தொழில் மட்டும்தான் செய்வதா அப்படி என்றால் இவர்களுக்கும் 'கொம்பியூட்டருக்கும் என்ன வித்தியாசம்'

வான் புஞ்சி பொறளைச் சந்தியில் நிற்கிறது. நான் கோட்டைக்குத் தான் 'ரிக்கற்' எடுத்திருந்தேன். இப்பொழுதே கமலநாதனை ஆஸ்பத்திரியில் சென்று பார்த்து விட்டுப்போகலாம் என்ற முடிவுடன் தமயந்திக்கு 'செறியோ' சொல்லிவிட்டு வானிலிருந்து கீழே இறங்கி ஆஸ்பத்திரியை நோக்கி நடக்கிறேன்.

புஞ்சி பொறளையிலிருந்து ஆஸ்பத்திரிக்குச் செல்லும் நெடுஞ்சாலை என் கண்முன் விரிந்து கிடக்கிறது.

- 1983.

# போகாத இடந்தனிலே.......... !

கதவு தட்டப்படும் சத்தம் தொடர்ந்து ஒலிக்கிறது.

"டக்....டக்....டக்"

மல்லிகாவிற்கு எழுந்திருக்க முடியவில்லை. படுக்கையை விட்டு மெல்ல எழுந்துவந்து முன் வாசலிற்கு வருகிறாள். கதவு தட்டப்படும் சத்தம் நிறுத்தப்பட்டு, குரல் ஒலிக்கிறது. "மம தமாய் சைமன். தொற அறிண்ட" கதவைத் திறக்கும்படி கேட்பது சைமன் தான் என்பதை அவனது தடித்த குரல் உறுதியாக்குகிறது, கதவைத் திறவாமலே மல்லிகா பதில் சொல்கிறாள். "மட்ட சனிப்பனே" சைமன் குடித்திருக்கிறான். குடித்து விட்டுத்தான் அவன் அங்குவருவான். அவன் அவளது வாடிக்கைக்காரர்களில் ஒருத்தன்.

மல்லிகாவிற்குத் தனது தொழிலில் வெறுப்பு ஏற்படுகிறது இன்று மட்டுமல்ல வாந்தி கண்ட நாட்தொட்டு அவளது நிலை இப்படித்தான். முன்பெல்லாம் சீவி முடித்துத் தன்னை அழகாக அலங்கரித்து, முகத்திலே பவுடர் அப்பி, சென்ற் 'பெவியூம்' ஆகினயவற்றின் நறுமணம் வீசப் புதுமணப் பெண்போல் சதா காட்சி கொடுப்பாள். இன்று அவளுக்கு ஆண் இனத்தின் மேலேயே வெறுப்பு வருகிறது. 'சீ...... தூ! மிருகவெறி கொண்ட மனிதர்கள்' மல்லிகாவிற்கு வாய் கசந்து வாந்தி வருகிறது.

தனது கடந்த காலத்தைக் கவலையுடன் அசை போடுகிறாள். இத்தொழிலில் ஈடுபட்டது அவளுக்கு ஒரு விபத்துப் போன்று ஏற்பட்டது. ஒரு தேயிலைத் தோட்டத்திலுள்ள தொழிலாளியின் எட்டு வயதுச் சிறுமியான மல்லிகா, அந்தத் தோட்டத்து மாஸ்டரின் மூலம் கொழும்புக்கு பிரபல முதலாளியும் சிறு கம்பனி ஒன்றில் ஏகபோக உரிமையாளனுமான முத்துலிங்கம் வீட்டிற்கு வேலைக்காரியாக வந்தாள். கொழும்புக்கு வந்த அவள் ஒரு வருட காலமாகத் தனது ஆயாவையும் அப்பாவையும் பார்க்கப் போகவில்லை. அவளது பெற்றோர் உற்றோர் வசித்து வந்த லயம் பயங்கர மண்சரிவொன்றில் அமுங்கி வாசம் செய்த அனைவரும் உயிருடன் புதையுண்ட துயரச் செய்தி கேட்டுத் தோட்டத்திற்கு வந்தவள் யாருமற்ற அனாதையாக மீண்டும் கொழும்புக்குத் திரும்பினாள்.

அதற்குப் பின்பு அவள் மலையகத்தையே பார்க்கவில்லை முத்துலிங்கம் ஐயா வீட்டில் மல்லிகாவின் வாழ்வு பத்தாண்டு களாகத் தேர்போலச் சென்றது. பிள்ளைகளைப் பராமரித்தல், சமையல், பங்களாவை அழகாக வைத்திருத்தல் எல்லாவற்றிலும் அவள் கெட்டிக்காரி. எதனையும் கள்ளங்கபடமின்றி பொறுப் புணர்ச்சியுடன் செய்வாள்.

முத்துலிங்கம் வீட்டிற்கு வரும் எந்த விருந்தாளியும் மல்லிகாவைப் பாராட்டாமல் செல்வதில்லை. இயற்கையாக வசீகரமான முகவெட்டும் செம்மாம்பழச் சிவப்பும் உடைய மல்லிகாவின் உடல் முத்துலிங்கத்தின் பங்களாவின் மிஞ்சும் உணவால் நேர்த்தியாக வளர்ந்திருந்தது. அவளது உடல் உறுப்புக்கள் உருண்டு திரண்டிருந்தன. பார்ப்பவர்களை இன்னும் ஒருதடவை பார்க்கத் தூண்டும் கவர்ச்சி அவளிடம் காணப்பட்டது. மொட்டு மலராகியதும் அவள் வாழ்வில் வேதனை புகுந்தது.

அன்று முத்துலிங்கம் வீட்டில் ஒரு பெரிய ‘பார்ட்டி’ அவர் புதிதாகத் தொடங்கும் வியாபாரம் ஒன்றை முன்னிட்டு ஏற்பாடாகியது . எல்லாம் சிறப்பாக நடந்து முடிந்தன. ஓடியாடி

வேலை செய்ததால் ஓரே அயர்வு மல்லிகாவிற்கு. வழக்கம் போல ஸ்டோர் அறையின் மூலையில் சோர்வுடன் படுத்திருந்த மல்லிகாவை யாரோ தட்டி எழுப்பினார்கள். விழித்துப் பார்த்தாள். முத்துலிங்க ஐயா முன் நின்றார். மல்லிகாவிற்கு ஒரு கணம் தான் காணுவது கனவோ என்று கூடத்தோன்றியது. அது கனவல்ல அதிகாரத்துடனும் அதட்டலுடனும் பேசும் ஐயாதான் அவள் முன் இரந்து நின்றார். அவளுக்கு ஓரே குழப்பமாக இருந்தது.

அவர் நேரத்தைப் போக்காது அந்தக் காரியத்தைச் சாதிக்கத் தொடங்கினார்."ஐயோ சாமி என்னை விட்டுடுங்க" அவளது மன்றாட்டுக்குரல் அமுங்கித் தேய்ந்தது. மல்லிகாவிற்கு நடந்து முடிந்தது உணர்வு இழந்த மயக்க நிலையில் நடந்தது போலிருந்தது. "இது யாருக்கும் தெரியக்கூடாது." ஐயா கட்டளையிட்டுவிட்டுப் போய்விட்டார். இந்தப் பயங்கர அனுபவத்தின் பின் மல்லிகாவின் மூளையில் ஓரே குழப்பம். தீர்வுகாண முடியாத பிரச்சினையின் தாக்கம். பிற உலகில் போலித்தன்மையாலும் பகட்டாலும் அவளுக்கு வாழ்க்கைமேல் ஒரு வித வெறுப்பு எற்பட்டது.

ஆனால் தனது கடமைகளை முடுக்கி விட்ட சூத்திரப்பாவை போலச் செய்தாள். முத்துலிங்கத்தின் ஓயாத தொல்லை - தீராத விளையாட்டு - தொடர்ந்தது. மல்லிகாவிற்கு இயற்கையாக எழும் உணர்ச்சிகளின் வெளிப்பாடு புரிந்ததும் புரியாமலும் இருந்தன. ஒரு நாட்காலையில் மல்லிகாவிற்கு தலைவலியும் குமட்டலும் ஏற்பட்டது. அடுத்த சில நாட்களுக்குள் வாந்தியும் ஏற்பட்டது. அம்மா எதையும் நிதானிக்கும் கெட்டிக்காரி. மல்லிகா, அம்மா கேட்ட குறுக்குக் கேள்விகளுக்கு எந்தவிதமான பதிலையும் சொல்லாது விக்கி விக்கி அழுதாள். அம்மா அவளைக் குடும்ப டக்ரிடம் அனுப்பினாள். டக்ரிடம் உண்மையைச் சொன்னாள் மல்லிகா. ஆனால் ஆள் யார் என்று அவரிடம் சொல்லவில்லை. அம்மா ரொம்பக் கண்டிப்பானவள்.

செய்தியைக்கேட்டவுடன் கம்பனிக்கே ஐயாவுக்குத் தொலைபேசியில் சொல்லிவிட்டாள். 'இந்த மூதேவியை இனி ஒரு கணமும் வீட்டில் வைத்திருக்க கூடாது" வீட்டிற்கு வந்த ஐயா அழுதுகொண்டிருந்த 'மூதேவி'யின் முகத்தைப்பாராது சொன்னார். 'நான் முன்பே சந்தேகித்தேன். பால் கொணடு வரும் சிறிசேனாவுடன், இவளுக்கு என்ன பேச்சு' மல்லிகா பெருங்குரல் எடுத்து அழுதாள். ஆனால் ஒன்றுமே பேசவில்லை.

அடுத்த நாளே வேலை நீக்கம் செய்யப்பட்டு மருதானையிலுள்ள மேரி என்ற ஒரு முதுமைப்பெண் வீட்டிற்கு அனுப்பப்பட்டாள். பத்தாண்டுகளாக உண்டு உறங்கிய வீட்டையும் எடுத்து வளர்த்த முத்துலிங்கத்தின் பிள்ளைகளையும் விட்டுப்பிரியும் பொழுது மல்லிகாவிற்குத் தாங்க முடியாத வேதனையாக இருந்தது. ஆனால் மனதில் ஏதோ ஒரு வைராக்கியம் எதிர் நீச்சலடித்தது. ஏதோ மன்னிக்க முடியாத குற்றம் செய்த குற்றவாளியைப் போல வீட்டை விட்டுப்போனாள். அவள் வீட்டை விட்டுப் புறப்படும் போது யாருமே முகங் கொடுத்துப் பேசவில்லை. அங்கு தோட்ட வேலை செய்யும் கோபால் மட்டும் மல்லிகாவின் பிரிவைத் தாங்காது விம்மி விம்மி அழுதான். மல்லிகாவிற்கு புதிய இடத்தில் நல்ல உபசாரம் நடந்தது. அந்த வீட்டில் மேரி மட்டும் தான் இருந்தாள். அவள் பேச்சில் அன்பும் ஆதரவும் அனுபவ முதிர்ச்சியும் இருந்தன. இருவருக்கும் சமைத்து உண்பதைத்தவிர வேறு ஒரு வேலையும் இருக்கவில்லை. அடிக்கடி மேரி வெளியில் போய் வருவாள். அங்கு வந்த ஒருவாரத்துள் மேரியின் புத்திமதியின் பேரில் மல்லிகாவின் வயிற்றில் வளர்ந்த சிசு ஏதோவெல்லாம் செய்து சிதைக்கப்பட்டது. மேரி,மல்லிகாவின் உடல் நிலையில் மட்டுமல்ல வெளியலங்காரத்திலும் கவனம் செலுத்தினாள். அநாதையாக ஆதரவற்றிருந்த தன் மேல் மேரி சொரியும் அன்பில் திக்கு முக்காடிய மல்லிகா அவளுக்குத்தான் என்ன பிரதியுபகாரம் செய்வது என ஏங்கினாள். வெளுத்ததெல்லாம் பால் என்றிருந்த உலகத்தின் ஒரு பகுதியை மேரியின் அனுபவ பேச்சுடன் தனக்கு

நடந்த நிகழ்ச்சியின் பின்னணியில் ஓரளவுக்கு விளங்கிக் கொண்டாள். அன்று ஒரு நாள் மேரிதனது வாழ்க்கை வரலாற்றைக் கூறிவிட்டு கேட்ட அந்தக் கேள்வி மல்லிகாவை அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

அன்று அவள் பதில் கூறவில்லை. மேரி தனது அசாதாரணத் திறமையால் ஒரு வாரத்துள் தனது விருப்பத்திற்கு உடன்படச் செய்துவிட்டாள். ஆனால் மல்லிகா பரிபூரணச் சம்மதத்துடன் உடன்படவில்லை என்பதை இருவரும் உணர்ந்தனர். காலஞ்செல்லச் செல்ல எல்லாம் சரிவரும் என மேரி நம்பினாள். 'நானும் உப்பிடித்தானே'.

மல்லிகா விலைமகளானாள். அவளுக்கு நல்ல கிராக்கி. ஓயாத உழைப்பு. 'நைற்கிளப்' வெளி நாட்டு உல்லாசப் பிரயாணிகளின் விடுதிக்குத் திடீர் அழைப்பு. மேரிக்கு நல்ல வருமானம். அவள் தனது தொழிலுடன் இரண்டறக் கலந்துவிட்டாள். நான்காண்டுகள் மல்லிகாவின் வாழ்க்கை பிரச்சினையின்றி ஓடியது.

ஆறு மாதங்களுக்கு முன்பு தான் அது நடந்தது. ஒரு நாள் மேரி கார்விபத்தொன்றில் சிக்கி ஸ்தலத்தில் மரணமானாள். அவளின் பேரிழப்பைத் தாங்கமாட்டாது மல்லிகா தொழிலை விட்டுப் பல நாட்களாக வீட்டுக்குள் முடங்கிக் கிடந்தாள். அப்பொழுது தன்னலநோக்குடன் சிலர் அவளைத் தேடி வந்தனர்.

தனக்குச் சுகமில்லை எனவும், தொழிலை விட்டு விட்டதாகவும் அவர்களிடம் சொன்னாள். அவர்கள் எவருமே அவளது சொந்த வாழ்க்கையைப் பற்றிச் சிரத்தையுடன் எதுவுமே கேட்கவில்லை. மீண்டும் யாருமற்ற அநாதை போலானாள். அந்த நாட்களில் எள்ளளவும் எவ்வித தன்னல நோக்கமின்றி முத்துலிங்கம் வீட்டில் தோட்டவேலை செய்யும் கோபால் அடிக்கடி வந்து சுகம் விசாரிப்பான். மேரி உயிருடன் இருந்த பொழுதும் மல்லிகாவின் தூரத்து உறவினன் என்று சொல்லி நல்ல நாள்

பெருநாளைக்கு அங்கு வந்து உரையாடிச்செல்வான். முத்துலிங்கம் வீட்டில் வேலை செய்த நாட்தொட்டே கோபால் மேல் மல்லிகாவுக்கு ஒரு இனம் புரியாத பற்றும் பாசமும் யாரோ ஒரு பெரிய மனிதர் வீட்டில வேலைக்காரியாக இருந்த கன்னிப்பெண் ஒருத்தி அந்தப் பெரிய மனிதனின் சின்னத்தனத்தால் பெற்றெடுத்த குழந்தைதான் கோபால். அவனைப் பிரசவித்த பொழுது இரத்தப் பெருக்கத்தால் அந்தத் தாய் இறந்து போனாள்.

'பாவம் கோபாலும் என்னைப் போல் ஒரு அநாதை தானே'

மல்லிகாவை வாடிக்கையாளர்கள் விட்டு வைக்கவில்லை. மேலும் வீட்டுக்கு வாடகை கட்டவும் பலவிதச் செலவுகளுக்கும் பணம் வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக வயிற்றுப் பசி இருக்கிறதே! 'இனி எங்கு போய் எந்தத் தொழிலைச் செய் வது ?' மேரி அடிக்கடி சொல்வதை அவள் எண்ணிப் பார்த்தாள். இந்தத் தொழிலில் உழைக்கக் கூடிய வயதில் உழைத்து விடவேண்டும். மல்லிகாவின் தொழில் தொடர்ந்தது.

மல்லிகாவிற்கு வயிறு குமட்டி ஓங்காளமாகிறது. மெல்ல எழுந்து வந்த வீட்டின் பின் புறத்துக் கோடியில் வாந்தி எடுக்கிறாள். இப்பொழுது மல்லிகாவிற்குத் தனது இன்றைய நிலைக்குரிய காரணக்கருவை எண்ணிப்பார்ப்பதில் ஒரு வித சுகம் தெரிகிறது.

அன்று மத்தியானம், மதிய உணவுக்குப்பின் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். மல்லிகாவுக்கு யாரோ கதவைத் தட்டிக்கொண்டே 'அன்ரி' என்று அழைப்பது கேட்டது, மெல்லிய இனிய குரல்.அவளுக்கு ஒரே அதிர்ச்சியாக இருந்தது கதவைத்திறந்தாள். அடுத்த வீட்டுச் சிறுமி ஏழு அல்லது எட்டு வயதிருக்கும். சிரித்த முகத்துடன் நின்றாள். 'அன்ரி' அக்குழந்தையின் அன்பான அழைப்பில் மல்லிகா கட்டுண்டாள். அவளை யாரும் இதுவரை இப்படி அழைத்ததில்லை.

'அன்ரியோடை பேசவேணுமெண்டு எனக்கு ரொம்ப நாளாக ஆசை. நீங்க ரொம்ப கூடாதாம் . அப்பாவும் அம்மாவும், ஒங்க கூடப் பேசக்கூடாதாம். பேசினால் அடிப்பாங்களாம்."

மல்லிகா பெருமூச்சுடன் அந்தக் குழந்தையை வாரி அணைத்து, ஆரத்தழுவி, இருகன்னங்களிலும் மாறி மாறி முத்தமிட்டாள். இது காலவரை யாரிடமும் பெறாத ஸ்பரிஸத்தை அக்குழந்தையின் தழுவலில் உணர்ந்தாள். 'அது கடதாசிப்பூ. இது இயற்கையான பூ.'

"தங்கச்சி ஒங்க பேரென்ன?"

"கவிதா"

"ஒங்களைப் போல ஒங்க பெயரும் நல்ல அழகு" மல்லிகா கவிதாவின் கன்னத்தைச் செல்லமாகத் தட்டி கவிதாவை நாற்காலியில் உட்கார வைத்தாள்.

"அன்ரி, நீங்களும் நல்ல அழகு . அன்ரி நீங்க மட்டும் தான் இங்கு தனிய இருக்கிறீங்களா? மாமா ஒருத்தரும் இல்லையா? பாவம் அன்ரி ஒங்களுக்கு காய்ச்சல் வந்தா ஆரு மருந்து தருவாங்க ? எங்க அம்மாவுக்கு காய்ச்சல் வந்தா அப்பா மருந்து கொடுப்பாங்க."

மல்லிகா கவிதாவின் சிறகடிக்கும் கண்களையும் , முக பாவனையையும் பார்த்துக்கொண்டே ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். அவளையறியாமலே பெரு மூச்சுக்கள் உதிர்ந்தன.

"அன்ரி நான் போகனும். நான் அப்புறம் ஒரு நாளைக்கு வாறன்."

"அன்ரி நான் போயிட்டு வாறன். 'டட்டா, டட்டா" கவிதா போய்விட்டாள். மல்லிகா கவிதாவின் பெற்றோரை மட்டுமல்ல தெருவில் போகும் கணவன் மனைவிமார்களைக் கண்டு ஆற்றாமை ததும்பும் பெருமூச்சு விடுவாள். நொண்டி ஒருவன

அழகு நடையுடன் செல்லும் கால்களை ஏக்கத்துடன் பார்ப்பது போல், மணமான பெண்களின் கழுத்திலே தொங்கும் தாலிகளைப் பார்ப்பாள். கவிதா வந்து போன அன்றே அவளின் மனத்தின் அடியிலே கருக்கொண்டிருந்த ஓர் எண்ணம் விசுவரூபம் எடுத்தது. அன்றே அவள் தீர்மானித்து விட்டாள். 'எனக்கென்று ஒரு குழந்தை வேண்டும் . நான்காண்டுகளாக உபயோகித்து வந்த கருத்தடை மாத்திரையை அன்றுடன் நிறுத்திக் கொண்டாள். அதன் பெறுபேறு தான் இன்று...... !

"டக் ! டக் ! டக்!" மீண்டும் கதவு தட்டப்படும் சத்தம் கேட்கிறது. 'சைமன் தான் மறுபடியும் வந்து விட்டானோ?' மல்லிகாவிற்குக் கோபமும் வெறுப்பும் எல்லை மீற ஒன்றுமே பேசவில்லை. "மல்லிகா நான் கோபால்....... கதவைத் திற" மல்லிகா குரலை நிதானிக்கிறாள். ஆம், மெல்லிய குரல் அவனுடையதுதான். அவள் கதவைத் திறந்து கோபாலை உள்ளே விட்டு மீண்டும் தாழிடுகிறாள். மல்லிகா கோபாலை நாற்காலியில் உட்காரும்படி சொல்லிவிட்டு, "என்ன கோபால் இந்த நேரம்?

"மல்லிகா நான் கொழும்பு ஊரை விட்டு நாளை போகிறேன். அதுதான் ஒனக்குச் சொல்லிவிட்டுப் போகலாம் என்று வந்தேன்." அவள் அதிர்ச்சியுடன் கேட்டாள், "ஏன் முத்துலிங்க ஐயாவுடன் ஏதாவது பிரச்சினையா?"

'அது பெரிய கதை மல்லிகா . அவர் என்னைப் பேசின பேச்சு எனக்கு ரொம்பவும் நெஞ்சுக்கு வருத்தமாயிருக்கு மல்லிகா. ஐயா என்னைக் கேட்டார்.... ஏய் நீ தகப்பன் ஆர் என்று தெரியாமல் வம்பிலை பிறந்த குணத்தைக் காட்டி விட்டாய் . அப்படி எண்டு' அதனைச் சொல்லும் பொழுது கோபாலின் குரலே தளதளத்தது. 'கோபால் நீ கொழும்பைவிட்டு எங்கு போகப்போகிறாய்? "

'பண்டாரவளை டவுண் ரோட்டுக் கூட்டிறதுக்கு ஆள் தேவை என்று பேப்பரிலே போட்டிருந்தாங்க. அப்பிளிக்கேஸன்

போட்டன். வரச் சொல்லிக் காயிதம் வந்திருக்குது. நன்றி கெட்ட இந்த மனுஷன் வூட்டிலை வேலை செய்யிறதிலும் பார்க்க தெருக்கூட்டிக் கிட்டு நிம்மதியாகக் கஞ்சி குடிச்சிக்கலாம்."

சற்று நேரம் அமைதி நிலவியது. பீடி ஒன்றைப் பற்றவைத்துக் கொண்டே கோபால் கேட்டான். "மல்லிகா ஒனக்குச் சுகமில்லையா"

அவள் தனது தற்பொழுதைய நிலையை விபரமாகச் சொன்னாள். அவன் ஒன்றுமே பேசாது எல்லாவற்றையும் கவனமாகக் கேட்டு விட்டு ஏதொ சிந்தனையுடன் "மல்லிகா, நீ ரொம்பக் களைச்சிருக்கா நான் கடைக்குப் போய் தேத்தண்ணி வாங்கிட்டு வாறன்."

அவன் பதில் ஒன்றையும் எதிர்பாரது புறப்பட்டு விட்டான். மல்லிகா படுக்கையில் போய் விழுகிறாள். முத்துலிங்கம் கோபாலின் மனத்தை புண்படுத்தியதை எண்ணும் பொழுது அவளுக்கு அவர் மேல் கோபம் கோபமாக வருகிறது. 'நம்மளது இந்த நிலைக்கு அவங்க தானே காரணம். அன்று அந்த சிசுவை நான் வவுத்திலே வளர்த்துப் பெற்றெடுத்தால் அதுவும் தகப்பன் யார் என்று தெரியாத கொழந்தையாகத்தானே இருந்திருக்கும்.. இப்படிப்பட்ட தவறுகளை அவங்களே செஞ்சு கொண்டு பாவம் கோபாலை இப்படிப்பேசலாமா? ஒலகத்தை எப்படியெல்லாம் ஏமாற்றுறாங்க.' மல்லிகாவுக்குத் தனது தொழில்மேல் என்றுமில்லாதவாறு வெறுப்பு வருகிறது. "நம்ம வவுத்திலை வளரும் கொழந்தையும் தகப்பன் யார் என்று தெரியாதது என்ற அவச்சொல் கேட்கும் அபாக்கியவதியாகத்தானே இருக்கப் போகுது". மல்லிகா கண்ணாடி மேசையில் கிடக்கும் லக்ரோகலமின், சென்ற் ,பெவியூம், ஒடிக்கொலன், வனிஸ்ஸிங் கிறீம், பவுடர், ஹெயர் ஓயில், ஐரெக்ஸ் , கியூரெக்ஸ், பலரகப்பொட்டு, செயற்கைக் கொண்டை எல்லாவற்றையும் வெறுப்புடன் பார்க்கிறாள்.

'இந்தத் தொழிலை விட்டு கோபாலுடன் நானும் பண்டாரவளைக்கு ஓடிவிட்டால் என்ன?' மல்லிகாவின் இந்த யோசனை வாதப்பிரதிவாதங்களுக்குள் உட்பட்டுத் திடமான தீர்மானமாகிறது. 'கோபால் வரட்டும். கேட்டுப்பார்ப்போம்.' கோபால் வந்து விட்டான் கமகம என்று வாசம் அடிக்கும் கறியுடன் ஒரு இடியப்பப் பார்சலும், ஒரு போத்தலில் தேநீரும் கொண்டு வந்தான்.

"மல்லிகா இந்தா சாப்பிடு"

"கோபால் நான் ஒன்று கேட்கப் போறன். நீ நல்லா யோசிச்சுப் பதில் சொல்லு."

"என்ன மல்லிகா?" ஆவல் ததும்பக்கேட்டான் கோபால்.

"கோபால், இந்த லோகத்திலை ஒன்னைவிட எம்மேலை சிரத்தையுடையவங்க யாருமேயில்லை. நான் இந்தத் தொழிலுக்கு எப்படித்தள்ளப்பட்டேன் என்கிறது ஒனக்கு நல்லாத் தெரியும் . கோபால் நான் உண்மையைச் சொல்லுகிறேன். இந்தத்தொழிலை எவ்வளவு வெறுப்புடன் செய்யிறன் தெரியுமா." அவள் விம்மி விம்மி அழுகிறாள்.

"அழாதே மல்லிகா, எனக்கு ஒன்னைப்பத்தி ரொம்பக் கவலை?"

"கோபால் நான் இந்தத் தொழிலை எப்ப ஒதறித் தள்ளுவேன் என்று எண்ணிக்கிட்டிருக்கேன். ஆனால் எனக்கு ஒரு மாத்து வழி இன்னும் கிடைக்கேல்லை. இன்று தான் ஒன்னு தோண்ணிச்சி கோபால். நான் ஒங்கூட பண்டார வளைக்கு வாறன்." மல்லிகா இதனைக்கூறிவிட்டு வளர்த்த நாய் போல கோபாலின் முகத்தைப் பரிவுடன் நோக்குகிறாள்.

"மல்லிகா, மிச்சம் அருமையான் யோசினை இது. நானும் கடைக்குப் போற நேரம் வழி முழுவதும் இப்படி யோசிச்சன். ஆனா எப்படி ஒன்னைக் கேப்பது. நீ ஒரு வாசற்கூட்டியின்

மனைவியாக வர எப்படி ஒத்துக்கொள்வாய் இப்படி யோசிச்சன்."

"கோபால் உண்மையாகவா ?" அவள் தாயின் குரல் கேட்ட குழந்தை போலக் குதூகலித்தாள்.

"கோபால் நானு வாசற் கூட்டியின் மனைவியாக மட்டுமல்ல, நானும் வாசற்கூட்டியே வயிறு வளர்க்கப்போகிறேன். என்னையே நான் ஏமாத்தி வாழ்கிற இந்தத் தொழிலை விட அது எவ்வளவு ஒசத்தி."

"மல்லிகா, ஒனது வவுத்திலை வளர்கிற கொழந்தை என்னைப்போல் தகப்பன் இல்லாத கொழந்தையாக இருக்காது. அதுக்கு அப்பாவாக நான் இருக்கேன்." கோபாலின் குரல் கம்முகிறது.

இருவரும் சிரிக்கின்றனர்.

மல்லிகாவின் சிரிப்பில் கடதாசிப்பூவின் பகட்டிருக் கவில்லை; அன்று இதழ் விரித்த பூவின் அழகு மலர்கிறது.

~1976~

# மனிதம் உருமாற்றும் உறவுகள்!

வாடைக்காற்றுப் பெயர்ந்து விட்டது. யாழ்ப்பாணத்தில் மழைக்காலம் ஆரம்பித்துவிட்டது. வாழ்வை நோக்கி வரண்டு கிடந்த நிலமடந்தை தாகம் தீர்த்த புதுப்பொலிவுடன் சிலிர்த்துக் கொண்டு தொடர்ந்து வானம் நீட்டும் மழைக்கரங்களின் அணைப்பிலே மயங்கிக் கிடக்கிறாள். எங்கும் புழுதியை அடக்கி வைத்த ஈரவாடை மூக்கைத் துளைக்கிறது.

புகையிலைத் தோட்டக்காரரின் நிலம் பக்குவப்படத் தொடங்கிவிட்டது. தோட்டத்தரைகளைக் கொத்திப் பசளையிட்டுப் பண்படுத்துவதில் தோட்டக்காரர்கள் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறார் கள். வானம் பார்த்த வயல் பூமி 'றைக்டர்களால்' உழுப்பட்டு விதைப்பிற்குத் தயாராகின்றது.

வள்ளிநாயகி மழைத்தூவானம் பட்டுச் சேறடித்துக் கொண்டிருந்த மாடுகளையும் ஆடுகளையும் காலாறக் கொஞ்ச நேரம் அவிழ்த்து அடிவளவுக்குள் விட்டபின் மாட்டுக் கொட்டிலைத் துப்புரவாக்கிக் கொண்டிருக்கிறாள். தோட்டத்தில் குவிக்கப் பட்டிருக்கும் எருவை அள்ளித்தரைக்குப் பரவுவதற்கு அப்புவுக்கு ஒத்தாசை செய்ய அம்மா தோட்டத்திற்குப் போய்விட்டாள். நெடுநேரமாகக் கரைந்து கொண்டிருக்கும் காகமொன்று வேப்பமரத்திலிருந்து பூவரச மரத்துக்குப் பறந்து மீண்டும் கரைகிறது.

'இண்டைக்குத் தம்பியெண்டை காயிதம் கட்டாயம் வரும் அப்பு எண்டை அடுக்குக்கு என்ன எழுதியிருக்கானோ தெரியாது' கிடுகுகளால் அடைத்து உக்கிப்போன தெருவேலியின் ஈவுகளினூடாகத் தெருவைப் பார்க்கிறாள் வள்ளிநாயகி. நேற்றுக் கல்யாணம் செய்த, வள்ளிநாயகியை விடப் பத்து வயதுக்கு

மேல் குறைந்த பெண் ஒருத்தி மாப்பிள்ளையுடன் பிள்ளையார் கோவிலுக்குப் போவதைப் பெருமூச்சுடன் பார்க்கிறாள். 'எனக்கு ஏன் இந்த நிலை...... ?'

அவள், அடுத்த வீட்டுச்சின்னம்மா விடுப்புப் பார்த்ததைக் கவனிக்கவில்லை.

வள்ளி நாயகிக்கு இப்போது வயது முப்பத்திரண்டைத் தாண்டிவிட்டது. பெற்றோரின் உத்தியோக மாப்பிளைதேடும் முயற்சியில் பல ஆண்டுகள் கழிந்துவிட்டன. சாதி பார்த்ததால் சில் இடங்களைப் புறக்கணித்தனர். சாதகம் பொருந்தாததால் சில சம்பந்தங்கள் கைவிடப்பட்டன. சீதனத்தில் பல கலியாணப் பேச்சுக்கள் முறிந்தன.

வள்ளி நாயகியின் தம்பி எட்டாம் வகுப்புப் படிக்கும் பொழுது ஆரம்பித்த மாப்பிள்ளை தேடும் படலம் இன்று அவன் பட்டதாரியாகி உத்தியோகம் பார்க்கத் தொடங்கியபின்பும் தொடர்கிறது.

அவளுக்கு வயது கூடவே பிரச்சினை சிக்கலாகி விற்க முடியாத பொருளைப் போலாகிவிட்டாள். இன்று வள்ளிநாயகியும் தம்பியும் சோடியாகக் கல்யாணச் சந்தையிலே நிறுத்தப்பட்டிருக் கிறார்கள்.

புளியடி வேலுப்பிள்ளை வீட்டு மாற்றுச் சம்பந்தம் பற்றித் தம்பிக்கு எழுதிய கடிதத்தின் பதிலையே அப்புவும் அம்மாவும் ஆவலுடன் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

வானம் கறுத்து மழைக்கோலம் கொள்கிறது. வீட்டிற்கு வந்ததும் வராததுமாக வள்ளிநாயகியின் தாய் பொன்னம்மா கேட்கிறாள். "பிள்ளை, தம்பி இண்டைக்கு காயிதம் போட்டவனோ?"

"இல்லை அம்மா, இண்டைக்கு தபால்காரன் எங்கடை தெருவாலை இன்னும் போகவில்லை. இந்த மழை ஊரொத்த மழைபோலக்கிடக்கு! ரெயில் இண்டைக்குப் பிந்திப் போச்சு

போல" என்று சொல்லிக்கொண்டே வள்ளிநாயகி தனது வேலையில் ஈடுபடுகிறாள்.

"காகம் ஒண்டு பறந்து கரையிது. என்ன கொண்டாட்டத்துக்கோ தெரியாது "என்கிறாள் பொன்னம்மா சலிப்புடன்.

வள்ளி நாயகி அவிழ்த்துவிட்ட ஆட்டுக்குட்டி வேலிப் பொட்டுக் குள்ளால் சென்று அடுத்த வீட்டுச் சின்னம்மாவின் முற்றத்தில் வைக்கப்பட்டிருந்த மாங்கன்றைச் சுற்றியுள்ள காவோலையைப் பிய்த்துக்கொண்டு உட்சென்று கடித்துவிட்டது.

ஆட்டுக்குட்டி பொட்டுக்குள்ளால் மான் கத்துக் கத்திக்கொண்டு கால் ஒன்றை உயர்த்தியபடி ஓடி வருகிறது. அதனைத் துரத்திக்கொண்டு பொட்டுவரையும் வந்த சின்னம்மா சத்தமாகப் பேசுகிறாள். "ஆட்டை அவிழ்த்து விட்டிட்டுத் தெருவிலை என்னடி பார்த்துக்கொண்டு நிக்கிறாய். பின்னையென்ன குமரை நேரகாலத்தோடை கரை சேர்க்கோணும். குமர் முத்தி குரங்கு பத்திவிட்டால் அப்பிடித்தானே செய்யுங்கள்"

மழைபெய்ய ஆரம்பித்துவிட்டது.

சின்னம்மாவின் கடுஞ்சொற்கள் வள்ளிநாயகியின் காதுகளுடன் வந்து மோதிப் பெரும் வேதனையை உண்டாக்கு கிறது. பொன்னம்மாவிற்குக் கடும் கோபத்தை மூட்டுகிறது.

ஆட்டுக்குட்டியைக் கட்டியணைத்து காலைத்தடவிக் கொண்டிருக்கும் வள்ளிநாயகிக்குக்கிட்டச் சென்று அதனைப் பார்த்தபடி பொன்னம்மா, சின்னம்மாவுக்கு கேட்கும்படி சத்தமாகச் சொல்லுகிறாள் "பாவம் வாயில்லாச்சீவன். இரக்கமென்று ஒண்டு இருந்தால் தானே... பிள்ளை குட்டிகளைப் பெத்து வளர்த்தால் தானே தெரியும்."

"என்னடி, என்னை மலடி எண்டு சாடை பேசிறியோடி உன்னைப் போல பண்டியள் மாதிரி வதவதவெண்டு பெத்துத் தள்ளுறதோடி"

'ஊர்ச்சனங்கள் உவவை தாடகை என்று சொல்லுறது

சரிதான். சும்மாயிருந்த எங்களை வலியச் சண்டைக்கு இழுக்கிறாவே' என்று நினைத்துக்கொண்டு அடிபட்ட ஆட்டுக்குட்டியை மாட்டுக்கொட்டிலுக்குள் தூக்கிச் செல்கிறாள் வள்ளிநாயகி.

"உப்பிடிக்கொத்த இரக்க சிந்தை இல்லாதாக்களுக்குக் கடவுள் பிள்ளையைக் கொடுப்பாரே"

"என்னடி தோறை சீலம் பாயாய் கிடந்த உங்களுக்கு இப்ப பெருமை வந்திட்டுதோடி.... கண்டறியாத ஒரு உத்தியோகம் மோனுக்கு வந்தாப்போல துள்ளிக் குதிக்கிறாயடி..... நான் மலடிதான்ரி உன்னைப் போல புளியடி வேலுப்பிள்ளையை வைச்சிருக்கிற மாதிரியோடி,....?"

பலமாகத் தூறும் மழையிலும் வேலிக்கு அந்தப் பக்கத்தில் சீலையைத் தூக்கிக்கட்டிக்கொண்டு, தலைவிரி கோலமாகத் தாடகை போலவே காட்சி தருகிறாள் சின்னம்மா.

"எடி பொறுக்கி என்னடி சொன்னனி ..... உன்ரை வாயில் புத்தெல்லோடி எழும்பப்போகுது... உன்ரை சீத்துவக்கேடு எனக்குத் தெரியாதெண்டு நெச்சியோடி கலியாணம் கட்ட முந்தி கீழ்சாதிப்பொடியனோடை கலைபட்டதை மறந்து போட்டியோடி பரத்தை" பலமாகக் கத்துகிறாள் பொன்னம்மா.

இடி முழக்கத்துடன் மழை சோனாவாரியாகப் பெய்கிறது.

சின்னம்மாவுக்கு உடுத்திருந்த சீலை உரிந்து விழுவது போலிருக்கிறது.

"எடியே.... நீ நாசமாய் போவாயடி ....." என்று அடித்தொண்டையால் கத்திகொண்டு மண்ணை அள்ளி வேலிக்கு மேலால் வீசித்திட்டுறாள் சின்னம்மா.

வசைபுராணம் எல்லை தப்புவதைப் பொறுக்காத வள்ளிநாயகி தாயின் கையைப்பிடித்த வண்ணம் "அம்மா நீ உள்ளுக்குவாணை .... உந்த மனுசின்ரை குணம் தெரியுந்தானே

நீ ஏன் கதை குடுத்தனி....

"எடி குமரி என்ன சொன்னனி...... உந்த வாயாலதானே ஒரு வாழ்வு கிடைக்காமல் சீரழிகிறாய்."

"அயலட்டைக்கை ஒண்டுக்கை ஒண்டு எண்டு பாக்கிறன்.... நீ எல்லாரோடையும் ஏறுப்படுறாயடி எனக்கு வாயிலை வருகுது..." எப்படியோ தாயை இழுத்துக்கொண்டு குசினிக்குள் செல்கிறாள் வள்ளிநாயகி.

வேலிப்பக்கமாக காறித்துப்பும் சத்தம் கேட்கிறது.

"குட்டி மாமா வந்திட்டார் சமா கூடப்போகுது!" என்று வள்ளிநாயகி தாய்க்குச் சொல்கிறாள்.

சின்னம்மா புருஷனைக் கண்டதும் ஒப்பாரி வைத்து ஒரு பாட்டம் அழுது தீர்த்துவிட்டு ஏதோ சொல்கிறாள்.

வெறிக்குட்டியர் தொடங்கிவிட்டார்.

அப்பொழுது மாடுகள் அழுது கேட்கிறது. "அப்பு வாறார் போலை கிடக்கு......!" என்று வள்ளிநாயகி சொல்கிறாள்.

விறாந்தையில் உடலைச் சரித்துக்கொண்டு பொன்னையா மனைவி வாசிக்கும் குற்றப்பத்திரத்தை ஒன்றுமே சொல்லாது கேட்டுக்கொண்டிருக்கிறார்.

"எழும்புங்கோவன் அடைக்கோழிமாதிரி மசிந்துதிக்கொண்டு நிக்கிறியள்....... வெட்கம் ரோசம் இல்லையே. அவளும் அவனும் கேக்கிற கேள்வி. அவன் மூக்கு முட்டக் குடிச்சுப்போட்டு அமர் கொள்ளுறதை ஒருக்கால் காது குடுத்துக் கேட்டுப் பாருங்கோவன்...."

வெளியே மழை குறைந்தாலும் தூவானம் குறைய வில்லை.

வெறிக்குட்டியர் குரல் உரமாக ஒலிக்கிறது "டேய் பொன்னையா இஞ்சால வாடா உன்ரை பெண்டிலை அடக்கி

வைக்கிறியோ அல்லாட்டி நான் அடக்கி வைக்கட்டோ..?"

"புருஷன் வர ஒண்டைப்பத்தாக்கி மூட்டிக் குடுக்கிறாள்..... கேட்டியளே வெறிக்குட்டியற்றை கதையை உவள் சண்டாளி, முதல்ல ஒரு கதை சொன்னாள் ...... என்ரை வாயால் சொல்லேலாம கிடக்கு அவளைப்போல மற்றவையளும் தொடுப்பு வைச்சிருக்கினம் எண்ட நினைப்புப்போல கிடக்கு அவளுக்கு. பாவம் புளியடி வேலுப்பிள்ளை அண்ணை ஒரு வஞ்சகமில்லாத சீவன். உடன்பிறப்பு மாதிரி எங்களோடை வாரப்பாடு ! அவளுக்குக் கண்ணுக்கை குத்துது..... இப்ப சொல்லிற கதையைக் கேளுங்கோவன்..... என்ன வாயை மூடிக் கொண்டிருக்கியள்....."

"என்னப்பா அயலட்டைக்கை இருந்து, ஒரு ஆத்திரம் அந்தரத்துக்கு ஓடிவாறது அவள்தானே...... அவள் சின்னம்மாவைப் பற்றி உனக்குத்தெரியுந்தானே..... அவள் பேசினால் நீ காதில விழாத மாதிரி இருக்கிறதுக்கென்ன."

"என்ன உப்புப்புளி இல்லாத கதை கதைக்கிறியள். அவ ராசாத்தி பேச, நாங்கள் ஊமைமாதிரிக் கேட்டுக் கொண்டிருக் கிறதே. நீங்கள் நெடுகவும் உப்பிடித்தானே. அதுதானே தரகர்மார் தலைப்பாக்கட்ட புழுத்த விலைக்குப் போயிலை விக்கிறனிங்கள்"

வள்ளிநாயகி காகம் பறந்து கரைந்ததின் பலாபலனை எண்ணிப்பார்க்கிறாள்.

அடுத்த வீட்டில் குட்டியர் மனைவிக்குச் சொல்கிறார். "கொட்டைப் பெட்டிக்கை காசு கிடந்தால் ஒரு ஐஞ்சு ரூபாத்தாறியே. குருசாமியின்ரை கடைக்கு ஒருக்கால் போட்டு வாறன். உவன் பொட்டையன் பொன்னையா பேசாமல் கிடக் கிறான். உதுக்குள்ளை ஏதோ கிடக்கு. எல்லாத்துக்கும் நான் வாறன். இண்டைக்கு ரெண்டில ஒரு முடிவு எடுக்கோணும்"

"இந்தாருங்கோ மழை வரப்போகுது. சில்லறையில்லை பத்து ரூபாத்தான் கிடக்கு."

"மழை வாறதுக்கிடையில் சுணங்காமல் ஓடிவாருங்கோ இஞ்சாருங்கோ நாளைக்கு உந்தக்கடப்பை அடைச்சுப் போடோணும். உவள் வீட்டுக் கொண்டாட்டமும் உறவும் வேண்டாம்......"

வாடைக்காற்று கார்கொண்ட மேகத்தை கீழ் வானத்தி லிருந்து மேலே எடுத்து வருகிறது.

* * * * * * * *

ஆண்டு அனுபவித்து வாழ்ந்து கெட்ட பொன்னம்மாவின் சிறியதாய்க் கிழவி செத்துவிட்டாள்.

லண்டனில் என்ஜினியர் வேலைசெய்யும் ஒரே மகன்'மம்மியின்' 'வியூனற'லுக்கு நான்கு நாட்களுக்குப் பின்பு வருகை தந்திருக்கிறான்.

செத்த வீட்டிற்குப் புதிதாக யாரும் நெருங்கிய உறவினர்கள் வந்துவிட்டால் பெண்கள் ஓடிச்சென்று, அவரது காலைப்பிடித்து அழுவது வழக்கம். பொன்னம்மா முன் சென்று அவனது காலில் தலையை அடித்து ஒப்பாரி வைக்கிறாள். சீமையிலிருந்து வந்த என்ஜியர் முன் ஒப்பாரி வைக்கக் கூச்சப்பட்டோ என்னவோ யாரும் முன்வரவில்லை. சின்னம்மா மனம் பொறுக்காது எழுந்து வந்து பொன்னம்மாவின் கழுத்தைக் கட்டிபிடித்து ஒப்பாரி வைக்கிறாள்.

"என்னைப் பெத்த ராசா.....

ஆசை அம்மாவின் கண்களில் முளிக்கவில்லை....

கைக்கடன் செய்யவில்லை...

பக்கத்தே இருக்கவில்லை..

பசுவின் பால் வார்க்கவில்லை..."

வள்ளி நாயகிக்கு புளியடி வேலுப்பிள்ளை வீட்டில் கல்யாணப் பேச்சு ஒப்பேறிவிட்டது.

பல்லாண்டுகாலமாகக் கையெடுத்த தெய்வங்களுக்கு வைத்த நேர்த்திக்கடனை நிறைவேற்றுகிறாள் பொன்னம்மா.

அன்று அவ்வூர்ப் பிள்ளையார் கோவிலுக்கு ஆயிரம் மோதகம் அவித்து அபிஷேகம் நடைபெறுகிறது.

கோயிலடியால் வந்த பொன்னம்மா உறவினர்களுக்கு பனையோலைப் பெட்டியில் மோதகம் அனுப்புகிறாள்.

சின்னம்மாவுக்கு மோதகம் அனுப்பாமல் விடப் பொன்னமம்மாவுக்கு மனம் ஒப்பவில்லை."இக்கணம் என்ன செய்யிறாள் தெரியாது. திருப்பி அனுப்புவாளோ" என்ற ஐயுறவுடன் கொடுத்தனுப்புகிறாள்.திரும்பிவரும் ஓலைப்பெட்டி கனமாகவே இருந்தது. ஆதங்கத்துடன் வள்ளிநாயகி பெட்டியைத்திறந்து பார்க்கிறாள். "வெறும் பெட்டி அனுப்பக்கூடாதெண்டு சின்னம்மா மாமி எங்களுக்குத் தங்கடை வீட்டு மரத்திலை காய்ச்ச நல்ல கறுத்தக் கொழும்பான் மாம்பழம் அனுப்பி வைச்சிருக்கிறா......."

எல்லோரும் ஆச்சரியத்தில் ஆழ்கின்றனர்.

* * * * * *

இன்று வள்ளி நாயகிக்குத் திருமணம்.

பொன்னையா வீடு கல்யாண வீடாகக் காட்சி தருகிறது! மகளுக்கும் மகனுக்கும் ஒரே நாளில் கல்யாணம் நடைபெறுவதால் ஊருக்கெல்லாம் சொல்லி வெகு சிறப்பாக நடத்துகிறார்.

தாலி கட்டு பகல் பதினொன்றரை மணிக்கு. பன்னிரெண்டு மணிக்கெல்லாம் கல்யாண வீட்டிற்கு வருகை தந்தவர்களது மத்தியானப் பசியாற்ற சபை நடத்த வேண்டும்.

கல்யாண வீட்டில் சமையல் நடக்கும் பகுதி மிகவும் கலகலப்பாக இருக்கிறது.

காய்கறி வெட்டுதல். தேங்காய் துருவுதல், அடுப்பில்

வைத்து இறக்குதல்...... இத்தியாதி வேலைகளில் பெண்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். சின்னம்மா பம்பரமாகச் சுழன்று துரிதமாக இயங்குகிறாள். எல்லாமே அவள் மேற்பார்வையில் மெருகேறு கிறது.

சின்னம்மா, பொன்னம்மாவின் காதடியில் தனது வாயை நெருங்கவைத்து ஏதோ செய்தி சொல்கிறாள். பொன்னம்மா தலையை ஆட்டிவிட்டு அச்செய்தியை பொன்னையாவிடம் எடுத்துச்சொல்கிறாள்.

பொன்னையா கிணற்றடிப்பக்கமாக, அடுப்புக்கள் மூட்டிக்கிடாரங்கள் ஏற்றப்பட்டுள்ள கொட்டிலுக்குள் போய் சோறு ஆக்குவதற்குப் பொறுப்பாக இருந்த குடிமக்களில் ஒருவனான கிட்டினனிடம் இன்னும் ஒரு கிடாரம் அரிசி போடவேண்டுமென்று கட்டளையிடுகிறார்.

'சின்னம்மா காரியக்காரிதான்' பொன்னையா மானசீக மாகப் பாராட்டுகிறார்.

பெரிய அறையில் மணமகள் வள்ளிநாயகிக்குச் சோடனை நடைபெறுகின்றது.

அந்த அறைக்குள் ஏதோ அலுவலாகப் போன சின்னம்மா அழகாக அலங்கரிக்கப்பட்டிருக்கும் வள்ளிநாயகியை உச்சி யிருந்து உள்ளங்கால்வரையும் பார்க்கிறாள். இனம்புரியாத பற்றுணர்வு அவளைப் பற்றுகிறது.

சின்னம்மாவின் மனிதாபிமான ஆத்மா பேசுகிறது 'பாவம், இவ்வளவு நாளும் மூலைக்கையிருந்து பெருமூச்சு விட்ட குமர் ஒன்று இண்டைக்கு கரைசேருது'.

மணப்பெண்ணான வள்ளிநாயகி நிலைக் கண்ணாடி யினூடக சின்னம்மா மாமியைப் பார்த்து முகமலரப் புன்னகை க்கிறாள்.

~1975~

# நூலாசிரியர் பற்றி....

| | | |
|---|---|---|
| முழுப்பெயர் | :- | கந்தையா சதாசிவம் |
| பிறந்த திகதி | :- | 20. 03. 1942. |
| பிறப்பிடம் | :- | புற்றளை, புலோலி |
| தொழில | :- | வைத்திய அதிகாரி (R. M.O) டயராபா மருந்தகம், பண்டாரவளை. |
| எழுத்துத்துறை | :- | பிரவேசம் 1961ல். முதற்கதை 'புதுவாழ்வு' - 'இலக்கிய ரசிகர் குழு' அகில இலங்கை ரீதியில் நடத்திய சிறுகதைப்போட்டியில் பரிசு பெற்றது. |

நூல்கள் :-

(1) யுகப்பிரவேசம் (சிறுகதைத் தொகுப்பு - 1973)
(2) நாணயம் (நாவல் - 1980)
(3) ஓர் அடிமையின் விலங்கு அறுகிறது (சிறுகதைத் தொகுப்பு-1982)
(4) மூட்டத்தினுள்ளே.. (நாவல் - 1983)
(5) ஒருநாட்பேர் (மலையகச் சிறுகதைத்தொகுப்பு-'95)

கௌரவ விருதுகள்:-

'இலக்கிய வித்தகன்' 1991ல் தேசிய தமிழ்சாகித்திய விழாவில் இந்துகலாசார அமைச்சு கௌரவித்து அளித்த விருது.

'இலக்கியச் செம்மல்' 1991ல் ஊவாமகாண கலாசார அமைச்சு நடத்திய சாகித்திய விழாவில் கௌரவித்து அளிக்கப்பட்ட விருது.

பரிசுகள்:-

அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற சிறுகதைப் போட்டிகளில் மூன்று தடவைகள் முதற்பரிசு/தங்கப் பதக்கம் பெற்றுள்ளமை.

நாணயம்:-

1980ல் வெளிவந்த சிறந்த நாவலுக்கான அரசின் தேசிய சாகித்திய மண்டலப் பரிசு.

'ஓர் அடிமையின் விலங்கு அறுகிறது'

1982ல் வர்த்தகக் கப்பற்றொழில் அமைச்சு மும்மொழி களிலும் நடத்திய இலக்கியப் போட்டியில் தமிழில் அதிசிறந்த படைப்புக்கான பரிசு.

மூட்டத்தினுள்ளே:-

1977ல் 'வீரகேசரி' நடத்திய பிரதேச நாவல் போட்டியில் மலையக நாவலுக்கான முதற்பரிசு.

1983ல் சிறந்த நாவலுக்கான அரசின் தேசிய சாகித்திய மண்டலப் பரிசு.



புலோலியூர் க. சதாசிவத்தின் மனித நேயமும் அதனை ஏனையோர் இடத்தும் வளர்ப் பதற்குத் தமது எழுத்துப் பயன்பட வேண்டு மென்பதில் அவர் காட்டும் கரிசனையும், அவரது தமிழ் நடையின் தெளிவும் பாராட்டத் தக்கவை.

இந்நாட்டு வாழ்வைச் சீர்குலைக்கும் பிரச்சினை களின்பால் ஆசிரியரின் கவனம் சென்று இருக்கிறது. அமைதியாகவும் அன்னியோன்னிய மாகவும் வாழும் அபிலாசை கொண்ட எல்லா இனங்களையும் சேர்ந்த மக்களின்பால் அவருக்குண்டான ஆர்வமும் பரிவும்மதிப்பும் வெளிப்படுகின்றன.

மக்கள் யாவரும் மண்ணில் நல்ல வண்ணம் வாழவேண்டும் என்ற உணர்வினால் உந்தப்பட்ட எழுத்தாற்றல் கொண்ட புலோலியூர் சதாசிவம், புரிந்துணர்வை வளர்க்க இலக்கியத்தை ஊடகமாகக் கொள்கிறார். மனித நேய நடத்தைகளை ஊன்றி அவதானிக்கும் ஆற்றல் இவருக்கு நிறைய உண்டு.

பேராசிரியர் சி. தில்லைநாதன்
தமிழ்த்துறைத் தலைவர்
பேராதனைப் பல்கலைக்கழகம்

***

Writer Dr. K. Sathasivam is a Social analyst, representing facts in the form of feelings and emotions efficently. He possesses a unique style of expression.

Prof S. Chandrasegeran
Faculty of Education
University of Colombo.